பட்டப்பின் படிப்புக்கல்வி டிப்புளோமாப் பாடநெறி

# தமிழ் மொழி கற்பித்தல் முறைகள்

பகுதி 1

ஆசிரியர் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி
# கற்பித்தல் முறைகள்

பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

பக்கம்

முதலாம் அத்தியாயம்

மொழியின் இயல்புகளும் அதன் தொழிற்பாடுகளும் .... 03

இரண்டாம் அத்தியாயம்

பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பித்தல்
கற்றல் நோக்கங்கள் .................................................. 19

மூன்றாம் அத்தியாயம்

அடிப்படை மொழித் திறன்களின் விருத்தி ................. 37

நான்காம் அத்தியாயம்

வாசிக்கக் கற்பித்தல் .................................................. 61

ஐந்தாம் அத்தியாயம்

மொழி கற்பித்தற்குப் பயன்படுத்தக் கூடிய
பல்வேறு வளங்கள் .................................................. 81

© தேசிய கல்வி நிறுவகம்
கருத்தரங்கு 1 : 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அத்தியாயம்
# மொழியின் இயல்புகளும் அதன் தொழிற்பாடுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

பக்கம்

1.0 அறிமுகம் ........ 05

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 06

3.0 முற்சோதனை ........ 06

4.0 மொழியின் இயல்புகளும் அதன் செயற்பாடுகளும் ........ 07

4.1 மொழியின் வரைவிலக்கணமும் அதன் இயல்புகளும் ........ 07

4.2 பிள்ளை வளர்ச்சிப் பருவங்களும் மொழி எண்ணக்கரு விருத்தியும் ........ 08

4.3 மொழியின் தொழிற்பாடுகள் ........ 11

4.3.1 சிந்தனையின் கருவூலம் ........ 11

4.3.2 கருத்துப் பரிமாற்றம் ........ 12

4.3.3 பண்பாட்டுக்கல்வி ........ 13

4.3.4 அறிவைக் களஞ்சியப்படுத்தல் ........ 13

4.3.5 கற்றல் கற்பித்தல் ஊடகம் ........ 14

4.4 மொழி ஆசிரியர் பண்புகள் ........ 15

5.0 சாராம்சம் ........ 16

6.0 பிற்சோதனை ........ 17

7.0 விடைகள் ........ 17

8.0 ஒப்படைகள் ........ 18

9.0 உசாத்துணை நூல்கள் ........ 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

நமது இடைநிலைப் பாடசாலைகளிலே தாய்மொழி மூலம் கல்வியூட்டும் கொள்கை பல ஆண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றபோதிலும் தாய் மொழியைக் கற்பிக்கும் முறையிலே ஆக்கபூர்வமான மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு புகுத்தப்படாமை பெருங்குறைபாடாக இருந்து வந்துள்ளது. ஆங்கிலம் கல்விமொழியாக இருந்த காலத்தில் தாய் மொழியை ஒரு பாடமாகக் கற்பிப்பதற்குக் கையாளப்பட்ட கற்பித்தல் முறைகளையே தாய் மொழியை ஒரு பாடமாகக் கற்பிப்பதற்கும் பின்பற்றப்பட்டதெனலாம். தாய் மொழி ஏனைய பாடங்களையும் கற்பிப்பதற்கு ஓர் ஊடகமாக விளங்குவதால் அது தொடர்பான மாணாக்கர் முன்பு எதிர்பார்த்ததைவிடக் கூடிய தேர்ச்சிப் பெறவேண்டியவர்களாய் உள்ளனர். மாணாக்கர் தமது வீட்டு வாழ்க்கைகளிலும் பாடசாலை வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் தாய்மொழியைப் பல்வேறு சந்தர்ப்பங்களிலே பல்வேறு தேவைகட்காகப் பயன்படுத்துகின்றனர். தாம் எதனைச் சிந்திப்பதாக இருந்தாலும், எழுதுவதாக இருந்தாலும் பிறருடன் நேரடித் கருத்துத் தொடர்புகொள்வதனாலும் தாய்மொழியையே பெரிதும் பயன்படுத்துகின்றனர். எனவே மொழியின் பயன்பாட்டினைக் கருத்திற்கொண்டு அதுபற்றிய ஆழமான அறிவினை ஆரம்பநிலை வகுப்புகளிலும் இடைநிலை வகுப்புகளிலும் அளிக்கவேண்டியது இன்றியமையாததாகும். எனவே தாய்மொழியைக் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்களின் பணி மிக முக்கியமானது என்பது தெளிவாகின்றது. அவ்வாசிரியர்கள் மொழியின் இயல்புகளும் அதன் தொழிற்பாடுகளும் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. தாய்மொழிக் கல்வியின் நோக்கங்கள், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கற்கும் மாணாக்கர் எய்தவேண்டும் என எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் உபகரணங்களின் பயன்பாடு, மதிப்பீட்டுமுறைகள் முதலான இன்னோரன்ன விடயங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

இவ்வத்தியாயம் மொழியின் இயல்புகளும் அதன் தொழிற்பாடுகளும் பற்றிக் கூறுகின்றது. மொழியென்றால் என்ன? அதன் பிரதான அம்சங்கள் யாவை? மொழிக்கும் சிந்தனைக்குமிடையிலுள்ள தொடர்பு என்ன? பிள்ளை வளர்ச்சிக் கட்டங்களுக்கும் மொழி ஆற்றலுக்கு மிடையிலான தொடர்பு யாது? எண்ணக்கருக்களை உருவாக்கிக் கொள்வதில் மொழி ஓர் ஊடகமாக எவ்வாறு பயன்படுகிறது? விரைவான மாற்றங்கள் நாளுக்கு நாள் ஏற்பட்டுவரும் இக்காலகட்டத்திலே மொழியின் செயற்பாடுகள் என்ன? இன்றைய எமது பாடவிதானத்தில் மொழி எத்தகைய பங்கினை வகிக்கின்றது? தாய்மொழியைக் கற்பிக்க வேண்டிய ஓர் ஆசிரியருக்கு விசேடமாக இருக்கவேண்டிய இயல்புகள் என்ன? முதலான பல்வேறு வினாக்களுக்கு உரிய விடைகளை இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

1. மொழி என்பதற்கு வரைவிலக்கணம் கூறுதல்.

2. மொழியின் பிரதான இயல்புகளை வரையறை செய்தல்.

3. மொழிக்கும் சிந்தனைவிருத்திக்கும், மொழிக்கும் எண்ணக்கரு வாக்கத்திற்கும் இடையிலான தொடர்பினைக் கூறுதல்.

4. வெவ்வேறு பிள்ளை வளர்ச்சிக் கட்டங்களின்போது விருத்தி பெறும் மொழி ஆற்றல் பற்றி விளக்குதல்.

5. மொழியின் பல்வேறு செயற்பாடுகள் பற்றி விவரித்தல்.

6. மொழியின் தன்மைகளையும் செயற்பாடுகளையும் அறிந்து அவற்றிற்கமைய கற்பித்தற் செயற்பாடுகளை வகுப்பறையில் மேற்கொள்வது பற்றி அறிதல்.

## 3.0 முற்சோதனை

மொழியின் இயல்புகள் அதன் செயற்பாடுகள் பற்றிக் கற்கப்போகும் நீங்கள் மொழி தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடைதர முயற்சியுங்கள்.

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் " √ " எனவும் பிழையாயின் " X " எனவும் அடையாளமிடுக.

1. சைகை, சத்தம், ஒசை என்பன கருத்துப்பரிமாற்றத்திற்கு உதவுவதில்லை. ( )

2. பிள்ளையின் அபிவிருத்திக்கு மொழி பிரதானமான காரணியாகும் ( )

3. தாய்மொழி மூலம் கல்விகற்பதே சிறந்தது என்பது கல்வியியலாளரின் கருத்தாகும். ( )

4. இலங்கையில் ஆங்கிலமொழிக்கல்வி இருந்த காலத்தில் தாய்மொழி மூலக் கல்வி இருக்கவில்லை. ( )

5. சமூக மாற்றத்திற்கேற்ப மொழி மரபைப் பேணும் அதேவேளையில் மாற்றங்களுக்கமைய நெகிழ்ந்துகொடுக்கும் இயல்பை பெற்றிருத்தல் வேண்டும். ( )

6. பேச்சுமொழி, எழுத்துமொழி இரண்டும் சந்தர்ப்ப சூழ்நிலை களுக்கமையப் பயன்படுத்திக் கொள்ளலாம். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.0 மொழியின் இயல்புகளும் அதன் செயற்பாடுகளும்

## 4.1 மொழியின் வரைவிலக்கணமும் அதன் இயல்புகளும்

ஒரு விலங்கு மற்றொரு விலங்கிற்கு சில சைகைகள் மூலமோ சத்தமிடுவதன் மூலமோ குறிப்பிட்ட ஒரு தகவலைத் தெரிவிக்கும். சில மிருகங்கள் தமக்கேற்படும் கோப உணர்வினை அல்லது பாலியல் உணர்வினை சத்தமிடுவதன் மூலம் வெளிக்காட்டுகின்றன. எனினும் இவ்விலங்குகளிடையே தகவல் பரிமாற்றத்திற்கென குறியீட்டு அமைப்பொன்று இல்லை. தேனுள்ள மலர்கள் இருக்கும் இடங்களைத் தேனீரீங்காரமிடுவதன் மூலம் ஏனைய தேனீக்களுக்கு அறிவிப்பதாகச் சொல்லப்படுகின்றது.

மனிதன் விலங்குகள் பறவைகளிலிருந்து வேறுபடுகின்றான். மனிதன் தொடர்புகொள்ளும் ஊடகமாக மொழியைப் பயன்படுத்துகின்றான். மொழியைக் கற்கும் ஆற்றலோ பிரயோகிக்கும் திறனோ விலங்குகள் பறவைகளுக்கில்லை. அவற்றால் மனிதனைப்போல் கருத்துக்களை ஆக்குவதற்கும் முடிவதில்லை.

மொழி என்பதால் நாம் விளங்கிக் கொள்வது என்ன? மொழியியலாளர்கள் இதற்கு வெவ்வேறு விளக்கங்களை அளித்துள்ளனர். அவற்றுள் சில வருமாறு :

(1) மனிதன் உள்ளிட்ட சகல சீவராசிகளும் தங்களது உணர்வுகளையும் கருத்துக்களையும் பரிமாற்றம் செய்யும் ஒருமுறையே மொழியாகும்.

(2) மனிதர் தமக்கிடையே கருத்துக்களையும் உணர்வினையும் எண்ணங்களையும் தொடர்புறுத்தும் முறைமையே மொழியாகும்.

(3) ஒலிவடிவங்களினதும் வரிவடிவங்களினதும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பை மொழி எனப்படும்.

முதலாவது வரைவிலக்கணத்தின்படி சீவராசிகளும் கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஒரு முறை மொழி எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் மிருகங்கள் பறவைகள் தமதுணர்வை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் அறிகுறிகள் மொழியாகக் கருதப்படுவதில்லை. ஒழுங்கமைப்புள்ள மொழி வளர்ச்சி பெறுவதற்கு முன்னர் மனிதர் கூட சைகை முறை முதலான அறிகுறிகளையே மொழியாகக் கொண்டு கருத்துப்பரிமாற்றம் செய்தனர். இன்று மொழி வளர்ந்த நிலையில் இருந்தாலும் சைகை மொழி கருத்துப் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருதலைக் காணலாம். ஆனால் சைகை மொழி பூரணமான மொழியாகி விடமாட்டாது.

இரண்டாவது விளக்கம் மனிதனின் மொழிக்கும் மட்டும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. அதனோடு சைகைகள் போன்றவற்றையுயம் இது மொழியாகக் கருதுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது இலக்கணம் சார்பான ஒரு விளக்கத்தை அளிக்கின்றது. உலகிலே பல பேச்சுமொழிகள் இருக்கின்றமையால் ஒலி, வரிவடிவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரையறை செய்வதும் அத்துணை பொருத்தமில்லை. எனவே இவ்விளக்கத்தையும் நாம் பூரணமாகக் கொள்ள முடியாது. எனவே இவ்வாறு தனித்தனி விளக்கம் அளிப்பதால் மொழி என்பதற்குச் சரியான வரைவிலக்ணத்தை அளித்துவிட முடியாது. எனவே பல விடயங்களையும் உள்ளடக்கியதாக மொழி என்பதற்கு விளக்கமொன்றினை கொடுத்தல் பொருத்தமானதாகும்.

ஒருவன் எழுத்துமூலமோ வாய்மொழி மூலமோ வெளியிடும் ஒரு விடயத்தை விளங்கிக் கொள்வதற்கு மொழி பயன்படுகிறது. மனிதனது மனதில் கிடக்கும் உள்ளார்ந்த எண்ணங்களை, உணர்வுகளை வெளிக்கொணர அது பயன்படுகிறது. மொழி கருத்துக்களினதும் ஒலிகளினதும் வடிவங்களினதும் ஒழுங்கமைப்பாகும். சிந்தனையின் பிரதான கருவியாக அமைவது மொழி. "மொழி முழுமையான ஒலிக்குறியீடுகளின் தொகுதியொன்றையும் எண்ணக்கரு சார்ந்த சிந்தனையையும் மனிதனுக்கு உடைமை ஆக்கியுள்ளது." என 'ஸான்கே லெக்னர்' விளக்கியுள்ளார். 'போபர்ஸ், எக்கிஸ்' என்பவர்களது கருத்துப்படி மொழி கருத்துவெளிப்பாடு, விளக்கம், சமிக்ஞை, நியாயித்தல் ஆகிய நான்கு பணிகளைச் செய்கிறது. எனது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது' என ஒருவர் கூறும்போது அங்கு மொழி உணர்வு வெளிப்பாட்டுக் கடமையைச் செய்கிறது. 'மழையில் நனைந்ததால் அவனுக்கு காய்ச்சல் வந்தது' இங்கு மொழி விளக்கம் அளிக்கும் பணியைச் செய்கிறது. "பாலம் உடைந்திருக்கிறது - போகாதீர்கள்" எதிர்பார்க்கக் கூடிய ஆபத்துப்பற்றி சமிக்ஞை கொடுப்பதற்கு மொழி பயன்படுத்தப்படுகிறது. மொழியின் நியாயிக்கும் பணி மிகச் சிக்கலானது. பகுத்தறிவற்ற சீவன்களால் இது முடியாது. மனிதன்தான் தர்க்க சிந்தனை மூலம் நியாயிக்கும் ஆற்றலைப் பெறுகின்றான்.

## 4.2 பிள்ளையின் வளர்ச்சிப் பருவங்களும் மொழி எண்ணக்கரு விருத்தியும்

பிள்ளையின் பருவ வளர்ச்சியோடு அதன் மொழிவிருத்தியும் ஏற்படுகின்றது எனலாம். பிள்ளைகளிடத்தில் மொழியும் சிந்தனையும் எவ்வாறு வளர்ச்சி அடைகிறது என்பது பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்கலைக்கழகப் பேராசிரியரான 'ஒஸ்ஞட்' என்பவர் பிள்ளைகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எழுப்பும் ஒலிகளைப் பற்றி ஆய்வுகள் செய்து அவ்வொலிகளுக்கும் மொழி வளர்ச்சிக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு என்பதைக் கூறியுள்ளார்.

பிள்ளையின் மொழி விருத்தியில் வீட்டுச் சூழல் பெரும்பங்கு வகிக்கின்றது. தாய், தகப்பன், சகோதரர் முதலானோர் பிள்ளைக்கு நெருக்கமானவர்களாக ஆரம்ப காலகட்டங்களில் இருப்பர். அவர்களோடு ஏற்படும் தொடர்பின் காரணமாகப் பிள்ளை பெரும் சொற்களஞ்சியத்தைப் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றது. பிள்ளை பிறந்தது தொடக்கம் சில வருடங்களுக்கு அதன் மொழி எவ்வாறு படிப்படியாக வளர்ந்து செல்கின்றது என்பது பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மெடோனா, ஸ்மித் முதல் 5 வருடங்களிலும் பிள்ளையின் சொற்களஞ்சிய வளர்ச்சி பற்றி ஆய்வுகள் செய்து பின்வரும் விபரங்களைத் தந்துள்ளனர்.

| வயது | தெரிந்திருக்கும் சொற்களின் தொகை |
|---|---|
| 1 வருடம் | 03 |
| 1 1/2 வருடம் | 22 |
| 2 வருடம் | 272 |
| 2 1/2 வருடம் | 446 |
| 3 வருடம் | 896 |
| 3 1/2 வருடம் | 1222 |
| 4 வருடம் | 1540 |
| 4 1/2 வருடம் | 1870 |
| 5 வருடம் | 2072 |

ஒரு பிள்ளையின் மொழி வளர்ச்சியில் வீட்டுக்காரணிகள் மட்டுமன்றி சுற்றாடல் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆரம்பத்தில் சிறு வசனங்களில் கதைக்கும் பிள்ளை நாளடைவில் அடைமொழிகளைச் சேர்த்து நீண்ட வாக்கியங்களைக் கதைக்கத் தொடங்குகின்றது. மொழியில் காணப்படும் இலக்கண விதிகளைப் பிள்ளைகள் எங்ஙனம் கற்றுக் கொள்கின்றனர் என்பது பற்றியும் உளவியலாளர்கள் ஆய்வுகள் செய்துள்ளனர். பிள்ளைகள் உடல், உளரீதியில் வளர்ச்சி அடைவதற்கு ஏற்ப இலக்கண அமைப்புக்களை விளங்கிக்கொள்வர். ஒரு சொல்லுக்குப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன என்பதையும் அவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

பிள்ளை வளர்ச்சிப் பருவங்களுக்கும் மொழிவளர்ச்சிக்குமிடையே உள்ள தொடர்புகள் பற்றிப் பியாஜேயின் ஆய்வுகளும் வெளிப்படுத்துகின்றன. இரண்டு வயதுக்கும் ஏழு வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளின் பருவத்தின் பியாஜே தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம் எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பருவத்தினர் ஒரு பொருளின் ஓர் அம்சத்தை மட்டும் கவதனத்திற் செலுத்துவர். உண்மையான பொருட்களைக் கற்பனைப் பொருட்களில் இருந்து வேறுபடுத்தும் ஆற்றல் இவர்களுக்கு இல்லை. இருவயதாகும் போது இவர்களது மொழி வளர்ச்சி வேகம் அதிகரிக்கின்றது. அதிகமான பிள்ளைகள் இரு சொற்களுடன் கூடிய வசனங்களை உபயோகிப்பர். 5 வயதாகும்போது அவர்கள் ஏறக்குறைய 2000 சொற்கள் வரை தெரிந்து வைத்திருப்பர். அவர்கள் பேசுவது அதிகம் தம்மை மட்டும் மையமாகக் கொண்டிருப்பதால் **தன்முனைப்புமொழி** என அவர்களது மொழி அழைக்கப்படுகின்றது. சில வருடங்கள் செல்ல அவர்கள் பிறரைப் பற்றியும் கதைக்கத் தொடங்குவதால் தன்முனைப்புத் தன்மையிலிருந்து அவர்கள் வெகுதூரம் விலகிச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுவருடம் முதல் பன்னிரண்டு வயதுவரை பிள்ளைப்பருவமாகும். பியாஜே இக்காலத்தைத் தூல சிந்தனைப் பருவம் என அழைப்பர். இப்பருவத்திலும் மொழி வளர்ச்சி அதிகம் ஏற்படுவதோடு 12 வயதாகும்போது தன்முனைப்பு மொழி 1/ 20 ஆகக் குறைந்து விடுகிறது. 'பெலமோ' என்பவர் இவ்வயதினர் வாக்கியங்களைச் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாகப் பயன்படுத்தும் திறனைப் பெற்றிருப்பர் எனக் கூறுகின்றார். இதுவரை பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்களுக்கும் மொழிவிருத்திக்கும் இடையிலான தொடர்பினைப் பார்த்தோம். பிள்ளைகளின் எண்ணக்கருவிருத்தியில் மொழி எத்தகைய பிரதான பங்கினை வகிக்கின்றது என்பது பற்றி நோக்குவோம். எண்ணக்கரு என்றால் என்ன? சூழலில் காணப்படும் பொருட்களின் பொது இயல்புகளைப் பிரித்தறிந்த அடையாளம் காண்பது எண்ணக்கருவாகும். பொது இயல்புகளையுடைய பொருட்களைத் தனித்தனி வேறுபடுத்துவது எண்ணக்கரு கற்றலில் இடம்பெறுகிறது. பொதுமையாக்கமும் பண்பு பிரித்தறிதலும் எண்ணக்கரு உருவாக்கத்தில் இடம்பெறும்.

(1) தூல எண்ணக்கரு (2) பண்புக்குரிய எண்ணக்கரு. எமது புலன்களால் பார்த்து உணரக்கூடியவை தூல எண்ணக்கரு எனலாம். இதனைக் காட்சிப்பொருள் எண்ணக்கரு என்றும் சொல்லலாம். இவற்றை இலகுவில் விளங்கிக் கொள்ளலாம்.

(2) காட்சிப்பொருள் எண்ணக்கருக்கள் மூலம் படிப்படியாகப் பண்புக்குரிய எண்ணக்கருக்கள் தோன்றும். நேரடியாகப் பார்க்கமுடியாத பண்புசார்ந்த கருத்துநிலைக்குட்பட்ட எண்ணக் கருக்கள் பண்புக்குரிய அல்லது கருத்து எண்ணக்கருக்கள் ஆகும். நட்பு, அளவு, அன்பு முதலானவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவ்வாறு தூல எண்ணக்கருக்களும் பண்புசார் எண்ணக்கருக்களும் பிள்ளைகளிடம் வளர்ச்சி அடைய மொழி பிரதானமாக அமைகின்றதென்பதைக் குறிப்பாக ஆசிரியரும் பெற்றோரும் அறிந்திருத்தல் நல்லது. பிள்கைளின் அறிவு விருத்தியில் எண்ணக்கருவாக்கம் முக்கிய பங்கினை வகிப்பதால் எண்ணக்கருவிருத்தியில் ஆசிரியரும் பெற்றோரும் முக்கிய பங்கினை ஆற்றவேண்டியது இன்றியமையாததாகும். நாம் தினமும் பேசும் சொற்கள், எழுதும் சொற்கள் என்பன பிள்ளைகளின் எண்ணக்கரு உருவாக்கத்தில் உதவுகின்றன. வகுப்பறையில் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பல்வேறு சந்தர்ப்பங்களும் அனுபவங்களும் எண்ணக்கரு உருவாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

எண்ணக்கருக்களைக் கருத்திற் கொள்ளும்போது மொழி முக்கிய இடத்தை வகிப்பதால் வகுப்பறைச் செயற்பாடுகளை அதற்கேற்ற விதத்தில் அமைத்தல் வேண்டும். ஒன்றிணைந்த பாடம் மூலமும் தனிப்பட்ட பாடங்களின் மூலமும் இதனை உருவாக்கலாம். உதாரணமாக 'உணவு' பற்றிய எண்ணக்கருவை தமிழ் மொழிப்பாடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவதானல் அது தொடர்பான பாடல்கள், கட்டுரைகளைப் படித்துக்காட்டலாம். விஞ்ஞானபாடத்தில் உணவில் உள்ள சத்துக்கள் பற்றிக் கற்பிக்கலாம். உணவு தயாரித்தல் பற்றி மனைப்பொருளியல் பாடத்தில் கற்பிக்கலாம். பல்வேறு பாடங்களிலும் 'உணவு' பற்றிய எண்ணக்கரு விளக்கம் அளிக்கும் போது மொழியே முக்கிய இடத்தை வகிக்கின்றதென்பதை நாம் மறந்தவிடக் கூடாது. நாம் காண்பதாலும் கேட்பதாலும் பேசுவதாலும் செய்வதாலும் எண்ணக்கருக்கள் உறுதிபெறும். இவ்வாறு நான்கு மொழிச்செயல்களையும் ஒன்றோடொன்று இணைத்துத் கற்பிப்பதன் மூலம் எண்ணக்கருக்களை உறுதியடையச் செய்யலாம். அத்துடன் மொழி தொடர்பான செயற்பாடுகளை ஏனைய பாடங்களுடன் சேர்த்துக் கற்பிக்க முடியும். மேலும் ஓர் எண்ணக்கரு பற்றிய விரிவான விளக்கத்தை ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக வளர்த்துச் செல்லமுடியும். அதாவது பிள்ளைகளின் முதிர்ச்சி, அறிவு வளர்ச்சிக்கேற்ப அதனை வளர்த்துச் செல்லலாம். உதாரணமாக 'அணு' பற்றிய எண்ணக்கருவை ஆண்டு 6 இல் இருந்து ஆண்டு 11 வரை படிப்படியாக அறிவின் அளவு அதிகரிக்கும் வண்ணம் கற்பிப்பது பயனுடைத்தாகும்.

## 4.3 மொழியின் தொழிற்பாடுகள்

மொழி சமூக வாழ்வில் முக்கிய இடத்தை வகிக்கின்றதென்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். உறவை வளர்க்கவும் அறிவை விருத்திசெய்யவும் பொருள் விளக்கம் பெறவும் மொழியே உதவுகிறது. கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளான வினாவுதல் கலந்துரையாடல், உரையாடுதல், பிரச்சினை விடுவித்தல், தர்க்கித்தல், எழுதுதல் வாசித்தல் முதலான சகலவற்றிலும் மொழியே முக்கிய இடத்தை வகிக்கின்றது. இவ்வாறு மொழியின் பல்வகைப்பட்ட தொழிற்பாடுகளை நாம் பின்வருமாறு வகைப்படுத்தி அவற்றைத் தனித்தனியாக ஆராய்வோம்.

(அ) (1) சிந்தனையின் கருவூலம்.
(2) கருத்துப் பரிமாற்றம்.
(3) பண்பாட்டுக் கருவி.
(4) அறிவைக் களஞ்சியப்படுத்தல்.
(5) கற்றல் கற்பித்தல் ஊடகம்

### 4.3.1 சிந்தனையின் கருவூலம்

மனிதன் விலங்குகளிலிருந்து வேறுபடுவதற்கு மொழி, சிந்தனை, பிரச்சினை விடுவித்தல் முதலியன பிரதான காரணங்களாக அமைகின்றன. மொழியைப் பேசுதல், பேசுவதை விளங்குதல், மொழியைப் பயன்படுத்தல், சிந்தித்துச் செயலாற்றல் போன்றன மிருகங்களுக்கு இல்லையென்பதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. மனிதனுடைய சிந்தனையின் பிரதான ஊடகமாக விளங்குவது மொழியாகும். குறியீடுகளுடன் சேர்ந்திருப்பது மொழியின் பிரதான தன்மையாகும். பொருட்கள், எண்ணங்கள், கருத்துக்கள் உணர்வுகள் முதலியன மொழிக்குரிய குறியீடுகளால் புலப்படுதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் காணும் விடயங்களை சிந்தித்து விளங்கிக் கொள்கின்றோம். விடயங்களை நாம் கிரகித்துக் கொள்வதற்கு மொழி, சிந்தனை ஆகியன உதவுகின்றன. சிந்தனைக்குரிய செயற்பாடுகள் மொழியின் உதவியுடனேயே நடைபெறுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பண்புகளைத் தொகுத்தல், எண்ணக்கருவாக்கம், கருத்துக்களை வகைப்படுத்தல் முதலிய திறன்கள் யாவும் மொழியும் சிந்தனையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுதலாலேயே ஏற்படுகின்றன. வொட்சன் என்னும் உளவியாளர் சிந்தனை என்பது ஓசையின்றி மொழியைப் பயன்படுத்தும் ஒரு செயற்பாடாகும் என்கிறார். நமக்குள் நாமே கதைத்துக் கொள்வது தான் சிந்தனை என மற்றொரு உளவியலாளர் கூறுகின்றார். பிள்ளைகளின் மொழியறிவை விருத்தி செய்வதன் மூலம் நாம் அவர்களது சிந்தனை ஆற்றலை வளர்த்துக்கொள்ளலாம். மொழியில் ஆழமான அறிவு இருந்தால்தான் ஆக்கபூர்வமான சிந்தனைகளும் நுட்பமான சிந்தைனகளும் உருவாகும்.

### 4.3.2 கருத்துப் பரிமாற்றம்

மொழிதான் கருத்துக்களையும் உணர்வுகளையும் பரிமாற்றவல்ல சிறந்த சாதனமாகும். அதாவது மொழி கருத்துத் தொடர்புறுத்தும் ஊடகமாகும். நாம் அன்றாட வாழ்க்கையில் பலருடன் உறவாடும் பொழுது பல கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றோம். வீட்டிலும், அலுவலகங்களிலும், பொது 'இடங்களிலிலும் இக்கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகின்றது. இதற்குத் துணைபுரியும் சாதனமாக மொழியே விளங்குகின்றது.

இன்று தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்குப் பல வெகுசனதொடர்பு சாதனங்கள் இருப்பதைக் காண்கின்றோம். வானொலி, தொலைக்காட்சி, செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலிய சாதனங்கள் எல்லாவற்றிற்கும் கருத்துப் பரிமாற்றம் செய்ய உதவும் கருவியாக மொழியே விளங்குகின்றது.

மொழியைக் கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கு மாணவர்களுக்கு மொழி தொடர்பாகச் செம்மையான அறிவு இருப்பது இன்றியமையாததாகும். வாசிப்பு, எழுத்து, பேச்சு போன்ற மொழித்திறன்களை வளர்ப்பதில் மொழியாசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலின்போது கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். மொழியை எவ்வித இடர்ப்பாடுமின்றி மாணவர்பேசும்போதோ எழுதும்போதோ பயன்படுத்தக் கூடியவாறு அவர்களது மொழியறிவும் பொதுத்திறனும் விருத்தி செய்யப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.3.3 பண்பாட்டுக்காவி

ஒரு நாட்டின் பண்பாட்டு வளர்சிக்கும் மொழிக்குமிடையே நெருக்கமான தொடர்பு உண்டு. மொழி வளர்ச்சி அடையாத ஒரு சமுதாயத்தை பண்பாடு அடையாத சமுதாயம் எனக்கூறிவிடுவர். கிரேக்க உரோம நாகரிகம் உச்ச நிலையில் இருந்த காலகட்டங்களில் கிரேக்க உரோம இலக்கியங்கள் பல இருந்ததைக் காண்கின்றோம். தமிழ் மொழியில் பல பேரிலக்கியங்களும் இதிகாசங்களும் புராணங்களும் இருப்பதால் தமிழ்மொழி பேசுவோர் உயர்ந்த நாகரிகத்தையும் பாரம்பரியத்தையும் உடையவராகக் கணிக்கப்படுகின்றனர். இதிலிருந்து மொழி என்பது பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி எனக் கொள்ளலாம்.

மொழி பண்பாட்டின் கண்ணாடி மட்டுமல்ல 'பண்பாட்டுக் காவியுமாக' (ஊர்தி) விளங்குகின்றதெனலாம். எந்தவொரு சமுதாயத்திற்கும் மரபுரீதியாக கட்டியெழுப்பட்டுவந்த பண்பாடுகள், விழுமியங்கள் முதலியன இருப்பது இயல்பாகும் இவற்றையெல்லாம் பேணிப் பாதுகாத்து வளம்படுத்தி எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கும் பாரிய பொறுப்பு அச்சமுதாயத்தில் வழங்கிவரும் மொழியைச் சார்ந்ததாகும். எனவே மொழி பண்பாட்டுக் கரவி, பண்பாட்டு ஊர்தி என அழைக்கப்படுகின்றது. கல்வியின் நோக்கங்களாகக் கருதப்படும் பழைய நோக்கமும் முற்போக்கு நோக்கமும் **(Conservative & Progressive )** இதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

### 4.3.4 அறிவைக் களஞ்சியப்படுத்தல்

மொழி அறிவைத் தேடிப் பெறுவதற்கு உதவுகின்றது. பல்வேறு நூல்களையும் வாசிப்பதன் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். இவ்வாறு நூல்களைப் படித்து அறிவைக் களஞ்சியப்படுத்திவைக்க மொழியே உதவுகிறது. அது மட்டுமன்றி நாம் ஆராய்ந்து பெற்ற அறிவினைப் பிறருக்கு , வழங்கி அவ்வறிவினை எதிர்காலச் சந்ததியின்ருக்குக் கையளிப்பதற்கும் மொழியே உதவுகின்றது. தமிழ் இலக்கிய இலக்கண அறிவினை மட்டுமன்றி அறிவியல் , வரலாறு, அரசியல், சட்டம் முதலான பல்வேறு துறைகள் தொடர்பான அறிவினைப் பெறுவதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் மொழியே உதவுகின்றது. நாம் எமது வாழ்வில் பெறும் அனுபவங்கள் முதலியனவற்றை எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளித்தல் எமது கடப்பாடாகும்.

இதனைக் கருத்திற் கொண்டு மாணாக்கருக்கு மொழியறிவைக் கொடுக்கவேண்டியது ஆசிரியரது கடமையாகும். மாணவர்கள் தம் அன்றாடத் தேவைகளுக்கு வேண்டியவற்றை வாசித்தலும் எழுதுதலும் ஆராய்தலும் இன்றியமையாததாகும். இதற்கு அவர்களுக்கு அவசியமானது 'பயன்பாட்டுத்தமிழ்' ஆகும். அதுமட்டுமன்றி அவர்கள் வழிவந்த முற்கால இலக்கியங்களையும் தற்கால இலக்கியங்களையும் கற்றுக்கொள்ளல் அவசியமாகும். எல்லா நூல்களையும் அவ்வாறு கற்க முடியாதாகையால் பொருத்தமானவற்றைத் தெரிந்து பயன்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மொழியைச் செம்மையாகப் பேசுவதற்கு உதவியாக இருப்பவை சொற்களே. பொருட்கள், எண்ணங்கள், கருத்துக்கள் யாவும் சொற்களாலேயே உணர்த்தப்படுகின்றன. எனவே எமது உணர்ச்சி அனுபவங்களையோ எண்ணங்களையோ இடர்ப்பாடின்றி எடுத்துக் கூறுவதற்கு போதிய அளவு சொற்களஞ்சியம் பேணப்படுதல் வேண்டும். ஒரு மொழியின் சொல்வளம் அதனை வழங்கும் மக்களின் நாகரிக வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றது. மாணாக்கர் தமது சொற்களஞ் சியத்தைப் பெருக்கி அதன்மூலம் தம் அறிவை விருத்திசெய்து தாம் பெற்ற அறிவினைக் களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளக்கூடியவாறு வகுப்பறைக் கற்பித்தல் நிகழுதல் வேண்டும்.

### 4.3.5 கற்றல் கற்பித்தல் ஊடகம்

வகுப்பறையில் இடம்பெறும் கல்விச் செயற்பாடு கற்றல்-கற்பித்தல் செயற்பாடு எனப் பெயர்பெறும். வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கின்றார். அங்கு கற்பித்தல் இடம்பெறுகின்றது. ஆனால் கற்றல் இடம்பெற்றுள்ளதா எனக் கூறிவிட முடியாது. ஆசிரியர் எவ்வளவுதான் திட்டமிட்டுக் குறிப்பிட்ட பாடநேரத்தில் மிக நுட்பமாகக் கற்பித்தாலும் சில சந்தர்ப்பங்களில் மாணவர்கள் கற்று விடுவதில்லை. கற்பிக்கப்பட்ட விடயங்கள் மாணவரால் தெளிவுறக் கற்கப்பட்டாலே ஆசிரியரின் கற்பித்தல் முயற்சி வெற்றியடைந்ததாகக் கூறமுடியும். கற்றல்-கற்பித்தல் செயற்பாடு வெற்றிகரமாக அடையப் பல காரணிகள் துணைபுரிகின்றன. அவற்றுள் கற்றல்-கற்பித்தல் ஊடகமாக விளங்கும் மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துதல் முக்கிய காரணியாகும். ஆசிரியர் கற்பிக்கும் விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும் அதனை மாணவருக்கு விளக்குவதற்கும் மொழி முக்கியமானதாக விளங்குகின்றது. அதேபோல் மாணவரிடம் எதிர்பார்க்கப்படும் மொழியறிவு இருந்தால்தான் ஆசிரியர் கற்பிப்பது அவர்களுக்குத் தெளிவாக விளங்கும். இதிலிருந்து பெறப்படுவது என்ன? மாணவருக்கு ஊடகமொழியில் போதிய ஆற்றல் பெறச்செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். அவர்கள் மொழிப் பாடத்தில் தேர்ச்சி பெறுவதற்கு மட்டுமன்றி பிற பாடங்களிலும் அவர்கள் சித்திபெறுவதற்கு மொழியாற்றல் வேண்டப்படுகின்றது. இன்றைய மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிலேயே கற்கின்றனர். எனவே மொழியறிவு எல்லா ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவைப்படுகின்றது.

மாணவரது மொழி அறிவினை மேம்படுத்துவதில் மொழி ஆசிரியர்கள் மட்டும் தான் அக்கறை கொள்ளவேண்டுமென்ற தவறான எண்ணப்பாடு பலர் மத்தியில் நிலவுவதைக் காணலாம். மொழியாசிரியரால் மட்டும் மொழியறிவைக் கொடுத்து விடமுடியாது. எல்லா ஆசிரியர்களும் மொழி கற்பிக்கும் ஆசிரியர் என்ற கோட்பாட்டுக்கு அமைய ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் மொழியில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். சரியான சொற்பிரயோகம், சொற்களைப் பிழையற எழுத்துக்கூட்டல், வசனங்களை இலக்கண அமைதிக்கேற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தல், பொருத்தமான கலைச்சொல் பிரயோகம் முதலான சகலவிடயங்களிலும் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருத்தல் இன்றியமையதாதாகும்.

அத்துடன் குடும்பம், சமயயதுக் குழுக்கள், பாடசாலை முதலான பல சுற்றாடற் காரணிகள் பிள்ளைகளின் மொழிவளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் பாடசாலைகளுக்கு வரும் பிள்ளைகளின் மொழியறிவு வெவ்வேறு மட்டத்தில் இருக்கும் என்பதை உணர்ந்து அதற்கமைய மொழியாசிரியர் மொழியினைக் கற்பிக்க வேண்டும். மொழிவளர்ச்சிக்கு நல்லதொரு சூழலை உருவாக்கிப் பிள்ளைகளின் தனித்திறன்களை வளர்த்துக்கொள்ள மொழியாசிரியர் முயற்சிக்கவேண்டும். வகுப்புச் செய்தித்தாள்கள் முதலான சகல நடவடிக்கைகளும் பாடசாலையில் ஒழுங்குசெய்யப்படுவதன் மூலம் மாணவரின் மொழியறிவு வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். அத்துடன் வெகுசனத் தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்றனவும் சரிவரப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். கோயில்கள், ஆலயங்கள், சனசமூகநிலையங்கள், நூல்நிலையங்கள், சமூகத்தொடர்புகள், சந்தைகள், அலுவலகங்கள் முதலியவற்றோடு பிள்ளைகளைத் தொடர்புறச்செய்வதாலும் அவர்களிடம் மொழிவிருத்தி ஏற்படுகின்றது.

## 4.4 மொழி ஆசிரியர் பண்புகள்

ஓர் ஆசிரியர் கற்றலுக்கு உதவுபவராக, மாணவருக்கு அறிவுரை கூறும் ஆலோசகராக,, வழிகாட்டியாக, சமூகசேவையாளராக பல பணிகளைச் செய்கின்றார். தலைமைப் பொறுப்பினை ஏற்கும் திறனும் நற்பண்புகளும் சிறந்தவராக விளங்குகிறார். இவையாவும் எந்தவோர் ஆசிரியருக்கும் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படும் பண்புகளாகும். எனவே மொழியாசிரியர் ஒவ்வொவருக்கும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் பண்புகள் இருப்பது அவசியமாகும். அத்துடன் மொழியாசிரியர் என்ற வகையில் அவருக்குச் சில விசேட பண்புகள் இருத்தல் வேண்டும்.

01. தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியருக்கு தமிழ்மொழியில் சிறந்த பயிற்சியும் பழக்கமும், இன்றியமையாததாகும்.

02. தமிழ் மொழியின் அன்றாடப் பயன்பாடு தொடர்பாக பிறருக்கு எழும் ஐயப்பாடுகளை நீக்கும் ஆற்றலும் திறமையும் அவருக்கு அவசியமாகும்.

03. தமிழ் இலக்கியம், இலக்கணம் தொடர்பான ஆழமான அறிவு இருத்தல் வேண்டும்.

04. தமிழ்மொழி மரபுகளைப் பேணுபவராகவும் மாற்றங்களுக்கு இடமளிப்பவராகவும் அவர் விளங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. அவர் தம் தொழிற்றகைமைகளை மேம்படுத்துவதில் விருப்புடன் செயற்படுவதன் மூலம் தமது அந்தஸ்தை மேம்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

06. பாடசாலைகளில் மாணவரின் தமிழ்மொழி விருத்திக்கு உதவுமுகமாக பாடப் புறச் செயல்களில் ஊக்கத்துடன் செயற்பட்டு வழிகாட்டுதல் அவரது கடமையாகும்.

07. பாடசாலை அமைந்திருக்கும் சுற்றாடலில் இருக்கும் சனசமூக நிலையங்கள் தமிழ்மன்றங்கள், நூல்நிலையங்கள் போன்றவற்றை மாணவரின் மொழிவிருத்திக்காக நன்கு பயன்படுத்திக் கொள்ளும் ஆளுமை உடையவராக இருத்தல் சிறப்புடைத்தாகும்.

08. தமிழ்மொழி ஆசிரியர் என்றவகையில் மொழிகற்பிக்கும் முறைகள் பற்றி நன்கு தெரிந்திருப்பவராகவும் இத்துறை பற்றிய அறிவினை ஏனைய மொழி ஆசிரியருடன் பகிர்ந்து கொள்பவராகவும் இருத்தல் வேண்டும்.

09. மொழி கற்பிப்பதற்குத் தேவையான உபகரணங்களைத் திட்டமிட்டுத் தயாரிக்கக்கூடிய ஆற்றலை வளர்த்தல் அவரது நிலையை மேம்படுத்த உதவும்.

## 5.0 சாராம்சம்

மனிதனது மனதில் இருக்கும் உள்ளார்ந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிக்கொணரவும் அவற்றை விளங்கிக் கொள்ளவும் மொழி பயன்படுகிறது.

மொழி கருத்துக்களினதும் ஒலிகளினதும் வடிவங்களினதும் ஒழுங்கமைப்பாகும். சிந்தனையின் பிரதானமாக கருவியாகும்.

பிள்ளையின் பருவவளர்ச்சிக்கேற்ப மொழி வளர்ச்சியும் ஏற்படுகின்றது.

பிள்ளையின் மொழிவிருத்தியில் வீடு, பாடசாலை என்பன பிரதானமாக விளங்குகின்றன.

மொழி கற்றல்—கற்பித்தல் ஊடகம் என்ற வகையில் கலைத்திட்டத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

மொழி பண்பாட்டுக் கண்ணாடி; பண்பாட்டுக் காவி ஆகும்.

தமிழ்மொழி ஆசிரியர் ஏனைய ஆசிரியருக்கு இருக்க வேண்டிய சிறப்பியல்புகள் நற்பண்புகள் முதலிவற்றைக் கொண்டிருப்பதோடு தமிழ் மொழியில் சிறந்த ஆட்சி உடையவராயும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 பிற்சோதனை

கீழே தரப்பட்டுள்ள சொற்றொகுதியில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து பின்வரும் கூற்றுக்களைப் பூர்த்திசெய்க.

பண்பாட்டுக்காவி, நியாயித்தல், சைகை, சொல்வளம், பண்புக்குரிய, காட்சிக்குரிய, குறியீடுகள், ஊடகம், பண்பாட்டுக் கண்ணாடி, கலைத்திட்டம்.

01. மொழி சரியாக வளர்ச்சி அடைவதற்கு முன்னர் மனிதர் கூட............ மொழியையே பயன்படுத்தினர்.

02. மொழி ஒரு கருத்துப்பரிமாற்ற........................ ஆகும்.

03. போபர்ஸ் எக்கீஸ் மொழியின் நான்கு பணிகள் எனக் குறிப்பிடுவன கருத்து வெளிப்பாடு, விளக்கம், சமிக்ஞை........................ என்பனவாகும்.

04. மனிதரின் நாகரிக வளர்ச்சியிலேயே மொழியின்.................. தங்கியுள்ளது.

05. நட்பு, அன்பு போன்றன.................. எண்ணக்கருவாகும்.

06. பொருட்கள் எண்ணங்கள், கருத்துக்கள், உணர்வுகள் முதலியவற்றை மொழிக்குரிய........................ வெளிப்படுகின்றன.

07. சமுதாயத்தின் மரபுகள், விழுமியங்கள் முதலானவற்றைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சமுதாயத்தினருக்குக் கையளித்தல்.................... எனப்படும்.

## 7.0 விடைகள்

| முற்சோதனை | பிற்சோதனை |
|---|---|
| 01. | 01. சைகை |
| 02. | 02. ஊடகம் |
| 03. | 03. நியாயித்தல் |
| 04. | 04. சொல்வளம் |
| 05. | 05. பண்புக்குரிய |
| 06. | 06. குறியீடுகள் |
| | 07. பண்பாட்டுக்காவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.0 ஒப்படைகள்

1. (அ) மொழி வழக்கைப் பொதுமையாக்குவதில் தினசரிப் பத்திரிகைகள் எத்தகைய பங்களிப்புச் செய்யலாம் என நீர் கருதுகின்றீர்?

(ஆ) பேசுவதுபோல் எழுதவேண்டுமா?"- இது பற்றிய உங்கள் கருத்து யாது?

(இ) பேசுவதைக் காட்டிலும் எழுதுவது கடினமானதொரு செயற்பாடாகும் எள்பதற்கு நீர் கூறும் காரணங்கள் யாவை?

2. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே"- தமிழ் மோழியின் இன்றைய வளர்ச்சி நிலையைக் கருத்திற் கொண்டு இக்கூற்றை ஆராய்க.

## 9.0 உசாத்துணை நூல்கள்


1. தமிழ் பயிற்றும் முறைகள் - சுப்புரெட்டியார். ந
சென்னை, 1963.

2. தாய்மொழி-தமிழ்மொழி என்பது என்ன?
ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி.
தொலைக்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.
1990.

3. தாய்மொழி-தமிழ் மொழியும் பிள்ளையின் அபிவிருத்தியும்.

ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி.
தொலைக்கல்வித்துறை. தேசிய கல்வி நிறுவகம்.
1990

5. கல்வி உளவியல்- ச. முத்துலிங்கம்.
ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.
1980.


xxxxxxxxxxxxxxxx



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் அத்தியாயம்
# பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பித்தல் / கற்றல் நோக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்

1.0 அறிமுகம்.................... 21

2.0 சிறப்பு நோக்கங்கள்.................... 22

3.0 முற்சோதனை.................... 23

4.0 தமிழ்மொழி கற்பித்தல்/ கற்றல் நோக்கங்கள்.................... 24

4.1 பொது நோக்கங்கள் பற்றிய விளக்கம்.................... 24
4.2 ஆரம்பக்கல்வி (ஆண்டு 1—5) வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தலின் பொது நோக்கங்கள்)....... 26
4.3 இடைநிலைக் கல்வி வகுப்புக்களில் (ஆண்டு 6–11) தமிழ்மொழி கற்பிப்பதற்கான பொது நோக்கங்கள்... 27
4.4 சிறப்பு/ நடத்தை நோக்கங்கள் பற்றிய விளக்கம்...... 28
4.5 சிறப்பு/ நடத்தை நோக்கங்களை அமைத்தல்............ 29

5.0 சாராம்சம்.................... 33

6.0 பிற்சோதனை.................... 35

7.0 விடைகள்.................... 35

8.0 ஒப்படைகள்.................... 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

தமிழ்மொழித் தொழிற்பாடுகள், அதன் இயல்புகள், பயன்கள் ஆகியன பற்றி முன்பு கற்றுள்ளீர்கள். பாடசாலைகளில் தமிழ்மொழியைக் கற்பித்தல், கற்றல் என்பவற்றின் பொது நோக்கங்கள், சிறப்பு நோக்கங்கள் யாவை; அவை எவ்வாறு அமைய வேண்டும் போன்ற விடயங்கள் பற்றி இவ்வத்தியாயத்தில் கற்க உள்ளீர்கள்.

கல்வியென்பது நோக்குடைச் செயன்முறை கற்பித்தல், கற்றல் என்பன செயற்பாடுகள். அவை குறிக்கோள் சார்ந்தவை. எவ்வெவற்றை அடைய வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடுபவை நோக்கங்களும் குறிக்கோள்களும். அவற்றை முன்னதாக இனங்கண்டு, நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகின்றது.

கற்பித்தல் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் முன்கூட்டியே வரையறுத்துக் கொள்ளுவதால்,

* ஆசிரியர் கற்பித்தலைச் செவ்வையாக ஒழுங்கமைத்துக்கொள்ள வாய்ப்பாகின்றது.

* மாணவர் கற்றலை இடரின்றி முறையாக மேற்கொள்ள முடிகிறது.

* மதிப்பீடு செய்வோர் பொருத்தமான மதிப்பீட்டு முறைகளை செம்மையாகத் திட்டமிட்டு மதிப்பீடு செய்ய இயலுகின்றது.

கற்பித்தல், கற்றல் செயற்பாடுகள் மூலம் கற்போனில் நடத்தை மாற்றங்கள் ஏற்படுகின்றன. நடத்தை மாற்றங்கள் அறிவு, திறன், மனப்பாங்கு சார்ந்தவை. ஆசிரியர் இவற்றைச் சமநிலையில் மாணவர்களில் வளர்த்துச் செல்பவர். அதனால் மாணவரில் ஒருங்கிசைந்த, சமநிலையான ஆளுமை வளர்ச்சிக்கு உதவுகிறார். எதிர்பார்க்கப்படுகின்ற நடத்தை மாற்றங்கள் யாவையென நோக்கங்களில் குறிப்பிடப்படுகின்றன.

தமிழ்மொழி தற்பொழுது பல வகைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ் ஒரு வாழும் மொழி பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இரட்டை வழக்குகளைக் கொண்ட, வளம்மிக்க தொன்மையான மொழி. தொடர்பாடற் கருவியாகவும், பண்பாட்டு ஊர்தியாகவும் விளங்குகின்றது. தாய்மொழி, அரச கரும மொழி, கல்வி மொழி (போதனாமொழி) என்ற அந்தஸ்துக்களைத் தமிழ் மொழி நம் நாட்டில் பெற்றுள்ளது. இப்பின்னணியில், தமிழ்மொழி கற்பித்தல், கற்றலின் நோக்கங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி ஒரு தொடர்பு ஊடகமாகப் பல்வேறு சமூக, கலாசார, பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுகின்றது. மேலும் மனித ஆளுமையை விருத்தி செய்வதில் மொழியின் பங்கு மகத்தானது. இந்தவகையில் மொழி மிகவும் சக்திவாய்ந்த சாதனம். எவனொருவன் மொழியைத் திறம்படக் கையாளக்கூடியவனாக விளங்குகின்றானோ, அவன் சமூகத்தில் மிகுந்த சக்திவாய்ந்தவனாக ஆளுமை நிரம்பியவனாக விளங்குகின்றான்.

அறிவியல், தொழில்நுட்பம், கலைகள் வெகுவாக வளர்ச்சி பெற்றுவருகின்றன. அவற்றில் பங்கு கொள்வதற்கும், அவற்றைப் புரிந்து கொள்வதற்கும் மொழித்திறன், மொழியறிவு தேவை. புதியன பற்றிச் சிந்திக்க, புதியன காண, புதியன படைக்க மொழியில் ஆற்றல் பெறுதல் அவசியம்.

தமிழ்மொழியின் பயன்பாட்டுத் தேவையையும், பண்பாட்டுத் தேவையையும் கருத்திற்கொண்டு தமிழ்மொழியை முறைசார்ந்த பாடசாலைகளில் கற்பிப்பதற்கான நோக்கங்களை வரையறுத்துக் கொள்ளலாம். இத்தகைய நோக்கங்கள் எய்தப்படும் போதுதான் கற்பித்தல், கற்றல் செயற்பாடுகள் பயன்தருவனவாக அமைகின்றன. இவ்வத்தியாயத்தில், தமிழ்மொழி கற்பித்தல் நோக்கங்கள் பற்றித் தெரிந்துகொள்வீர்கள்.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

இப்பாடத்தைக் கற்பதன் மூலம், பின்வரும் ஆற்றல்களை அடைந்து கொள்வீர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. தமிழ்மொழியைக் கற்பித்தலின் பொது நோக்கங்களை வரையறை செய்யும் ஆற்றல்.
2. ஆரம்ப வகுப்புகளில் (ஆண்டு 1-5) தமிழ்மொழியைக் கற்பித்தல், கற்றலின் பொது நோக்கங்களை இனங்காணுந்திறன்.
3. இடைநிலை வகுப்புகளில் (6-8; 9-11 ஆண்டுகள்) தமிழ்மொழியைக் கற்பித்தல், கற்றலின் பொது நோக்கங்களை இனங்காணுந்திறன்.
4. ஒவ்வொரு பாடத்தையும் கற்பிப்பதற்கு முன்னதாகத் தயாரிக்கப்படுகின்ற பாடக்குறிப்பில் இடம்பெறுகின்ற சிறப்பு/ நடத்தை நோக்கங்களை உரிய முறையில் அமைக்கும் ஆற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.0 முற்சோதனை

இப்பாடத்தைக் கற்கத் தொடங்குமுன்னர், பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமானது என நீர் கருதும் விடையை, அவ்வினாவின் கீழே 1,2,3,4 எனத் தரப்பட்டுள்ள நான்கு கூற்றுக்களிலிருந்து தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.

01. தமிழ்மொழி ஒரு வாழும் மொழியெனக் கொள்ளப்படுவதற்குரிய பிரதான காரணம்.
   (1) பழைய இலக்கண, இலக்கிய வளம் கொண்ட மொழியாக விளங்குதல்.
   (2) இலங்கையில், தமிழ்மொழி அரசகரும் மொழிகளுள் ஒன்றாக அங்கீகாரம் பெற்றிருத்தல்.
   (3) பேச்சுவழக்கு, எழுத்துவழக்குகளைக் கொண்டு இன்றும் மக்களிடையே தொடர்பாடல் சாதனமாகத் தமிழ்மொழி திகழ்தல்.
   (4) திராவிட மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் இருத்தல்.

02. " மொழியைச் சமூக வாழ்க்கையில் தொடர்பாடல் சாதனமாக பிரயோகிக்கும் திறனைப் பெறுதல்," என்பது மொழிகற்பித்தலின்.
   (1) பயன்பாட்டு நோக்கம் (2) பண்பாட்டு நோக்கம்
   (3) கலாசார நோக்கம் (4) தேசிய நோக்கம்

03. பாடசாலைகளில் தமிழ்மொழியைக் கற்பித்தலின் முதன்மை நோக்கமாகக் கொள்ளப்படக்கூடியது.
   (1) மாணவர் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய மொழித் திறன்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
   (2) மாணவர் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைதல்.
   (3) மாணவர்களில் இலக்கிய ரசனையை ஏற்படுத்தல்.
   (4) மாணவர்களிடம் தமிழ்மொழி உணர்வினைத் தூண்டுதல்.

04. தமிழ்மொழிப் பாடங்களைக் கற்பிப்பதற்கான சிறப்பு அல்லது நடத்தை நோக்கங்களை முன்கூட்டியே வகுத்துக்கொள்வது சீரான கற்பித்தலுக்கு
   (1) அவசியமற்றது (2) பங்கம் விளைவிக்கும்
   (3) வழிவகுப்பதாக இருக்கும் (4) பிரச்சினைகளை ஏற்படுத்தும்

05. கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளின் பயனாக மாணவரில் ஏற்படுவது.
   (1) அறிவுப் பெருக்கம் (3) மனப்பாங்கு வளர்ச்சி
   (2) திறன் விருத்தி (4) நடத்தை மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.0 தமிழ்மொழி கற்பித்தல்/ கற்றல் நோக்கங்கள்

## 4.1 பொது நோக்கங்கள் பற்றிய விளக்கம்

பெரிதும் பொதுவானவையும், மிகவும் பரந்தவையுமான இலக்குகளை எடுத்துரைப்பனவாகப் பொது நோக்கங்கள் அமைகின்றன. பொது நோக்கங்கள் அடையப்பெற, நீண்ட காலமாகலாம். அவை திட்டமான எந்த வரையறைகளையும் கொண்டிருப்பதில்லை. அதனால் அந்நோக்கங்கள் அடையப்படுகின்றனவா, இல்லையா என்பதைக்கூட அளந்து அறிவதில் சிரமங்கள் உண்டு.

மொழி கற்பித்தலுக்கான பின்வரும் இலக்குகள் அல்லது எதிர்பார்ப்புக்கள், பொது நோக்கங்களுக்குரிய தன்மைகளைக் கொண்டிருத்தலை அவதானிக்க முடியும்.

(1) அடிப்படை மொழித்திறன்களை மாணவரில் விருத்தி செய்தல்.

(2) மாணவர்கள் தமது எண்ணங்களையும், கருத்துக்களையும் மொழி வழியாக, வெவ்வேறு வடிவங்களில் சுதந்திரமாக வெளிப்படுத்தக் கூடிய ஆக்கத்திறன்களையும், படைப்பாற்றல்களையும் வளர்த்துக் கொள்வதற்கு உதவுதல்.

(3) மொழிவழி சிந்தனையை விருத்தி செய்தல்.

இவை யாவும் வரையறைகள் அற்ற, பரந்த, பொதுத்தன்மைகள் கொண்ட இலக்குகளாகவே உள்ளன. இவற்றை எப்பொழுது அடையமுடியும் என்ற காலவரம்பையோ அல்லது எவ்வளவு அடைய வேண்டும் என்ற குறிப்பிட்ட எல்லையையோ, விதிக்க முடிவதில்லை. வாழ்நாள் முழுவதற்குமான நோக்கங்களாகவும் இவை தென்படுகின்றன.

பாடசாலைகளில் மொழிகற்பித்தலுக்கு வரும்போது, நோக்கங்களை வகுத்தே செயற்பட வேண்டியுள்ளது. ஆண்டு-1 முதல் ஆண்டு 5 வரை, ஆரம்பக் கல்விப் பருவம், அதைத் தொடர்ந்து ஆண்டு 6 முதல் 8 வரை, கனிட்ட இடைநிலைக் கல்விப் பருவம்; மேலும் தொடர்ந்து ஆண்டு 9 முதல் 11 வரை சிரேட்ட இடைநிலைக் கல்விப் பருவம் என மூன்று பருவங்களை முறைசார்ந்த பாடசாலைக் கல்வியில் காணலாம். இப் பதினொராண்டுக் கல்விக் காலத்தில் தாய்மொழியாம் தமிழ்மொழி, கலைத்திட்டத்தில் கட்டாய பாடமாக இடம்பெற்றுள்ளது. இந்த வகையில் ஆரம்பக் கல்விப் பருவ இறுதியிலும், கனிட்ட, சிரேட்ட இடைநிலைக் கல்விப் பருவங்களின் இறுதியிலும் மாணவர்கள் தமிழ்மொழிப் பாடத்தில் எய்த, வேண்டிய அடைவுகள் எவை என்பதை நோக்கங்களாக வகுத்துக் கலைத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளன. இந் நோக்கங்களும் பொது நோக்கங்கள் எனும் வகையினுள் அடக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் நோக்குடைச் செயலாக இருக்கும்போது, உரிய நோக்கங்கள் வகுக்கப்பட வேண்டியது அவசியம். கலைத்திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பொது நோக்கங்கள் காலவரம்பினைக் கொண்டிருப்பினும், குறித்த காலப்பகுதி நீண்டதாக உள்ளது. இலக்குகள் சுட்டிப்பாகவோ, குறிப்பாகவோ, அமையாமல், பொதுவாகவும், பரந்த தன்மையைக் கொண்டும் இப்பொது நோக்கங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றமையும் உணரற்பாலது.

பாடத்திட்டங்களிலும், பாடநூல்களிலும் பொது நோக்கங்கள் இடம்பெற்றிருப்பதை அவதானித்திருப்பீர்கள். அவையாவும் அறிவுசார் ஆட்சி, உளஇயக்க ஆட்சி, மனவெழுச்சி ஆட்சி என்பன சார்ந்தனவாக இருக்கின்றன. குறித்த பாடத்திட்டம், பாடநூல் ஆகியவற்றைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் கற்பித்து நிறைவு செய்யும்போது, பொது நோக்கங்கள் முற்றிலாகவோ, இயன்ற அளவிற்கோ மாணவரினால் அடையப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பு ரீதியாக அமைக்கப்படுகின்ற பாடத்திட்டம்,அறிவுமட்டம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே தயாரிக்கப்படுகின்றன. அவற்றைத் திட்டமிடுவதற்குப் பொது நோக்கங்களே அடிப்படையாகின்றன. கற்பித்தல் நோக்கங்களே, கற்பித்தற் செயன்முறையின் அம்சங்கள் அனைத்துக்கும் ஆதாரமாக அமைகின்றன. இறுதியில், மதிப்பீட்டு முயற்சிகளுக்கும் இந் நோக்கங்களே துணையாகின்றன.

மொழியறிவு விருத்தி, மொழித்திறன் விருத்தி ; இலக்கியத்தை நயக்குந்திறன் வளர்ச்சி; படைப்பாற்றல் விருத்தி, பண்பாட்டு, விழுமிய உணர்வு விருத்தி ஆகியன தமிழ்மொழி கற்பித்தல், கற்றலின் பொது நோக்கங்களாகக் கொள்ளப்படுவன.

எவற்றை அடையவேண்டும் என்பவற்றை முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டாலேயே, அவற்றிற்குரிய கருமங்களில் ஈடுபடமுடியும், தகுந்த வழிமுறைகளைக் கையாள இயலும். பல்வேறு சாதனங்களைப் பயன்படுத்த முடியும். எனவே, கற்பித்தல், கற்றல், மதிப்பீடு ஆகிய கல்விச் செயற்பாடுகளுக்கு, நோக்கங்களை வகுத்துக்கொள்ளுதல் இன்றியமையாதது.

மொழிக் கல்வியின் பொது நோக்கங்கள், பயன்பாடு சார்ந்தனவாயும், பண்பாடு சார்ந்தனவாயும் உள்ளன.

மாணவர்களின் தேவைக்கும், திறமைக்கும் ஏற்ப வேண்டிய மொழியறிவையும், மொழித்திறன்களையும் அவர்களில் விருத்திசெய்தல் பயன்பாடு சார் நோக்கமாகும். மொழி ஒரு கருத்துப் பரிமாற்றச் சாதனம் அல்லது "ஊர்தி" என்ற முறையில், மொழியைச் சமூகவாழ்க்கையில், கருத்துப் பரிமாற்ற ஊடகமாகப் பயன்படுத்தும் ஆற்றலை மாணவர் பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக் கல்வியின் நோக்கத்தை ஒரு பழைய பாடல் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்- மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடுபெறும்."

(தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி)

சமூகத்தின் வழிவழிவந்த பண்பாடுகள், வாழ்க்கைவிழுமியங்கள், சமூகச் சட்டங்கள், அறநெறிகள் பற்றிய அறிவையும், உணர்வையும் மாணவரில் வளர்த்தல்; அதன் வழி சமூகத்துடன் பொருந்தி வாழச்செய்தல் என்பன பண்பாட்டு நோக்கங்களுள் அடங்குவன. நம் முன்னோர் அளித்த, மொழி, இலக்கிய, பண்பாட்டு, அறிவியல் செல்வங்களைப் பேணி, பாதுகாத்து, வளர்த்து, அடுத்த தலைமுறையினருக்குக் கையளித்தல் என்பது ஒரு முக்கிய கல்விச் செயற்பாடு. இதனை ஆற்றுவதற்கு மொழியே ஊடகம் ஆகின்றது. மொழியைப் "பண்பாட்டு ஊர்தி" என்று குறிப்பிடுவர்.

## 4.2 ஆரம்பக்கல்வி ( ஆண்டு-1-5) வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தலின் பொது நோக்கங்கள்:

ஆரம்ப வகுப்புக்களில் மாணவர் தமிழ்மொழியை ஏனைய பாடங்களுடன் ஒன்றிணைத்தும், தனிப்பாடமாகவும் கற்கின்றனர். சுற்றாடலில் அவர்கள் பெறுகின்ற அனுபவங்கள் , ஊடாட்டங்கள், தொடர்புகள் என்பன மொழியைக் கற்கவும்,பிரயோகிக்கவும் உதவுகின்றன.

குழந்தை பிறந்ததிலிருந்தே மொழியைக் கற்றுக் கொள்கின்றது. அதன் தேவைகளை நிறைவுசெய்து கொள்வதற்கு மொழி தேவைப்படுகிறது. தன் எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு மொழி தேவைப்படுகின்றது. எனினும் ஆரம்பக்கல்விக் காலப்பகுதியிலேயே, பாடசாலைகளில் முறை சார்ந்த மொழித்திறன்களைக் கற்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அடிப்படை மொழித்திறன்களாக விளங்குபவை கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பன. இவற்றில் பயிற்சியும் பெற்று, திறன்விருத்தி எய்துதலே மொழி கற்றலின் பிரதான நோக்கமாக விளங்குகிறது.

### மொழி கற்பிப்பதன் பொது நோக்கங்கள்:

1. பிள்ளைகளின் மொழிற்திறன்களின் வளர்ச்சிக்கும், மொழியறிவு விருத்திக்கும் உதவுதல்.
2. பிள்ளைகளின் செய்திறன் வளர்ச்சிக்கு உதவுதல்.
3. பிள்ளைகளிடம் சமூக விழுமியங்கள், சமூக மனப்பாங்கு என்பன வளர்ச்சி பெற உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பிள்ளைகளின் பண்பாட்டு வளர்ச்சிக்கு வித்திடல்.

5. பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவுதல்.

பிள்ளைகளின் அன்றாடக் காரியங்களுக்கு கணிசமான அளவு மொழியைக் கையாளும் திறன்கள், கருத்துப் பரிமாறல் ஆகியவற்றைப் பிள்ளைகள் பெறுவதற்காக மொழிக்கல்வி வழங்கப்படுகிறது. எனினும், மொழிக் கல்வியின் மூலம், ஆரம்பக்கல்வி பெறுகின்ற மாணவர்களில் சிந்தனை வளர்ச்சி, செய்திறன் வளர்ச்சி, சமூக நன்மனப்பாங்கு விருத்தி, பண்பாட்டு விழுமிய வளர்ச்சி, படிப்படியான ஆளுமை வளர்ச்சி என்பனவே மொழி கற்பித்தல், கற்றலின் ஏனைய நோக்கங்களாக உள்ளன.

## 4.3 இடைநிலைக் கல்வி வகுப்புகளில் (ஆண்டு 6-11) தமிழ்மொழி கற்பிப்பதற்கான பொது நோக்கங்கள்

01. இக்காலத்திற்கு உகந்த தொடர்பாடற் கருவியாக, கையாளப்படும் வகையிலே தமிழ்மொழியைக் கற்றல்.

02. கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித் திறன்களை வளர்த்தல்.

03. கிரகிப்பதற்கும், சிந்திப்பதற்கும் மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலை வளர்த்தல்.

04. மொழி வழி அறிவை விருத்திசெய்தலும், உணர்வுகளைப் பண்படுத்தலும்.

05. கருத்துக்களையும் உணர்ச்சியனுபவங்களையும் வெளிப்படுத்தும் வல்லமையை வளர்த்தல்.

06. மொழி வாயிலாக நயக்குந் திறனை விருத்தி செய்தல்.

07. மொழி வழியாக ஆக்குந்திறனையும் ஆயுந்திறனையும் மேம்படுத்துதல்.

08. அன்றாட நடைமுறைத் தேவைகளுக்குப் பொருத்தமான முறையில் மொழியைப் பயன்படுத்துவதற்குரிய ஆற்றலை விருத்தி செய்தல்.

09. பேச்சுவழக்கிலும், எழுத்துவழக்கிலும் பயிலும் தமிழ்மொழியின் இயல்புகளை அறிந்து, தமிழை முறைமையாகக் கையாள வேண்டிய இடங்களில் வழுவின்றித் தெளிவாக ஆளப் பழகிக்கொள்ளுதல்.

10. வேற்று மொழிக்கலப்பைத் தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஏற்றவாறு கைக்கொள்ளுந்திறனை வளர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சமூக, பண்பாடு,அரசியல் விழுமியங்களை அறியவும், வளம்படுத்தவும்,மொழியைக் கருவியாகக் கொள்ளல்.

12. வாழும் சூழலையயும், வாழ்வியல் முறைகளையும் பேணுவதன் முக்கியத்துவத்தை உணர்தல்.

13. போதனை மொழித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் மொழியாற்றலை விருத்திசெய்தல்.

14. தேசிய ஒற்றுமையுணர்வையும், அனைத்துலகப் பார்வையையும் விரிவாக்குதல்.

## 4.4 சிறப்பு/நடத்தை நோக்கங்கள் பற்றிய விளக்கம்

பொது நோக்கங்கள் பற்றிக் கற்றுக்கொண்ட நீங்கள், இப் பகுதியில் சிறப்பு/ நடத்தை நோக்கங்கள் பற்றி அறிந்துகொள்ளவுள்ளீர்கள்.

கற்பித்தற் சிறப்பு நோக்கங்கள், பொதுவாக அன்றிக், குறிப்பாகவும் சுட்டிப்பாகவும் அமைகின்றன. மாணவர்களின் நடத்தை மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. நடத்தை மாற்றம் வகுப்பறை நிலைமைகளுடன்தொடர்புள்ளது. நடத்தை, அறிவுதிறன்,மனப்பாங்கு சார்ந்தது. கால வரையறைக்குள் நிகழ்வது.

மாணவர் பாடம் ஒன்றினைக் கற்பதற்கு வகுப்பறைக்குள் வரும்போதுள்ள நடத்தை நிலை, அப்பாடத்தைக் கற்ற பின்னர், மாற்றத்துக்குள்ளாகின்றது. இந்நடத்தை மாற்றம், கற்றதனால் ஏற்பட்ட விளைவு. இவ்விளைவை அல்லது பயனை எதிர்பார்த்து, சிறப்பு நோக்கங்கள் வகுக்கப்படுகின்றன. இவ்விளைவுகள் நடத்தை சார்ந்தனவாக விளங்குவதால், சிறப்பு நோக்கங்களை நடத்தை நோக்கங்கள் என்றும் குறிப்பிடுவர்.

ஒரு பாடத்தை அல்லது விடயத்தை, ஆசிரியர் பாடவேளை ஒன்றிலோ அல்லது இரண்டிலோ, கற்பித்து முடித்த பின்னர், அக் கற்பித்தற் செயற்பாட்டின் விளைவாக, மாணவர் எத்தகைய அறிவு, திறன்கள், மனப்பாங்குகளை அடையப்பெறுதல் வேண்டுமென அவ்வாசிரியர் விழைகின்றாரோ, அவற்றை இனங்கண்டு பாடத்தை ஆயத்தம் செய்யும்போது, பாடக்குறிப்பிலே சிறப்பு நோக்கங்களாக வரையறுத்து எழுதிக்கொள்கிறார். மாணவர்களின் செயலாற்றல்களை ஊக்குவிப்பனவாகவும் கற்பித்தற் சிறப்பு நோக்கங்கள் அமைதல் வேண்டும்.

கற்பித்தல் நோக்கங்களை அடைவதற்குச் சிறப்பு நோக்கங்களே கருவியாகின்றன. பொது நோக்கங்கள் பெரும்பாலும் நேரடியாகவோ, கண் முதலிய புலன்களினூடாகவோ, எய்தப்பட்டமை குறித்து, அவதானிக்கக் கூடியனவாக இருக்கமாட்டா. அதாவது மதிப்பீடு செய்தல் சிரமம். அவ்வாறின்றி, சிறப்பு நோக்கங்கள் அடையப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளனவா, அடையப்படவில்லையா என்பதை, பாடத்தைக் கற்பித்த பின்னர், தெளிவாகவும், கண்கூடாகவும் மாணவர்களில் கண்டு கொள்ளவும், அவதானிக்கவும் முடியும். இந்த வகையில், குறிப்பாகவும், சுட்டிப்பாகவும் அமைக்கப்படுகின்ற சிறப்பு நோக்கங்கள் யாவும், எய்தப்படும்போது, விளைவுகளை, அதாவது நடத்தை மாற்றங்களை நேரடியாக அவதானிக்கக் கூடியதாகவும் விளங்குகின்றமையினால், அவற்றை இலகுவாக மதிப்பீடு செய்யவும் முடிகின்றது. எனவே, மதிப்பீடு செவ்வையாகச் செய்யப்படுவதற்கு நடத்தை நோக்கங்கள் துணை செய்கின்றன.

வகுப்பறைக் கற்பித்தலுக்குப் பாடத்தைத் திட்டமிடல் அவசியம். கற்பித்தல் இலக்குகள் சார்ந்த செயற்பாடு. எனவே திட்டமிடலில், முதலில் இடம்பெறுவது சிறப்பு/ நடத்தை நோக்கங்களை அமைத்தல். எவற்றை அடையவேண்டும் என்ற தெளிவான இலக்குகளை முதலில் வரையறுத்துக் கொண்டாலே, அவற்றை அடைவதற்கான உரிய பணிகளை மேற்கொள்ள முடியும். கற்பித்தற் செயற்பாட்டின் அடித்தளமே, இலக்குகள்தான். கற்றலுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக அவை அமைகின்றன. கல்விச் செயற்பாடுகளை அவை சரியான பாதையில் திசை கோட்படுத்துகின்றன. கற்பித்தலில் எவற்றிற்குக் கூடிய அழுத்தம் கொடுக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதுடன், இவ்விலக்குகள் கற்பித்தலைக் கருத்துள்ளதாகவும், ஒருங்கிணைப்பாகவும் அமைக்க உதவுகின்றன. பொருத்தமான கற்றற் பொருளைத் தேர்ந்தெடுக்க வழிகாட்டுகின்றன. கல்விச் செயன்முறையின் வரையறையை உருவாக்க உதவுவதுடன், கற்றலைச் செயற்பாடுகள் நிறைந்ததாக ஆக்கவும் துணையாகின்றன. பாடவிதான, இணைப்பாடவிதானப் பரப்புக்களில் கல்விசார் தீர்மானங்களை எடுப்பதற்கும் சிறப்பு நோக்கங்களே வழிகாட்டுகின்றன. ஈற்றில் அடைவினை மதிப்பீடு செய்யவும் உதவுகின்றன. மதிப்பீட்டின் நம்பகத்தன்மை, உறுதி என்பனவும் சிறப்பு நோக்கங்களை வகுத்துச் செயற்படுவதால் சீர்மை பெறுகின்றன.

## 4.5 சிறப்பு/நடத்தை நோக்கங்களை அமைத்தல்

வகுப்பறைக் கற்பித்தலுக்குப் பயன்படக்கூடிய நடத்தை நோக்கங்கள், ஆசிரியரும், பரீட்சகரும் நன்கு விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டும்.

ஆசிரியரை மையமாகக் கொண்டு இலக்குகளைக் கட்டியெழுப்பி வந்தமுறை தற்பொழுது நீக்கப்பட்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணம்:**
**வாக்கிய வகைகளை விளக்குதல்**

இதில் ஆசிரியர் தான் என்ன செய்யப்போகிறார் என்பதை இலக்காக எழுதுகிறார். எனவேதான், இவ்விலக்கு ஆசிரியரை மையமாகக் கொண்டுள்ளது என்கிறார். ஆசிரியர் துலங்குவது பற்றியே கூறப்படுகின்றது. மாணவர், கற்றல் மூலம் என்ன நடத்தைசார் மாற்றங்களைப் பெறுகிறார்கள் என்பது பற்றி மேலே குறிப்பிட்ட கற்பித்தல் நோக்கத்தில் குறிப்பிடப்படவில்லை.

இப்போக்கு தற்போது மாற்றமடைந்துவிட்டது. பின்வரும் உதாரணத்தைக் கவனியுங்கள்.

'மாணவர், வாக்கியங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தும் முறைக்கமைய, அவை கூற்றுவாக்கியம், வினாவாக்கியம், ஏவல்வாக்கியம், உணர்ச்சி வாக்கியம் என்னும் நான்கு வகைகளுக்குள் அடங்கும் எனக் கூறுவர்.'

இந்த இலக்கு மாணவரை மையமாகக் கொண்டுள்ளது. கற்றல் மூலம் மாணவரிடத்தில் நடத்தைமாற்றம் ஏற்படவேண்டும். இங்கு முன்பு அறிந்திராத ஒன்றைக் கற்று அறிந்து அதனை வெளிப்படுத்துவர். நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது.

இந்த நடத்தை மாற்றங்கள் தெளிவாகக் கண்டுகொள்ளக் கூடியனவாகவோ, அவதானிக்கக்கூடியனவாகவோ உள்ளன. நான்கு வகை வாக்கியங்களின் பெயர்களையும் மாணவர் கூறும்போது, தெளிவாக நடத்தைமாற்றத்தை அவதானிக்க முடிகிறது. எனவே, சிறப்பு நோக்கங்கள், மாணவர் நடத்தையில் ஏற்படும் அவதானிக்கக்கூடிய நடத்தை மாற்றங்கள் சார்பாக வரையறுக்கப்படுகின்றன.

கற்பித்தலின் பின்னர், விடயத்தை மாணவர் கற்றுள்ளனர் என்பதற்கு அத்தாட்சியாக, என்ன நடத்தைகளைப் புலப்படுத்திக் காட்டவேண்டும் என்பதனை இந்தச் சிறப்பு நோக்கங்கள் குறிப்பாக எடுத்துக்காட்டவேண்டும். நடத்தை மாற்றங்கள் கற்றலின் விளைவாக ஏற்படுபவை. அவை பிரத்தியட்சமாக மாணவர்களில் தெரியவேண்டும். இந்த வகையில் சிறப்பு நோக்கங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

சிறப்பு நோக்கங்கள், பாட அலகு/ உபஅலகு ஒன்றினைப் பொறுத்தமட்டில், மாணவரில் எதிர்பார்க்கப்படும் நடத்தை மாற்றங்கள் எவையெனக் குறிப்பாகவும், சுட்டிப்பாகவும் வரையறுத்துக் கூறல் வெண்டும் என்பதை நினைவிற் கொள்ளல் நன்று! இவை பொருத்தமான செயற்பாடுகளாக எழுதப்படும். பொது நோக்கங்களை அடியொற்றி யதாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் தாம் சிறப்பு நோக்கங்களை அடைந்துவிட்டனர் என்பதை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்கோ உணர்த்துவதற்கோ, என்ன செய்ய வேண்டும் என்ற வினாவிற்கு வரும் விடையாக சிறப்புநோக்கம் அமைதல் வேண்டும்.

சுருங்கக்கூறின், ஆசிரியர் என்ன செய்யப்போகிறார் என்பதையும், குறித்த விடயத்தைக் கற்ற பின்னர், என்ன நடத்தைசார் மாற்றத்தை மாணவர் பெற்று, வெளிப்படுத்திக் காட்டப்போகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டுவனவாகச் சிறப்பு நோக்கங்கள் அமைக்கப்பட வேண்டும்.

கற்பித்தல் சிறப்பு நோக்கங்கள் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியிருக்கும்.

1. நடத்தையை யார் துலங்கிக் காட்டுவர்? மாணவர் துலக்கிக் காட்டுவர். எனவே 'மாணவர்' எனும் பதம் முதலில் எழுதப்படவேண்டும்.

2. இரண்டாவதாக, மாணவர், குறிப்பாக என்ன செயலை/ நடத்தையைப் பிறர் அவதானிக்கக் கூடியதாக நிகழ்த்திக் காட்டவேண்டும் என்பதை வரையறுத்து தெளிவாக எழுதவேண்டும். இங்கு பயன்படுத்தப்படும் வினைச்சொற்கள், கண்ணுக்கோ, கருத்துக்கோ புலப்படுத்தக்கூடிய செயற்பாடுகளைச் சுட்டுவனவாய் அமைதல் வேண்டும். உதாரணமாக, கூறுவர், அட்டவணைப் படுத்துவர், இனங்காண்பர், வரைந்து காட்டுவர், விபரிப்பர், வர்ணிப்பர், குறிப்பிட்டுக்காட்டுவர், வேறுபடுத்துவர், சுருக்குவர், குறிப்பிடுவர் போன்ற வினைச் சொற்களையே பயன்படுத்த வேண்டும்.

(அ) மாணவர் ஆகுபெயர் பற்றி அறிந்துகொள்வர்.

(ஆ) மாணவர் ஆகுபெயரின் வரைவிலக்கணத்தை எடுத்துக் கூறுவர்.

(அ) இல் தரப்பட்ட சிறப்பு நோக்கத்தில் மாணவர் எவ்வாறு வெளிப்படுத்திக் காட்டுவர் என்பதில் தெளிவில்லை.

(ஆ) இல் உள்ள சிறப்பு நோக்கம் சரியாக எழுதப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மூன்றாவது அம்சம் விளைவு. அதாவது மாணவரின் செயல்/ நடத்தையால் ஏற்படவேண்டிய விளைவு/ நிகழ்வு/ பயன்.

**உதாரணம்:**

(அ) மாணவர் மூன்று காரணங்களைக் காட்டி விபீஷணன் இராவணனனை விட்டு விலகி இராமனிடம் சரணடைந்தமை பிழையானது என விவாதம் ஒன்றில் எடுத்துக் கூறுவர்.

(ஆ) மாணவர் பஞ்சபாண்டவர்கள் ஐவரையும் பெயர் குறிப்பிட்டு எழுதுவர்.

இதுவரை கற்ற மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியதாக மேற்கூறப்பட்ட உதாரணங்கள் உள்ளன

முதலாவது யார் என்பது- அதாவது மாணவர்.
இரண்டாவது செயலை அவதானிக்கக் கூடியதாக எவ்வாறு மாணவர் நிகழ்த்திக்காட்டுவது என்பது - அதாவது எடுத்துக் கூறுவர். பெயர் குறிப்பிட்டு எழுதுவர் எனும் வினைப்பதங்கள் பயன்படுத்தப்பபட்டுள்ளன.

மூன்றாவது விளைவு அல்லது நிகழ்வு. அதாவது நடத்தை மாற்றத்தின் விளைவாகத் தெரிந்து கொள்வன என்ன என்பது- விபீஷணன் இராவணனை விட்டு விலகி இராமனிடம் சரணடைந்தமை பிழையானது என்பதற்கு மூன்று காரணங்கள்; பஞ்ச பாண்டவர் ஐவரின் பெயர்கள்.

(4) நான்காவது அம்சம், நடத்தையை/ செயலை நிகழ்த்திக் காட்டும்போது தரப்படுகின்ற நிபந்தனைகள் அல்லது நிலைமைகள்:

**உதாரணம்:**

மாணவர், நாடாவில் பதிக்கப்பட்டுள்ள கதையை ஐந்து நிமிடங்களில் கேட்டு, கதையில் வரும் சம்பவங்களைத் தொகுத்து, இருபது நிமிடங்களில ஒருபந்தியில் எழுதுவர்.

இங்குதரப்பட்ட நிபந்தனைகள்: நாடாவில் பதிக்கப்பட்ட கதை கொடுக்கப்படும் என்பதும், கதையை ஒலிப்பதிவு நாடாவிலிருந்தே கேட்கப்பட வேண்டும் என்பதும் ஆகும். பின்னர் குறிப்பிட்ட செயல்களை ஆற்றுதற்கு வழங்கப்படும் நேரம் எவ்வளவு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) ஐந்தாவது அம்சம், விளைவின் பயனை அளவிடுவதற்கு விதிக்கப்பட்ட தரம் என்ன என்பதாகும்.

**உதாரணம்:**

நிறுத்தற்குறிகள் இன்றி, இருபது வாக்கியங்களை எழுதித் தரப்படுமிடத்து, மாணவர் ஒரு மணி நேரத்தில் குறைந்தது பதினைந்து வாக்கியங்களுக்குச் சரியான நிறுத்தற் குறிகளை இட்டு மீள எழுதுவர்.

மேலே உள்ள உதாரணத்தில் விளைவின் பயனை அளவிடுவதற்கு விதிக்கப்பட்ட தரம் என்னவெனில், "குறைந்தது பதினைந்து வாக்கியங்களுக்குச் சரியான நிறுத்தற் குறிகளை இடுவர்" என்பதாகும்.

தரம் என்பது இலக்கினை முழுமையாக எய்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அளவு.

ஏலவே வரைந்து கொள்ளப்பட்ட சிறப்பு நோககங்களுக்கேற்ப கற்பித்தல் அமைகின்றது. கற்பித்தல் வெற்றி பெற்றுள்ளதா? கற்றல் மூலம் மாணவரில் எதிர்பார்த்த நடத்தை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா, என்பவற்றிற்குரிய விடைகள் இறுதியில் இடம்பெறும் மதிப்பீட்டினால் அறியப்படும். தினமும் வகுப்பறையை விட்டு வெளியேறும்பொது, மாணவர், புதிய அறிவு, புதிய திறன்கள், புதிய மனப்பாங்குகள் என்பவற்றைச் சுமந்துகொண்டு வெளியேறுகின்றனர். இச்சுமை விரும்பி ஏற்கும் சுமையே. நாளாந்தம் அதிகரிக்கும் இச்சுமையினால் ஏற்படுவது கல்வி விருத்தியேயாகும். கல்வி விருத்தியை நடத்தை மாற்றம் என்பர். கல்வியின் பிரதான நோக்கம் மாணவர்களில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவதேயாகும். கற்பித்தல் நோக்கங்கள் வகுத்துக் கொள்ளப்படவேண்டியதன் அவசியம் இப்பொழுது விளங்குகின்றதல்லவா?

## 5.0 சாராம்சம்

கல்விச் செயன்முறைகளான கற்பித்தல், கற்றல், மதிப்பீடு என்பவை நோக்குடைச் செயற்பாடுகள்.

இக்கல்விச் செயற்பாடுகள் மூலம், கற்போனில் நடத்தை மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

முன்பு அறிந்திராத ஒன்றைக் கற்றபின் அறிந்து அதனை வெளிப்படுத்துகிறான் மாணவன். இங்கு மாணவனில் நடத்தை மாற்றம் நிகழ்கின்றது.

நடத்தை மாற்றங்கள்–அறிவு,திறன், மனப்பாங்கு சார்ந்தவை. மாணவர்களில் இவை சமநிலையில், ஒருங்கிசைந்து வளர்ச்சி பெறும்போது ஆளுமை விருத்தி ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகற்பித்தல், கற்றல் என்பவையும் நோக்குடைச் செயற்பாடுகளே. எனவே நோக்கங்கள் அவற்றிற்கும் உண்டு என்பதைப் பார்த்தோம்.

மொழி கற்பித்தலின் நோக்கங்கள் பயன்பாடு சார்ந்தவையாகவும், பண்பாடு சார்ந்தவையாகவும் உள்ளன.

மொழி கருத்துப் பரிமாற்றச் சாதனம். மொழித்திறன்களை மாணவர்களில் விருத்தி செய்தல், மொழிகற்பித்தலின் பயன்பாட்டு நோக்கமாகும்.

மொழித்திறன்கள் மொழியை முகாமை செய்யும் திறன்களைத் தருகின்றன. மொழியை முகாமை செய்யத் தெரிந்தவனிடமே மொழியாட்சி உண்டு: மொழியைச் செவ்வையாகக் கையாளுகின்றான். மொழியை வீண் விரயமின்றிப் பயன்படுத்துகிறான். இதனால் உச்சப்பயனை அடைகின்றான். தொடர்பாடல் பயன்தரும் வகையில் அமைகின்றது. ஆக்கம், படைப்புக்கள் என்பனவும் நிகழ்கின்றன.

இலக்கியவளம், இலக்கணவளம், பண்பாட்டுவளம் என்பன தமிழ்மொழிக்கு உண்டு. இவற்றை மாணவர் அறிதல், தெளிதல், பேணுதல், வளமாக்குதல் என்பன மொழிகற்பித்தலின் பண்பாட்டு நோக்கங்களாகும்.

பாடத்திட்டம், பாடநூல்கள் என்பவை கற்பித்தலுக்கு அடிப்படையாக அமைந்த கருவிகள். அவை மொழி கற்பித்தலுக்கான பொது நோக்கங்களை வகுப்புவாரியாகத் தந்துள்ளன. வகுப்புக்களில் குறிப்பிட்ட பாடத்தையோ, விடயத்தையோ கற்பிக்கும்போது அதற்குரிய சிறப்பு நோக்கங்களை, பாட ஆயத்தத்தின் போது நிச்சயிக்கவேண்டிய பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்தது. சிறப்பு நோக்கங்களையே நடத்தை நோக்கங்கள் என்றும் போதனைக் குறிக்கோள்கள் என்றும் கூறுவர். சிறப்பு நோக்கங்கள், கற்பித்தல்-கற்றலை நெறிப்படுத்துவதற்கும் இறுதியில் மதிப்பீடு செய்வதற்கும் இன்றியமையாதன. மானவரின் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தாத கற்பித்தலினால் பயனில்லை என்பது உணர்த்தற்பாலது. சிறப்பு நோக்கங்களை வகுத்துக் கற்பிப்பதால் கற்பித்தல் பயனுள்ளதாக் கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 பிற்சோதனை

பின்வருவனவற்றுள், பொது நோக்கங்களையும், சிறப்பு நடத்தை நோக்கங்களையும் வேறுவேறாக இனங்கண்டு அட்டவணைப்படுத்துக.

01. அன்றாடக் காரியங்களுக்குத் தேவையான எழுதுதல், வாசித்தல், கருத்துப் பரிமாறல் ஆகியவற்றிற்கான திறனை விருத்திசெய்தல்.

02. இலக்கியச் செய்யுள்களை இரசிப்பதற்கான திறனை, மாணவரில் வளர்த்தல்.

03. மாணவர் கொடுக்கப்பட்ட ஒரு தொகுதி சொற்களுள், ஒருமைச் சொற்களையும், பன்மைச் சொற்களையும் வேறுபடுத்தி, இனங்கண்டு அட்டவணைப்படுத்துவர்.

04. மௌனமாக வாசித்துக் கிரகிக்கும் ஆற்றலை மாணவரில் வளர்த்தல்.

05. மாணவர், பேச்சு வழக்கில் தரப்பட்டுள்ள பத்து வசனங்களை, எழுத்து வழக்கில் எழுதிக்காட்டுவர்.

06. மாணவர் பாடப்பகுதியில் வருகின்ற இராமாயணக் கதாபாத்திரங் களின் பெயர்களையும் அவர்களுக்கிடையேயுள்ள உறவுமுறைகளையும் எடுத்துக்கூறுவர்.

07. மாணவர்களின் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்தல்.

08. மொழி வழியாக, மாணவரின் ஆளுமையை வளர்த்தல்.

09. மாணவர் புதிதாகப் படைக்கும் ஆற்றலை, விருத்தி செய்தல்.

10. பாடப்பகுதியில் வருகின்ற கடின சொற்கள்,சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள் ஆகியவற்றின் பொருள்களைக் கூறுவர்.

## 7.0 விடைகள்

முற்சோதனை

(1) 3
(2) 1
(3) 1
(4) 3
(5) 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்சோதனை

| பொது நோக்கங்கள் | சிறப்பு/ நடத்தை நோக்கங்கள் |
|---|---|
| (1) | (3) |
| (2) | (5) |
| (4) | (6) |
| (7) | (10) |
| (8) | |
| (9) | |

## 8.0 ஒப்படைகள்

1. தமிழ்மொழி கற்பித்தலின் பொது நோக்கங்களுக்கும், சிறப்பு நடத்தை நோக்கங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

2. பாடநூலில் இடம்பெறுகின்ற பாடம் ஒன்றினைக் கற்பிக்கவுள்ளீர். அதற்குரிய பாட ஆயத்தஞ் செய்யும்போது, நீர் இனங்காணும் சிறப்பு / நடத்தை நோக்கங்களை முறைப்படி எழுதுக.

3. வாசித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்களின் விருத்தியைப் பொறுத்தவரையில், ஆண்டு 9 மாணவர் அடைந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற நடத்தை மாற்றங்கள் எவையென்பதை குறிப்பிடுக.

4. மொழிக்கல்வியின் பொது நோக்கங்களைப் பயன்பாட்டு அடிப்படையிலும், பண்பாட்டு அடிப்படையிலும் வகுத்துக்காட்டுக.

xxxxxxxxxxxxx



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் அத்தியாயம்
# அடிப்படை மொழித்திறன்களின் விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிப்படை மொழித்திறன்களின் விருத்தி**

**உள்ளடக்கம்** **பக்கம்**


1.0 அறிமுகம் ........ 39

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 39

3.0 முற்சோதனை ........ 40

4.0 அடிப்படை மொழித்திறன்களின் விருத்தி ........ 41

4.1 அடிப்படை மொழித்திறன்களும் அவற்றின் இயல்புகளும். ........ 41

4.2 இடைநிலை வகுப்புகளின் மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள் ........ 42

4.3 மொழித்திறன் பயிற்றும் முறைகள் ........ 49

4.4 மொழித்திறன் விருத்திக்கான இணைப்பாடவிதான செயற்பாடுகள். ........ 54

5.0 சாராம்சம் ........ 57

6.0 பிற்சோதனை ........ 58

7.0 விடைகள் ........ 58

8.0 ஒப்படைகள் ........ 60




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 அறிமுகம்

மொழியின் விருத்திக்கும், வளமான மொழிப்பிரயோகத்திற்கும் மொழித்திறன்களே வித்திடுகின்றன. கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய நான்கும் அடிப்படை மொழித்திறன்களாகும். இவற்றைப் பலவாறு விரிவுபடுத்தலாம்.

இடைநிலை வகுப்பு மாணவர்களின் மொழிவிருத்திக்கு, மொழித்திறன்களை எவ்வாறு விரிவுபடுத்திக் கற்பிக்கலாம் என்பதை இந்த அத்தியாயம் விளக்குகின்றது. நான்கு தலைப்புகளின் இவை ஆராயப்படுகின்றன.

* அடிப்படை மொழித்திறன்களும் அவற்றின் இயல்புகளும்.
* இடைநிலை வகுப்புகளின் மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்.
* மொழித்திறன் பயிற்றும் முறைகள்.
* மொழித்திறன் விருத்திக்கான இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

மொழித்திறன்களின் இயல்பு, அவற்றின் விருத்திச் செயற்பாடுகள், மொழித்திறன்களைப் பயிற்றும்போது ஆசிரியர் மேற்கொள்ளவேண்டிய வழிகாட்டல்கள், மாணவர்கள் நிறைவேற்ற வேண்டிய தொழிற்பாடுகள் என்பன இவ்வத்தியாயத்தில் விசேடமாக ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் ஆசிரியரின் நலன்கருதி, நாளாந்த மொழித்திறன் கற்பித்தலுக்கான ஒரு மாதிரிப்பாடக்குறிப்பும் தரப்பட்டுள்ளது. வகுப்பறையில் மட்டுமல்ல, வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் மாணவர் மொழித்திறனை விருத்தி செய்வதற்கு ஆசிரியர் எவ்வாறு உதவலாம் என்பதும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

அவற்றின் அடிப்படையில் மாணவர்களின் தரத்திற்கும் தேவைக்கேற்ப ஆசிரியர் மொழித்திறன் கற்பித்தற் பணியைப் பலவாறு விரிவுபடுத்துப் பயனுள்ளவாறு அமைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# 2.0 சிறப்பு நோக்கங்கள்

* அடிப்படை மொழித்திறன்கைள இனங்கண்டு அவற்றின் இயல்புகளை விளக்குதல்.

* ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் மொழித்திறன் விருத்திக்கான படிமுறைச் செயற்பாடுகளை அட்டவணைப்படுத்துவர்.

* மொழித்திறன்களைப் பயிற்றுவதற்கான அணுகுமுறைகளையும், நுட்பங்களையும் விளக்குவர்.

* மொழித்திறன் விருத்தியை வழிப்படுத்த, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை எவ்வாறு இயைபுள்ளனவாக்கலாம் என்பதை விளக்குவர்.

AJ/Ch-3/FN/2p



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மாணவர்களின் அன்றாடமொழித்திறன் தேர்ச்சிஸ்ய மதிப்பீடு செய்வதற்கான முறைகளைக் கூறுவர்.

* மொழித்திறன் கற்பித்தலுக்கான பாடக்குறிப்பைத் திட்டமிட்டு எழுதுவர்.

## 3.0 முற்சோதனை

மொழித்திறன்கள் பற்றிய உங்கள் முன்னறிவைத் தொடர்புபடுத்துவதற்கு பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுங்கள்.

1. அடிப்படை மொழித்திறன்கள் எவை?

2. கருத்துக்களைக் கிரகிக்க உதவும் மொழித்திறன்கள் யாவை?

3. கருத்துக்களை வெளிப்படுத்த உதவும் மொழித்திறன்கள் எவை?

4. வாசித்தலின்போது பிளை தெரிந்திருக்க வேண்டிய மொழியின் இரு வடிவங்களும் எவை?

5. தொலைபேசியில் உரையாடும் போது பிரயோகிக்கப்படும் மொழித்திறன்கள் யாவை?

6. பின்வரும் தொலைத் தொடர்புச் சாதனங்களின் பயன்களைப் பெற நாம் எவ்வெம் மொழித்திறன்களைப் பயனப்டுத்துகின்றோம்?

   (அ) வானொலி
   (ஆ) செய்தித்தாள்கள்
   (இ) தொலைக்காட்சி

7. வகுப்பறைக் கற்றலின்போது மாணவர்களின் பயன்படுத்தும் மொழித்திறன்கள் எவை?

   (உங்கள் விடைகளை இவ்வத்தியாயத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.0 அடிப்படை மொழித்திறன்களின் விருத்தி

## 4.1 அடிப்படை மொழித்திறன்களும் அவற்றின் இயல்புகளும்

மொழி ஒரு கருத்துப் பரிமாற்ற ஊடகம். தகவல்களை அறிய உதவுவது; தகவல்களை வெளிப்படுத்த உதவுவது; சிந்தனையின் ஊடகம்; அறிவின் சேமிப்பு; ஆக்கங்களின்கருவி ,என முன்பு கற்றுள்ளீர்கள். மொழியின் இப்பணிகளையெல்லாம் இரு செயற்பாடுகளில் அடக்கி கூறலாம்.

1. கிரகித்தல் (உள்வாங்கல்) (Comprehension)
2. வெளியிடல் (Expression)

இவ்விரண்டு செயற்பாடுகளும் இணைந்ததே மொழிப்பிரயோகம் எனலாம். மொழியின் பிரதான வடிவங்கள் இரண்டு. அவையாவன :


1. ஒலி வடிவம்
2. வரி வடிவம்

இவ்விரண்டு வடிவங்களுமே மொழியின் கிரகித்தல், வெளியிடல் பணிகளின் ஊடகங்களாகின்றன. கிரகித்தல் வெளியிடல் ஆகிய பணிகளை, ஒலி வரி வடிவங்களுக்கூடாகச் சிறப்புற இயக்குவதற்கு அடிப்படையாக அமையும் திறன்களே மொழித்திறன்கள் எனப்படும் அவையாவன :

கேட்டல் - Lislening
பேசுவது - Speech
வாசித்தல் - Reading
எழுதுதல் - Writing

மொழி சார்ந்த செயற்பாடுகள் எல்லாவற்றையும் இந்த நான்கு அடிப்படைத்திறன்களிலும் அடக்கிவிடலாம். எனவே மொழியின் விருத்தி மொழித்திறன்களின் விருத்தியிலேயே தங்கியுள்ளதெனலாம். கேட்டல் வாசிப்பு திறன்கள் கிரகித்தலுக்கும், பேச்சு எழுத்து திறன்கள் வெளியிடுதலுக்கும் பயன்படும் அடிப்படைத் திறன்களாகும்.

இவற்றின் ஊடகம் ஒலி, வரி வடிவங்களாகும். இத்திறன்களின் ஒலி, வரிவடிவங்களாகும். இத்திறன்களின் ஒலிவரி வடிவங்களுக்கூடான பிரயோகத்தின் இயல்பினைப் பொறுத்தே கிரகித்தல் வெளியிடல் என்பவற்றின் ஆற்றல், தெளிவு, கருத்துணர்வு என்பன தங்கியுள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அமைப்பு மொழிப்பிரயோகத்திற்கு, மொழித்திறன்களின் இன்றிய மையாமையை விளக்குகின்றது. உதைபந்தாட்டத்தில் ஒரு வீரன் சிறப்புற ஆடவேண்டுமேயெனில், உதைபந்தாட்ட நுட்பங்களை அவன் தெரிந்திருத்தல் அவசியம். அவ்வாறே மொழியைக் கற்போரும் கற்பிப்போரும் மொழித்திறன்களில் தேர்ச்சி பெறவேண்டியது அவசியம்.

நீங்கள் இந்த மொடியூலில் ஆரம்ப இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கான மொழித்திறன்கள் பற்றியே கற்கவுள்ளீர்கள். இடைநிலை வகுப்பில் காலடி எடுத்து வைக்கும் எந்த மாணவனும் சாதாரண மொழிப் பிரயோகத்திலிருந்து சிறப்பான மொழி ஆற்றலைப் பெறவேண்டும். அவ்வாறு அவன் அடையவேண்டிய மொழித் தேர்ச்சிக்கு இயையவே மொழித்திறன் விருத்திக்கான செயற்பாடுகளும் பயிற்றும் முறைகளும் அமையவேண்டும் எனவே இடைநிலை வகுப்பு மாணவர்களின் மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகளை நீங்கள் நெறிப்படுத்துவதற்கு இடைநிலை வகுப்புகளின் மொழிப்பாடத்திட்டத்தையும், மொழி கற்பித்தல் நோக்கங்களையும் தெரிந்திருத்தல் அவசியம். (ஆண்டு 6 – 8, ஆண்டு 9 – 11 மொழிப் பாடத்திட்டத்திட்டதைப் பார்க்க.)

விதந்துரைக்கப்பட்ட மொழிப் பாடத்திட்டம், மொழி கற்பித்தல் நோக்கங்கள் என்பவற்றிற்கியைபாக, வகுப்பு வாரியாக, மொழித்திறன் கற்பித்தலை நாம் படிமுறைப்படுத்திக் கற்பிக்க வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்க.

**செயற்பாடு –1**

ஆண்டு 6 மாணவர்களுக்குப் பொருத்தமான ஒரு உரைநடைப் பந்தியைத் தெரிவுசெய்யுங்கள். மாணவர்களை அவதானித்துக் கேட்கும்படி கூறி அப்பந்தியை நீங்கள் ஒருமுறை வாசியுங்கள். அப்பந்தி தொடர்பில் சிறிய வினாக்கள் சிலவற்றைக் கேட்டுப்பாருங்கள். மாணவர்களைத் தனித்தனியாக விடையளிக்கப் பணிக்கவும். அவர்கள் அளிக்கும் விடைகளை ஆதாரமாகக் கொண்டு, கேட்டல், பேசுதல் திறன்களில் மாணவர்களுக்கிடையில் வேறுபாடுகள் உண்டா என்பதை கண்டறியுங்கள்.

## 4.2 இடைநிலை வகுப்பு மாணவர்களின் மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

மொழித்திறன்களின் இயல்புகள் பற்றி ஆராய்ந்தோம். கனிட்ட, சிரேட்ட இடைநிலை வகுப்புகளில் மொழித்திறன் ஒவ்வொன்றினது தாற்பரியத்தையும், அதனை வளர்த்துச் செல்வதற்கான செயற்பாடுகளையும் இங்கே ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேட்டல்

மொழியின் விருத்தி கேட்டற் திறனிலிருந்தே ஆரம்பிக்கின்றதெனலாம். வாக்கியங்கள், சொற்றொடர்கள், சொற்கள் எழுத்தொலிகள் என்பவற்றைக் கேட்டல் மூலமே இனங்காணுகின்றோம். மொழிவிருத்திச் சந்தர்ப்பங்களில் கேட்டல் திறனுக்கான சந்தர்ப்பமே அதிகம். இதனாலேயே "கற்றலிற் கேட்டல் நன்று" என்றும் "செல்வத்துச் செல்வம் செவிச்செல்வம்" என்றும் ஆன்றோர் கூறினர். பேச்சுகளைச் செவிமடுத்தல், வினாக்களுக்கு விடை கூறுதல், கலந்துரையாடல், கதைகேட்டல், நாடகம் பார்த்தல், பாடல்கள் கேட்டல், செவ்விகாணல், கருத்தரங்குகளிற் கலத்தல், விவாதங்களில் ஈடுபடுதல், விளக்கங்கள் கேட்டல் போன்ற பல சந்தர்ப்பங்களில் கேட்டல் திறனையே பயன்படுத்துகிறோம். கேட்டலின் பயன் கிரகித்தலாகும். நாம் கேட்பவற்றை விளங்கிக் கிரகித்தால் மட்டுமே, கேட்டவை பற்றிய விளக்கம் இரசனை, உணர்வு என்பவற்றைப் பெறமுடியும். கேட்டலுக்கும் கிரகித்தலுக்குமிடையில் சில உளத்தொழிற்பாடுகள் நிகழ்கின்றன.

கேட்டல் → இனங்காணல் → விளங்கிக்கொள்ளல் → பகுத்தல் → தொகுத்தல் → சீர்தூக்கல் → கிரகித்தல் → சிந்தித்தல் → பதித்தல்.

எனவே கேட்கும்போது நன்கு கருத்தூன்றிக் கேட்க மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். கருத்தூன்றிக் கேட்பதன்மூலமே மாணவர் தம் மொழியாற்றலை விருத்திசெய்யவும், சிந்தித்தல், பகுத்தாராய்தல் முதலிய திறன்களையும் மேம்படுத்தலாம். கனிட்ட இடைநிலை வகுப்புகளில் கேட்டல் திறன் செயற்பாடுகள் பின்வரும் இலக்குகளைக் கொண்டமைதல் வேண்டும்.

(i) * ஒலிவேறுபாடுகளை (ளழல/ணன/றரட) அவதானித்துக்கேட்டல்.
* ஒலித்தல் வேறுபாடுகளின் (எடுத்தல், படுத்தல், நலித்தல்.) குறிப்பு பொருள்களை அறிந்து கேட்டல்
* கேட்டல் – கிரகித்தல்–துலங்குதல்.
* உணவு, மெய்ப்பாடுகள் முதலியவற்றை உணர்ந்துகேட்டல்

(ii) * தொடர்பாடற் குறிப்பினை உணர்ந்து கேட்டல்.
(நேரடியாகக் கேட்டு உணர்தல்.
கேட்டவற்றைக் குறிப்பால் உணர்தல்).
* உரையாடல்/ கலந்துரையாடல்களிற் பங்குபற்றக் கேட்டல்.

(iii) * ஒலியழுத்த வேறுபாட்டைக் கவனித்துக்கேட்டல்.
* பேச்சின் தொனிப்பொருளைக் கிரகித்தல்.
* திறனாய்வு நோக்கிற் கேட்டல்.

சிரேட்ட இடைநிலை வகுப்புகளிற் கேட்டலை ஒரு கலையாக வளர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) * நன்கனங் கேட்டல்.

* பண்பாக் கேட்டல்.

* உரைகாட்டிகளை இனங்காணல் (முகஞ்செய்தல், வலியுறுத்தல், மறுத்தல், மாறுதல், அழுத்தல், தெளிவுபடுத்தல், முதலியன)

(v) * சிந்தித்தலுக்காகக் கேட்டல்.

* தகவல்களுக்காகக் கேட்டல்.

* இரசித்தலுக்காகக் கேட்டல்.

* கருத்தரங்கு, விவாதம் முதலியவற்றை விமர்சன நோக்கில் கேட்டல். இவற்றின் அடிப்படையில் கேட்டலுக்கான செயற்பாடுகளை ஆசிரியராகிய நீங்கள் திட்டமிடல் வேண்டும். அவ்வாறே கேட்டலுக்கான பல சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

கட்டளை, பேச்சு, வினா, வாசிப்பு கலந்துரையாடல், பாடல், கதை நாடகம், உரையாடல், செவ்விகாணல், விவாதம், அறிமுகம், அறிவுறுத்தல், விளக்கம், விளம்பரம், அறிவித்தல் முதலியவற்றோடு, வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

**பேச்சு**

கேட்டலும் பேச்சும் ஒன்றிணைந்த திறன்களாகும். அடிப்படையில் கேட்டலிலிருந்த பேச்சு ஆரம்பிக்கின்றதெனலாம். நல்ல பாடல்களைக் கேட்டு நாமும் பாடுகின்றோம். நல்ல பேச்சுக்களைக் கருத்துக்களைக் கேட்பதன் மூலம் நயமாகப் பேசக்கற்றுக் கொள்கின்றோம்.

கேட்டல் ஒரு கிரகித்தல் ஊடகமாகும். ஆனால் பேச்சு ஒரு வெளிப்படுத்தல் ஊடகம். எமது எண்ணங்கள், உணர்வுகள், கருத்துக்கள் என்பவற்றையெல்லாம் பேச்சு மூலம் வெளிப்படுத்துகின்றோம். எமது கருத்தை ஒரு தகவலை உடனுக்குடன் நேருக்குநேர் வெளிப்படுத்தப் பேச்சுத்திறனே உதவவல்லது. கவர்ச்சியான பேச்சு நடையால், கேட்போரைக் கவரலாம். அத்துடன் நல்ல சமூகத்தொடர்பு பரஸ்பர உறவு, நல்லெண்ண மேம்பாடு என்பவற்றைப் பண்பான பேச்சுமூலம் வளர்க்க முடியும்.

வகுப்பறைக் கற்பித்தலிற் பேச்சு முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆசிரியர் மாணவர் உறவு, கற்பித்தலின் வெற்றி இப்பேச்சிலேயே தங்கியுள்ளது. எனவே ஆசிரியரது பேச்சு திருத்தமான உச்சரிப்பு, செம்மையான மொழிநடை, கருத்துப் பிரதிபலிப்பு, உணர்ச்சி வெளிப்பாடு, கவர்ச்சி என்பவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். நல்ல பேச்சுக்களைக் கேட்பதன்மூலம் சிறந்த பேச்சாற்றலை வளர்க்கமுடியும். மாணவர்களைப் பல்வேறு செயற்பாடுகளிலீடுபடுத்த, போதிய விளக்கமளிக்க, பேச்சே முக்கியமாகப் பயன்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு ஓர் உடனடித் தொடர்புகொள் கருவியாதலால், சந்தர்ப்பத்திற் கேற்றவாறு பேச்சுவழக்கிலும் பேசலாம். எனினும் உயர் மொழியாற்றலை வளர்த்தற்கேதுவாய் செம்மையான மொழிப்பிரயோகத்தை வளர்த்தலும் அவசியம்.

**பேச்சுத்திறன் செயற்பாடுகள்**
**கனிட்ட இடைநிலை**

i. * ஒலிவேறுபாடுகளை அனுசரித்துப் பேசுதல்.
* ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்துப் பேசுதல் (எடுத்தல், படுத்தல், நலித்தல்)
* கருத்தைத் தெளிவாகப் புலப்படுத்திப் பேசுதல்.
* மெய்ப்பாட்டு உணர்ச்சி, அபிநயம், என்பவற்றுடன் பேசுதல்.
* இசையுடன் பாடுதல்.
* பாத்திரமேற்றுப் பேசுதல்.

ii. * தொடர்பாடற் குறிப்பினை உணர்த்திப்பேசுதல்.
* உரையாடல்களிற் பங்குபற்றிப் பேசுதல்.
* விடயங்களை விளக்கிப் பேசுதல்.
* நயமாகப் பேசுதல்
* அவையடங்கிப் பண்பாகப் பேசுதல்.
* கருத்துக்களை வெளிப்படையாகவும், குறிப்பாகவும் உணர்த்திப் பேசுதல்.

iii. * ஒலியழுத்த வேறுபாட்டை உணர்த்திப் பேசுதல்.
* தொனிப்பொருள் புலப்படுத்திப் பேசுதல்.
* விமர்சித்துப் பேசுதல்.
* கருத்தொன்றை வலியுறுத்திப் பேசுதல்.

**சிரேட்ட இடைநிலை - பேச்சுக்கலையை வளர்த்தல்**

i. * அவையறிந்து பேசுதல்.
* அடக்கமாகப் பேசுதல்.
* உரைகாட்டிகளைக் கையாண்டு பேசுதல்.
* வர்ணித்துப் பேசுதல்.

ii. * மன்றங்களிற் பேசுதல்.
* கலந்துரையாடல், விவாதம், கருத்தரங்குகளிற் பேசுதல்.
* நாடகம் நடித்தல்.
* நயம்படப்பேசுதல்.
* விளக்கிப் பேசுதல்.
* வலியுறுத்திப் பேசுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. * நுணுக்கங்களைக் கையாண்டு பேசுதல்.
* கருத்தொழுங்குடன் பேசுதல்.
* தொலைபேசியிற் பேசுதல்.

### பேசுவதற்கான சந்தர்ப்பங்கள்

வினாக்கள் கேட்டல், விடைகள் கூறல், கலந்துரையாடல்,விவாதித்தல், ஒரு பொருள் குறித்துப்பேசுதல், செவ்விகாணுதல், கூட்டங்கள் மன்றங்களிற் பேசுதல்,அறிவுரைகூறுதல், பெரியோர் அறிஞருடன் பேசுதல், கதைகூறல், உரையாடுதல், நாடகம் நடித்தல், பாட்டுப்பாடுதல், விமர்சித்தல், விளக்கம் கூறுதல் போன்றன.

### வாசிப்பு

வாசித்தல், மொழியின் ஒலிவடிவத்தையும் வரிவடிவத்தையும் தழுவியது. சுயகற்றல், கிரகித்தல்,தகவல்சேகரித்தல் என்பவற்றிற்கு இட்டுச்செல்வது, வாசிப்பில் இருநிலைகள் உண்டு.

1. உரத்த வாசிப்பு.
– (வாசித்துப் பயிலுவதற்கும் - பிறர்கேட்பதற்கும் வாசிப்பது)
2. மௌன வாசிப்பு (சுயகற்றலுக்கு வாசிப்பது)

வாசித்தலின் நுட்பங்களையும் பொறிமுறையையும் அனுசரித்து வாசிப்பதற்கு ஆரம்பத்தில் உரத்த வாசிப்பே பயனுள்ளது. வாசித்தலிற் தெளிவு, திருத்தம், விரைவு என்பவற்றிற்கும் உரத்தவாசிப்பே அவசியம். அத்துடன் தகவல் தெரிவித்தல், அறிவித்தல், செய்திவாசித்தல், அறிக்கை வாசித்தல் போன்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் உரத்தே வாசிக்க வேண்டும்.

சுயகற்றலுக்காக வாசிப்பது மௌனவாசிப்பு எனலாம். அது மாணவர்களின் உயர்உளத் தொழிற்பாடுகளுக்கு இட்டுச்செல்லவல்லது. இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கு மௌனமாக வாசித்தலிற் கூடிய பயிற்சியளித்தல் வேண்டும்.

வாசித்தல் → விளங்கிக்கொள்ளல் → கிரகித்தல் → பகுத்தல் → சிந்தித்தல் → சீர்துக்கல் → நியாயித்தல் → துலங்கல் என்பன வாசித்தல் மூலம் பெறக்கூடிய ஆற்றங்களாகும். மௌனவாசிப்பிலும் பல வகைக்ள் உள.

1. மேலோட்டமாக வாசித்தல்.
2. கருத்தூன்றி வாசித்தல்
3. தகவல்களுக்காக வாசித்தல்.
4. நயப்பதற்காக வாசித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு ஒரு நோக்குடைச்செயல், வாசிப்பதற்குத் தெரிவுசெய்யும் சாதனங்களும் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவு செய்வனவாக இருத்தல் வேண்டும். தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்று, மாணவர்கள் வாசிக்க , வாசிக்க, அறிவும் மொழியாற்றலும் மேம்பாடடைகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

## வாசிப்புத்திறன் செயற்பாடுகள்
### கனிட்ட இடைநிலை வகுப்புகள்

1. * கேட்பவரைக் கருத்திற் கொண்டு வாசித்தல் (உரத்தவாசிப்பு) (உச்சரிப்பு நிறுத்தற், குறியீடு, பொருள்விளக்கம், மெய்ப்பாட்டு ணர்வு இசையுடன் பாடல் என்பன)

2. * சுயகற்றலுக்கு வாசித்தல் (மௌனவாசிப்பு) (பொருள் கிரகித்தல், சுவைத்தல், பொழுதுபோக்கு, அறிவைப் பெருக்குதல், சொற்களஞ்சியவிருத்தி, தகவல் சேகரித்தல்) பாத்திரமேற்று வாசித்தல்.

3. * வாசித்தல் மூலம் எண்ணக்கருவாக்கம் பெறல்.குறிப்புப்பொருள் உணர்தல், சிந்தித்தல்.
   * வாசித்தல்மூலம் நன்மனப்பாங்குகளை விருத்திசெய்தல்.

### சிரேட்ட இடைநிலை வகுப்புகள்

1. * உய்த்தறிதல்.
   * உசாவுதிறன்களை அனுசரித்தல்.
   * நூலகப் பயன்பாடு
   * பயன்பெற வாசித்தல்.

2. * குறிப்பெடுப்பதற்காக வாசித்தல்.
   * கருத்தூன்றி வாசித்தல்.
   * ஆய்வு நோக்கில் வாசித்தல்.
   * மொழிநடை விருத்திக்கு வாசித்தல்
   * ஆக்கங்களுக்காக வாசித்தல்.

3. * பாடல்கள், செய்யுட்களின் பொருளறிய வாசித்தல்.
   * அணிகளை விளங்க வாசித்தல்.
   * மேலோட்டமாக/ ஆழமான வாசித்தல்.

### வாசிப்புச் சாதனங்கள்

பாடநூல்கள், துணைநூல்கள், கதைகள்,நாவல்கள், பாடல்கள், கட்டுரைகள், அறிக்கைகள், விமர்சனங்கள்,கடிதங்கள்,ஆய்வுகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்து

இது வரிவடிவம் சார்ந்த ஒரு மொழித்திறன் ; ஏனைய அடிப்படை மொழித்திறன்களின் தேர்ச்சியை உள்ளடக்கியது. கருத்துக்கள் தகவல்களைக் கட்டுக் கோப்புடன் வெளிப்படுத்த உதவுவது. தூர இடத்துத் தொடர்பாடலுக்கு ஏற்றது; சிந்தனை கற்பனை என்பவற்றை உருவமைத்து வெளிப்படுத்த உதவுவது கலை இலக்கிய ஆக்கங்களின்கருவி. அறிவு தகவல் என்பவற்றின் பேணிவைத்தல் ஊடகம். எந்தத்தகவலையும் உறுதிப்படுத்த உகந்தது; நாளாந்த வாழ்க்கையிலும் பயன்படுவது; என எழுதுதலின் முக்கியத்துவத்தை விரித்துரைக்கலாம்.

வகுப்பறைக் கற்பித்தலில் எழுத்துப் பலவழிகளில் பயன்படவல்லது. மாணவர் தாம் கற்பவற்றை எழுத்து மூலமே சேமித்துப் பேணுகின்றனர். தமது ஆக்கங்களை எழுத்து மூலமே வெளியிடுகின்றனர். மேலும் இன்றைய பாடசாலை அமைப்பில் மாணவரது தேர்ச்சியை அல்லது அடைவை எழுத்து மூலமே மதிப்பிடுகிறோம். பொதுப்பரீட்சைகள், உயர்மட்டப் பரீட்சைகளும் எழுத்துமூலமே அமைகின்றன. மொழியின் ஏனைய திறன்களையும் எழுத்து மூலம் மதிப்பிடலாமெனக் கல்வியாளர்கள் கருதுகின்றனர். எனவே சிறந்த எழுத்தாற்றலை மாணவர்கள் மத்தியில் வளர்த்தல் உங்கள் மகத்தான பணியாகும்.

### எழுத்துத்திறன் செயற்பாடுகள்
### கனிட்ட இடைநிலை வகுப்பு

1. * வாசகர்களை நோக்கில் கொண்டு, தெளிவாகவும் கவர்ச்சியாகவும் எழுதுதல்.

   * எழுத்துப் பொறிமுறைகளிற் கவனஞ் செலுத்தல். (வடிவம், அளவு, உறுப்பு, குறியீடுகள், இடைவெளிகள், வாக்கிய ஆரம்பம், முடிவு, வரித்தொடக்கம் முடிவு என்பன)

   * எழுத்துப்பயிற்சிகள் (பார்த்தெழுதல், சொல்வதெழுதல், வினாக்களுக்கு விடைகள் எழுதுதல்)

   * சுதந்திரமாக எழுதுதல், சிந்திக்கும் ஆற்றலை விருத்திசெய்து எழுதுதல். (அனுபவங்கள் காட்சிகள், நிகழ்ச்சிகள், எண்ணங்கள் முதலியன)

   * தேவைக்கு ஏற்ப எழுதுதல் (சுருக்கம், விரிவு வினாக்களுக்கு விடை, கிரகித்தற் பயிற்சி, செய்யுளுக்குப் பொருள் என்பன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆக்கி எழுதுதல்.
  (கட்டுரை, கடிதம், அறிக்கை, உரையாடல், செய்திக்குறிப்பு, விளம்பரம், சுவரொட்டி, துண்டுப்பிரசுரம், சிறுகதை, பாடல்கள் முதலியன)

* கட்டுக்கோப்பாக எழுதுதல்.
  (வரையறை செய்தல், பந்திபிரித்தல், தொடர்புபடுத்தல் முதலியன)

## சிரேட்ட இடைநிலை

* எண்ணக்கரு சார்ந்த கருத்தைத் தெளிவாக வெளிப்படுத்தல்.
* குறிப்பறிய எழுதல்.
* அணிகள், வர்ணனைகள், மெய்ப்பாடுகள்தோன்ற எழுதல்.
* சொல்லாட்சியும், சிறந்த மொழியாட்சியும் மிளிர ஆக்கங்களை எழுதல்.
* கருத்துக்களை நிலைநிறுத்தி எழுதல்.
* விமர்சித்து எழுதல்.

### எழுதுவதற்கான சந்தர்ப்பங்கள்

வினாக்களுக்கு விடைகள், கிரகித்தற் பயிற்சிகள், பரீட்சைகள் மன்ற நிகழ்ச்சிகள்,பாடசாலைப் போட்டிகள், சுவர்ப்பத்திரிகை, பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றன.

இதுவரை கனிட்ட, சிரேட்ட இடைநிலைத் தரங்களில் மொழித்திறன்கள் பயிற்றுதலுக்கான பல்வேறு செயற்பாடுகளை ஆராய்ந்தோம். இச்செயற்பாடுகளின் அடிப்படையில் ஆசிரியர்தாம் மேற்கொள்ளவிருக்கும் கருமங்கள், முன்கூட்டியே திட்டமிட்டு ஒழுங்கமைத்துக் கொள்ளுதல் நன்று. மாணவர்களின் வகுப்பு உயர உயர, மொழித்திறன்களின் உள்ளார்ந்த திறனும் வளர்ந்து செல்ல வேண்டும்.

### செயற்பாடு - 2

ஆண்டு 8 மாணவர்கள் பின்வருவனவற்றை அனுசரித்துப் பேச வழிநடாத்தி அவற்றில் அவர்கள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் கண்டறிக.

(அ) ஒலி வேறுபாடுகளை அனுசரித்துப் பேசுதல்.
(ஆ) மெய்ப்பாட்டுணர்வு தோன்றப் பேசுதல்.

## 4.3 மொழித்திறன் பயிற்றும் முறைகள்


மொழித்திறன்கள் பற்றியும், இடைநிலை வகுப்புகளில் அவற்றை விருத்திசெய்வதற்கான செயற்பாடுகள் பற்றியும் ஆரயர்ந்தோம். மொழித்திறன் விருத்திக்கான செயற்பாடுகளை, எவ்வாறு பயிற்றுவது என்பதைத் தொடர்ந்து ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைநிலை வகுப்புகளில் மொழிகற்பித்தல் முறைகளையே நீங்கள் கற்கவேண்டியிருப்பினும், ஆரம்ப வகுப்புகளில் மொழிகற்பிதல் உத்திகளின் அடிப்படை அம்சங்களை நீங்கள் தெரிந்துகொள்வது நன்று.

ஆரம்ப .வகுப்புகளில் திறன்க்ள் அடிப்படையிலேயே மொழிகற்பித்தல் வளர்த்துச் செல்லப்படுகின்றது.




மொழித்திறன்கள் விருத்திமூலம் மொழித்தேர்ச்சி பெற வழிநடாத்தப் படுகின்றனர். பரிமாற்ற முறை பெரும்பாலும் செயற்பாடுகள் சார்ந்தவை. செயற்பாடுகள், தனியாகவும் குழுவாகவும் அமைகின்றன. செயற்பாடுகள் மாணவர்கள் விருப்பத்திற்குரியனவாயிருக்கும். அவர்கள் சுயமாக ஈடுபடும் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டனவாக, உரிய கற்பித்தல் சாதனங்களைக் கொண்டனவாக அமையும். கற்பித்தலுக்கான வழி காட்டல்கள் பெரும்பாலும் .விளையாட்டுமுறை, ஒப்படை வழங்கல், கண்டறிமுறை, என்பன தழுவியனவாக அமையும். பிள்ளையின் மொழியிலேயே ஆரம்பிக்கும் கற்பித்தல். படிப்படியாக சீர்மை பெற்ற மொழியில் வளர்ச்சியடைதற்கு வழிகாட்டுவதாக அமையும்.

ஆரம்பவகுப்புகளின் தேர்ச்சியின் அடிப்படையைத் தழுவியே இடைநிலை வகுப்புகளின் மொழிகற்பித்தல் அமையவேண்டும். மாணவர்களுடைய தரம், தேர்ச்சி என்பவற்றை அனுசரித்து மொழித்திறன் விருத்திக்கு வழிகாட்டவேண்டும். இடைநிலை வகுப்புகளில் இருநிலைகளில் மொழித்திறன் விருத்திக்கு வழிகாட்டலாம்.

1. தனியாக மொழித்திறன்களைப் பயிற்றல்.
2. பாடநுல் விடயப் பரப்புகளினூடாக மொழித்திறன்களை விருத்திசெய்தல்.

மொழித்திறன்களைத் தனியாக பயிற்றுதல் இடைநிலை வகுப்புகளிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதிகமான ஆசிரியர்கள் இவ்வலகைக் கற்பித்தலில் அதிக கவனஞ் செலுத்துவதில்லை. குறிப்பாக, கேட்டல், பேசுதல் போன்ற திறன்கள் , பாடநூல் விடயங்களைக் கிரகிப்பதற்காக வேயன்றி அவ்வவற்றின் திறன் விருத்தி நோக்கிக் கற்பிக்கப்படுவதில்லை. உதாரணமாகக் கேட்டலின் போது மாணவர்கள் பல நுட்பங்களை அனுசரிக்கவேண்டும். அவதானித்துக்கேட்டல், கேட்டவற்றை விளங்கிக் கிரகித்தல், சீர்தூக்கல், சிந்தித்தல், மெய்ப்பாடுகளை உணர்தல், குறிப்புப் பொருள்களை உணர்தல், ஒலிவேறுபாடு, ஒலித்தல் வேறுபாடுகளை இனங்கண்டு பொருளுணர்தல், திறனாய்வு முறையிற் கேட்டல், தகவல்களுக்காகக் கேட்டல், பண்புடன் கேட்டல் என்பன கேட்டல் திறனில் அடங்கும் உளத் தொழிற்பாடுகளாகும். இவற்றை விருத்தி செய்வதற்குப் பல செயற்பாடுகளை ஆசிரியர் திட்டமிட்டு மாணவர்களை ஈடுபடுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவிடை, கலந்துரையாடல், செவ்விகாணல்போன்ற கற்பித்தல் முறைகளுடன் மன்றங்கள், விவாதங்கள்போன்ற செயற்பாடுகளையும் ஆசிரியர் வழிநடத்தி கேட்டல் சார்ந்த திறன்களை விருத்திசெய்யலாம். ஆசிரியர் சிறிய பந்தியொன்றை வாசித்துக்காட்டி, மாணவர்கள் உய்த்துணர்ந்து விடையளிக்கத்தக்க வினாக்களைக் கேட்கும்போது, மாணவர்களின் கேட்டல் நுணுக்கம் வளர்ச்சியடைய ஏதுவாகும். உதாரணம் :

"மாங்காடு ஒரு சிறந்தபட்டினமாகும். அங்கு பல இனமக்களும் எதுவித பேதமுமின்றி வாழ்கின்றனர். பட்டினத்தின் மத்தியில் அழகான ஒரு மணிக்கூட்டுக் கோபுரமுண்டு. அதற்கு வடக்கிலும் தெற்கிலும் முறையே ஒரு மத்திய கல்லூரியும் மாவட்ட வைத்தியசாலையும் உண்டு ...." எனப் பந்தி தொடர்கின்றது.

உய்த்துணர்ந்து விடையளித்தற்கான சில மாதிரி வினாக்கள் வருமாறு.

1. மணிக்கூட்டுக் கோபுரத்தின் எப்பக்கத்தில் வைத்தியசாலை அமைந்துள்ளது?
2. மாங்காடு - என்ற நகரில் துறைமுகம் உண்டா?
   (உண்டு - துறைமுகத்தை உள்ளடக்கி நகரமே பட்டினமாகும்- ஏனையவை பட்டணம்)

இந்த மாதிரியைப் பின்பற்றி, மாணவர் தரம், வகுப்பு, என்பவற்றை அனுசரித்துப் பந்திகளின் கடினத்தன்மையையும் வினாக்களின் உய்த்தறி தன்மையையும் ஆசிரியரே தீர்மானித்துக் கொள்ளலாம்.

இவ்வாறே கலந்துரையாடல் ஒன்றை நடாத்தும்போது, உரையாடலிற் கூறப்படுபனவற்றை அவதானித்துச் செவிமடுத்தாலேயே கருத்துள்ள உரையைப் பகரலாம் என்பதைச் செயற்பாடுகள் மூலம் மாணவர்களை உணரவைத்தல் வேண்டும். எனவே கேட்டற்றிறன் விருத்திக்கான முறைகள் பெரும்பாலும் செயற்பாடுகள் சார்ந்தனவாக அமைதலே பொருத்தமானவை. மாணவர்கள் சலிப்படையாது கவர்ச்சியுடன் கருத்தூன்றிக் கேட்பதற்குச் செயற்பாடுகளே வழிகாட்டவல்லன.

கேட்டலும் பேச்சும் இணைந்த செயற்பாடுகள் என்பதை முன்னரே கண்டோம். எனவே கேட்டல் திறன் விருத்திக்கான செயற்பாடுகளின் போதெல்லாம், பேச்சுத் திறனையும் விருத்திசெய்யலாம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இருப்பினும், ஒலி நுணுக்கங்களையும் பேதங்களையும் தெளிவுற உச்சரித்து ஒலிப்பதற்குப் பிரத்தியேகமான பயிற்சிகள் வழங்கலாம்.
உ-ம் "பத்துரதன் புத்திரனின் மித்திரனின்
சத்துருவின் பத்தினியின் கால் வாங்கித்தேய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இதன் பொருள் - தசாதனின் மகன் இராமன் -
இராமனின் நண்பன் சுக்கிரீவன்
சுக்கிரீவனின் பகைவன் வாலி
வாலியின் மனைவி தாரை
தாரையின் கால் நிக்கினால் தரை (தரை)
எனவே தரையில் தேய்.)

அடுத்து பேச்சு, ஒரு வெளிப்படுத்தல் ஊடகம். எனவே மாணவர் தம் கருத்தைத் தெளிவுற வெளிப்படுத்துவதற்கும், எடுத்த கருத்தை வாதிட்டு நிலைநிறுத்துவதற்கும், இன்னும் பண்புடன் வெளிப்படுத்துவதற்கும் பொருத்தமான செயற்பாடுகளை ஆசிரியரே நெறிப்படுத்தல் வேண்டும். குறிப்புப் பொருளுணர்தல், குறிப்பறிந்து பேசுதல் என்பனவும் பேச்சுத்திறன் விருத்தியின் போது கவனிக்கவேண்டிய அம்சங்களாகும்.

அடுத்து வாசிப்புத்திறன் விருத்திக்கான முறைகளை ஆராய்வோம். வாசிப்பு ஒரு கிரகித்தல் ஊடகம். அதிலும் இடைநிலை வகுப்புகளில் பெரும்பாலும் மௌன வாசிப்பை வேண்டப்படுதவாகும். எனினும், விளம்பரம், அறிவித்தல், அறிக்கை, துண்டுப்பிரசுரம் என்பவற்றை மற்றையோர் கேட்பதற்காகத் தெளிவுற உச்சரித்து வாசிக்கவேண்டியதும் அவசியம். எனவே உரத்த வாசிப்பினும் வேண்டிய பயிற்சி அளித்தல் வேண்டும். விளம்பரங்கள், அறிக்கைகள் முதலானவற்றை மாணவர்கள் சேர்க்க அல்லது ஆக்க வழிநடாத்த அவற்றை முறையாக வாசிக்க வழிநடத்தலாம். உரத்த வாசிப்பின்போது, வாசிக்கும் பொறிமுறைய அனுசரித்தும், நிறத்தற்குறிகளை இனங்கண்டும் மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தியும் வாசிக்க வழிநடத்த வேண்டும். நாடகங்கள் உரையாடல்கள் போன்றவற்றை வாசிக்க வழிநடாத்துவதன் மூலம் கவர்ச்சிகரமாக இத்திறன்களை விருத்தியடையச் செய்யலாம்.

இடைநிலை வகுப்புகளில் மௌன வாசித்தலிற் கூடிய கவனஞ் செலுத்தவேண்டும். கிரகித்தல், தகவல்சேர்த்தல், உசாவுதல், விமர்சித்தல் போன்ற உளத்திறன்களுக்கும், அறிவைத்திரட்டுதல், இரசனை என்பவற்றிற்கும், இட்டுச்செல்லத்தக்கதாக மௌனவாசிப்பை நெறிப்படுத்த வேண்டும். மாணவர்கள் விரும்பி வாசிக்கக்கூடிய கதைகள் தழுவிய நுல்களையும் விஞ்ஞானம் புதுமைகள் கொண்ட நூல்களையும் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் வாசிக்கச் செய்தல் விரும்பத்தக்கது.

எழுத்துத்திறன் விருத்திக்கெனப் பாடத்திட்டத்திலே விதந்துரைக்கப்பட்ட சில எழுத்து வடிவங்கள் உண்டு. வினாக்களுக்கு விடை எழுதுதல், கட்டுரை கடிதம், சுருக்கம்,விளம்பரம், அறிக்கை, சிறுகதை, கவிதை போன்ற ஆக்கங்கள் எழுதல்,சாதாரணமாக இடைநிலை வகுப்புகளில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். இவையெல்லாம் மாணாவர்களுக்கு ஓர் சுமையாக அமையாமல், அவர்கள் விரும்பி எழுதக்கூடியவாறு வழிகாட்டப்படல் வேண்டும். எழுத்தாக்கங்கள் வாசிக்கப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைதிருத்தப்பட்டு, உரியவாறு பாராட்டப்படவும் வேண்டும். எழுதும்போது, பொறிமுறைக்குட்பட்டு, ஏற்ற குறியிடுகளை அனுசரித்து எழுதவும் வழிகாட்டுதல் அவசியம். சிந்தித்தல், வர்ணித்தல், தொகுத்தல், பகுத்தல், விமர்சித்தல் போன்ற எழுத்தாக்கத்திறன்களையும் கட்டி எழுப்புவதற்கு மாணவர்களை இட்டுச் செல்ல வேண்டும்.

இதுவரை மொழித்திறன்களைத் திறன்களாகப் பயிற்றுவதற்கான சில அணுகுமுறைகளை ஆராய்ந்தோம். அடுத்து பாடநூல்களைக் கற்பிக்கும்போதும் விடயங்களைக் கற்பிப்பதுடன் மொழித்திறன் விருத்தியையும் நோக்க வேண்டும். விடயக்கூறின் உள்ளடக்கத்தைப் பாதிக்காதவாறு இந்நோக்கம் எய்தப்படுதலே சிறந்தது. விடயக் கூறுகளைக் கிரகிப்பதற்கும் கிரகித்தவற்றை வெளிப்படுத்தும் போதும் மொழித்திறன்களே பயன்படுகின்றன. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் உரிய மொழித்திறன்களைச் செம்மையாகப் பிரயோகிக்க வழிநடத்துதலையே இது குறிப்பதாகும் உதாரணமாக விடயக் கூறொன்றினை நன்கு கிரகிக் வேண்டுமேயானால், அவதானித்துக் கேட்கவேண்டும், அல்லது கருத்தூன்றி வாசிக்கவேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களிலெல்லாம் கேட்டல், வாசித்தல் திறன்களின் நுணுக்கங்களை மாணவர்கள் அனுசரிக்க வழிப்படுத்தவேண்டும். அஃதே கருத்தொன்றை வெளிப்படுத்தும்போது பேச்சு, அல்லது எழுத்துத்திறன் நுணுக்கங்களைப் பிரதிபலித்தே வெளிப்படுத்த முடியும். எனவே பாடநூல் விடயக் கூறுகளைக், கற்பிக்கும்போது 'ஆசிரியர் மொழித்திறன் விருத்தி பற்றிய குறிக்கோளையும் கொண்டிருக்கவேண்டும் என்பதையே இது வலியுறுத்துகின்றது. அத்துடன் ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களும், பிள்ளைகளின் மொழிப் பயன்பாட்டின் செம்மையைக் கவனத்திற்கொள்ள மொழி கற்பிக்கும் ஆசிரியரே ஆலோசனை கூற வேண்டும்.

## செயற்பாடு

ஆண்டு 9 மாணவர்களுக்கு, உணவுப்பொருள் பற்றிய கவர்ச்சியான ஒரு விளம்பரத்தையும், பொதுவான ஒரு விடயத்தையும், தனித்தனி வாசித்துக்காட்டுங்கள். பின்பு ஒவ்வொன்றையும் தனித்தனி வாசித்துக்காட்டுங்கள். பின்பு ஒவ்வொன்றையும் பற்றி மாணவர்களிடம் வினாக்கள் கேட்டுப்பாருங்கள். விளம்பரத்திலா, விடயத்திலா மாணவர்களது கிரகித்தல் தன்மை கூட இருந்தது என்பதை ஆரய்ந்து பாருங்கள். இதற்குரிய காரணம் எதுவாக இருக்கலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.4 மொழித்திறன் பயிற்சிக்கான இணைப்பாடவிதான செயற்பாடுகள்

கற்றல் வகுப்பறைச் செயற்பாடுகளுடன் மட்டும் நடைபெறும் ஒன்றன்று. பாடத்திட்டத்துடன் மட்டும் கட்டுப்பட்டதன்று. அது பாடத்திட்டத்துடன் இணைந்த பல செயற்பாடுகளுடனும், இன்னும் பாடசாலைக்கு வெளியேயும் நடைபெறும் ஒன்றாகும். இது மொழித்திறன் கற்றலுக்கும் பொருந்தும். பாடசாலைக்கு வெளியே நடைபெறும் கற்றல் பெரும்பாலும் முறைமையில் கல்வி (Informal Education) சார்ந்ததாகும். நாம் இங்கு பாடத்திட்டத்துடன் இணைந்த செயற்பாடுகளில் மொழித்திறன்களை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பதையே ஆராய்வோம்.

சாதாரணமாக, ஒரு பாடசாலையிலே நடைமுறைப்படுத்தத்தக்க பாடத்துடன் இணைந்த செயற்பாடுகள் எவை என்பதை நோக்குவோம்.

* மாணவர் தேர்ச்சிச் சங்கங்கள் (மாணவர்மன்றம் - இலக்கிய மன்றம் போன்றன)
* பாடசாலை அமைப்புக்கள் (சாரணியம், முதலுதவி போன்றன)
* பாடசாலை வைபவங்கள் (விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா போன்றன)
* சமய நிகழ்ச்சிகள் ( நவராத்திரி, சிவராத்திரி, மீலாத் போன்றன)
* போட்டி நிகழ்ச்சிகள் (விவாதம், கட்டுரை,பேச்சு, பாட்டு போன்றன)
* பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியீடு.
* பாடசாலைக்கு வெளியிலான நிகழ்ச்சிகள் ( சுற்றுலா, வெளிக்கள ஆய்வு போன்றன)
* தேசிய நிகழ்ச்சிகள் (சுதந்திரதினம், தமிழ்த்தினப் போட்டி)

இவ்வாறு பாடத்திட்டத்துடன் இணைந்த பலவகையான நிகழ்ச்சிகள் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு குறிப்பிட்ட எல்லாவற்றையும் நீங்கள் உங்கள் பாடசாலைகளில் நிறைவேற்ற வேண்டும் என்பது நியதியில்லை. எனினும் பாடசாலையின் அமைவு, வளம், ஆளணி, என்பவற்றை அனுசரித்துக் கூடுமானவரை நிகழ்ச்சிகளைத் திட்டமிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாடவிதான நிகழ்வுகளில் மாணவர்களது ஈடுபாடும் பங்களிப்புமே அதிகமாக இருக்கும். மாணவர் வகுப்பறையில் தாம் பெறும் திறன்களையெல்லாம், அரங்கேற்றும் சந்தர்ப்பமாகவே இவை அமைகின்றன. மாணவர்கள் அரங்கேற்றும் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அங்கு மொழியே முக்கிய கருவியாகின்றது. எனவே மொழித்திறன்களின் பிரயோகமே அங்கு வேண்டப்படுவதாகும்.

உதாரணமாக மாணவர்மன்றம் ஒன்றினை எடுத்து ஆராய்வோம். அங்கு தலைவர் தலைமை வகித்துச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சிறப்பாகப் பேசுவார். செயலாளர் அறிக்கை வாசிப்பதோடு இன்றைய நிகழ்ச்சிகள் பற்றி அவதானித்துக் குறிப்புக்கள் எழுதுவார். மன்றத்தில் பேச்சுக்கள், பாட்டுக்கள், நாடகங்கள் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும். பத்திராதிபர் பத்திரிகை வாசிப்பார். சபையோராகிய மாணவர்கள் பண்புடனும் அவதானத்துடனும் நிகழ்ச்சிகளைச் செவிமடுத்து இரசிப்பர். இறுதியில் நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்புரையும் வழங்குவர்.

மாணவர் கழகமொன்றில் நடைபெறும் செயற்பாடுகள் எல்லாவற்றையும் அணுகி நோக்குவீர்களாயின், அங்கு மாணவர்களின், கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களின் தேர்ச்சியும் வேண்டப்படுவதாகும். மாணவர் கழகமொன்றில் ஒரு நிகழ்ச்சியை நிறைவேற்றுவதற்குக் குறிப்பிட்ட மாணவன் முன்கூட்டியே தயார்செய்து பயிற்சி பெற வேண்டும். அவ்வாறான பயிற்சியை ஆசிரியரே நெறிப்படுத்துபவராவார். எனவே வகுப்பறையைவிட இவ்வாறான சந்தர்ப்பங்களின் போதே மொழித்திறன்களைத் திருத்தமாகப் பிரயோகிக்கச் சந்தர்ப்பமேற்படுகின்றது. இதுபோன்று தான் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் மாணவர் தம் மொழித் திறன்களைத் திருத்தமாக வளர்த்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உண்டு.

இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் மொழித்திறன் பயிற்றுதலின் வெற்றி ஆசிரியர் வழிகாட்டலிலேயே தங்கியுள்ளதெனலாம். செயற்பாடொன்றினை நடைமுறைச் சாத்தியத்துடன் திட்டமிடுதலும் மாணவர்களை அதில் ஆர்வத்துடன் ஈடுபட வழிகாட்டிப் பயிற்சியளித்தலும் மொழி கற்பிக்கும் ஆசிரியரின் பொறுப்பாகும். அத்துடன் ஏனைய ஆசிரியர் மாணவர்களின் ஒத்துழைப்பையும் பெறுதல் அவசியம்.

உதாரணமாக சுவர்ச்சஞ்சிகையொன்று வெளியிடும் செயற்பாடொன்றை நோக்குவோம். சஞ்சிகையொன்றினை அச்சிட்டு வெளியிடுவதைவிட, சுவர்ச்சஞ்சிகையொன்றினைக் கையெழுத்துப் பிரதியில் வெளியிடுவது சாதாரணமாக எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு செயற்பாடாகும். ஆயினும் இதனையும் நன்கு திட்டமிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையின் அளவு, இடம்பெறும் ஆக்கங்களின் வகை, ஆக்கங்களின் பரிமாணம், தரம், எழுதும் மாணவர்களைத் தெரிவுசெய்யும் முறை, என்பன போன்ற அம்சங்களைத் திட்டமிடல் வேண்டும். எழுதும் மாணவர்களைப் பொறுத்தவரை எல்லா மாணவர்களுக்குமே சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். தேவையான இடத்து ஆக்கங்களை ஆசிரியர் நெறிப்படுத்த வேண்டும். தேவைக்கும் அதிகமாக ஆக்கங்கள் கிடைப்பின், அடுத்த இதழில் அவற்றைப் பிரசுரிக்கலாம். சுவர்ச் சஞ்சிகையொன்றினை வெளியிட்டால் மட்டும் போதாது. அவற்றை வாசிப்பதற்கும், விமர்சிப்பதற்கும் மாணவர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும். இங்கே அடிப்படையில் எழுத்து, வாசிப்பு, பேச்சு முதலான திறன்கள் பிரயோகப்படுவதை நீங்கள் அறிவீர்கள். எனவே இணைப்பாடவிதானச் செயற்பாடு எதுவாயினும் அதனை நன்கு திட்டமிடல் வேண்டும்.

பாடசாலைக்கு வெளியே செல்ல ஏற்படும் சுற்றுலா, வெளிக்கள ஆய்வு போன்ற செயற்பாடுகளின்போது, மாணவர்கள் பாடசாலைக்கு வெளியேயுள்ளவர்களுடனேயே தொடர்புகொள்ளவிருப்பதால், அத்தொடர்பு கொள்ளும் முறைகளையும் நெறிப்படுத்த வேண்டும். என்ன குறிக்கோளை மையமாகக் கொண்டு அச்செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றதோ, அக்குறிக்கோள் எய்தப்படுவதற்கு ஆவன செய்தல் வேண்டும். இங்கேயும் கேட்டல், பேச்சு, எழுத்து முதலான மொழித்திறன்கள் பிரயோகப்படுவதை உணர்வீர்கள்.

எனவே நன்கு திட்டமிடுதல் மூலமும், மாணவர்களை ஆர்வப்படுத்தல் மூலமும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலம் மொழித்திறன்களை நீங்கள் வளர்க்கலாம்.

### செயற்பாடு

உங்கள் பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஒரு தொழிற்சாலையை மாணவர்கள் பார்வையிடுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்க. தொழிற்சாலையைப் பார்வையிடும்போது மொழித்திறன்களை எவ்வெச் சந்தர்ப்பங்களில் எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதையும் திட்டமிடுக. பின்பு தொழிற்சாலையை மாணவர்கள் பார்வையிட வழிநடத்தி, மொழித்திறன் பிரயோகம் பற்றி ஓர் அறிக்கை சமர்பிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சாராம்சம்

கேட்டல், பேச்சு, வாசிப்பு எழுத்து என்பன அடிப்படை மொழித்திறன்களாகும். இம் மொழித்திறன்களின் விருத்தியிலேயே மொழியின் செழுமை தங்கியுள்ளதெனலாம். கேட்டல், வாசித்தல் - திறன்கள் கிரகிக்கவும், பேசுதல், எழுதுதல் - திறன்கள் கருத்தை வெளிப்படுத்தவும் உதவுவன.

இடைநிலை வகுப்புகளில் மொழித்திறன் கற்பித்தலுக்கான செயற்பாடுகள் படிமுறையில் அமையும். ஒவ்வொரு திறனுக்கும் செயற்பாடுகள் தனித்தனியாக இலகுவானவற்றிலிருந்து, உயர் உளத்தொழிற்பாடுகள் தழுவிய நிலைக்கு வளர்ந்து செல்லவேண்டும். மொழித்திறன்கள் தனித்தனியாகப் பயிற்றப்பட்டாலும், மொழிப் பிரயோகத்தின்போது, அவை தனித்தும் இணைந்தும் செயற்படுவன.

இடைநிலை வகுப்புகளில் மொழிகற்பித்தல் இருநிலைகளில் மேற்கொள்ளலாம்.

(1) திறன்களைத் தனியாகப் பயிற்றுதல்.
(2) பாடநூல் உள்ளடக்கத்துடன் மொழித்திறன்களைப் பயிற்றுதல்.

இருநிலைகளிலும் மொழித்திறன் தேர்ச்சியை ஏற்படுத்துவதே பிரதான குறிக்கோளாகும். மொழித்திறன்களைப் பெரும்பாலும், செயற்பாடுகள், கலந்துரையாடல், விளக்குதல் போன்ற முறைகளைக் கையாண்டு கற்பிக்கலாம். ஆயினும் மாணவர்களது தரம், பாடசாலைச் சூழல் கற்பிக்கும் விடயம், என்பனவற்றைப் பொறுத்தே மொழி கற்பிக்கும் முறை அமைதல் நன்று.

மொழித்திறன் தேர்ச்சியை வகுப்பறைகளில் மட்டும் கட்டுப்படுத்திவிட முடியாது. பாடசாலையில் நடைபெறும் இணைப் பாடவிதானச் செய்ற்பாடுகள் மூலமும் அவற்றை வளர்ப்பதற்கு முயற்சி எடுக்கலாம். பாடசாலைக்கு வெளியேயும் அவற்றை மேம்படுத்தத் திட்டமிடலாம். உரிய முறையில் மொழித்திறன்களில் தேர்ச்சியடையின், வளமாக மொழியைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.0 பிற்சோதனை

பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுங்கள்.

01. கேட்டல் மூலம் பெறும் தகவல்கள் நம்பகரமானவை எனத் தீர்மானிக்கப்படுவதற்கு நடைபெறும் உளத்தொழிற்பாடுகள் எவை?

02. இரசிப்பதற்காக மாணவர்கள் கேட்டல் திறனைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?

03. ஒலி வேறுபாடுகளிலிருந்து ஒலித்தல் வேறுபாடுகளை இனங்காட்டுக.

04. கேட்போரைக் கவருவதற்கு எவ்வகையான பேச்சு உதவவல்லது?

05. மாணவர்களிடம் பேச்சாற்றலை விருத்தி செய்வதற்கு ஆசிரியர் கையாளக்கூடிய செயற்பாடுகள் எவை?

06. இரசிப்பதற்கன்றிச் சுயகற்றலுக்காக வாசிக்கும்போது மாணவர்கள் மேற்கொள்ளவேண்டிய பணிகள் எவை?

07. ஏனையோருக்குத் தகவல் தெரிவிப்பதற்காக வாசித்தல் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

08. "எழுத்துப் பொறி முறை" என்பதன் மூலம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியன யாவை?

09. எழுதுந்திறன் மூலம் மாணவர் அடையக்கூடிய அனுகூலங்கள் யாவை?

10. மொழித்திறன்களை விருத்திசெய்வதற்கான பொதுவான இணைப்பாட விதானச் செயற்பாடுகள் யாவை?

## 7.0 விடைகள்

### 1. முற்சோதனை

1. கேட்டல், பேசுதல்,வாசிப்பு, எழுத்து.
2. கேட்டல் வாசிப்பு.
3. பேச்சு, எழுத்து.
4. வரிவடிவம், ஒலிவடிவம்
5. கேட்டல், பேச்சு
6. (அ) கேட்டல்
   (ஆ) வாசிப்பு
   (இ) கேட்டலும், வாசித்தலும்.
7. மொழித்திறன்கள் யாவும் (கேட்டல், பேச்சு,எழுத்து, வாசிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிற்சோதனை

01. கேட்டல், இனங்காணல், விளங்கிக்கொள்ளல், பகுத்தல், தொகுத்தல், கிரகித்தல், சிந்தித்தல்.

02. கதைகள், பாடல்கள் கேட்டல், நாடகங்கள் பார்த்தல், தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல் போன்றவை.

03. ஒலி வேறுபாடு-ல,ள,ழ, ற,ர,ட, ண,ன,ந
ஒலித்தல் வேறுபாடு- எடுத்தல், படுத்தல், நலித்தல்

04. கருத்துக்களைத் தெளிவாகப் புலப்படுத்தல், மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தல், பண்பாகப் பேசுதல், அவையறிந்து பேசுதல் என்பன.

05. வினாக்கள் கேட்டல், கலந்துரையாடல், விவாதங்கள் நடத்துதல், கதைகூறல், நாடகம் நடித்தல், விமர்சித்தல், பொருள்குறித்துப் பேசுதல் போன்ற சந்தர்ப்பங்கள்.

06. கருத்தூன்றி வாசித்தல், தகவல்களுக்கான குறிப்பெடுத்தல்.

07. செய்தி வாசித்தல், அறிவித்தல், வாசித்தல், அறிக்கை வாசித்தல், விளம்பரம் வாசித்தல்.

08. அமைப்பு, அளவு, முதலியவற்றுடன் குறியீடுகளை அனுசரித்து எழுதுதல்.

09. கருத்துக்களை வெளியிடல், ஆக்கங்களை வெளியிடுதல், அறிவு சேர்த்தல், சேமித்தல், தொடர்பு கொள்ளுதல் போன்றன.

10. பாடசாலையில் மன்றங்கள் விவாதங்கள், விழாக்கள், பாடசாலைக்கு வெளியில்- சுற்றுலா, வெளிக்கள ஆய்வு, செவ்விகாணல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.0 ஒப்படைகள்

பின்வரும் ஒப்படைகளைப் பூர்த்திசெய்து உங்கள் போதனாசிரியரிடம் சமர்ப்பிக்குக.

1. (அ) கனிட்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் எழுதுவதில் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை இனங்கண்டு அட்டவணைப் படுத்துக.

   (ஆ) இவ்விடர்ப்பாடுகளை நீக்குவதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விளக்குக.

   (இ) அவர்களின் எழுத்தாக்கத் திறனை விருத்தி செய்வதற்கு எவ்வாறு வழிநடத்துவீர்?

2. (அ) கனிஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் பேசும் ஆற்றலை விருத்தி செய்வதற்கு அனுட்டிக்க வேண்டிய நுட்பங்களை அட்டவணைப்படுத்துக.

   (ஆ) பேசும் ஆற்றலை விருத்தி செய்வதன் மூலம் மாணவர்களின் அறிவையும் ஆளுமையையும் எவ்வாறு மேம்படுத்தலாம்?

3. (அ) மொழித்திறன் விருத்தியில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் பங்கினை மதிப்பிடுக.

   (ஆ) முறைசாராக் கல்வி மூலம் மாணவர்கள் தம் மொழித்திறன்களை விருத்திசெய்யும் வழிவகைகளை ஆராய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் அத்தியாயம்

# வாசிக்கக் கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பக்கம்


1.0 அறிமுகம் ........ 63

2.0 சிறப்பு நோக்கங்கள் ........ 63

3.0 முற்சோதனை ........ 64

4.0 வாசிக்கக் கற்பித்தல் ........ 64

4.1 வாசிப்பும் அதன் முக்கியத்துவமும் ........ 64
4.2 ஆரம்ப வகுப்புக்களில் வாசிப்புக் கற்பித்தல் முறைகள் ........ 67
4.3 இடைநிலை வகுப்புக்களில் வாசிக்கக் கற்பித்தல் ...... 71
4.4 வாசிப்பதில் மாணவர் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளும் அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான போதனை முறைகளும் ........ 74

5.0 சாராம்சம் ........ 77

6.0 பிற்சோதனை ........ 78

7.0 விடைகள் ........ 79

8.0 ஒப்படைகள் ........ 80

9.0 கலைச்சொற்கள் ........ 80

10.0 மேலதிக வாசிப்பு நூல்கள் ........ 80




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

கற்றல் செயற்பாடுகளில் வாசித்தல் முக்கியமானதொரு செயற்பாடாகும். வாசிப்பதன் மூலம் நாம் பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்வதோடு, எமது அறிவு, திறன், மனப்பாங்குகளையும் வளர்த்துக் கொள்கின்றோம். சுய கற்றலுக்கும் பொழுதுபோக்கிற்காகக் கற்பதற்கும் வாசிப்பு ஒரு சிறந்த திறனாகும். இதனாலேயே "வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது" எனக் கூறப்பட்டுள்ளது. கல்வி கற்பதற்கும் செய்திப் பரிவர்த்தனைக்கும் தற்போதுள்ள சாதனங்களில் வாசிப்புச் சாதனங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. எனவே மாணவர்களிடம் சிறப்பாக வாசிக்கும் பயிற்சியையும் பழக்கத்தையும் ஏற்படுத்துதல் அவசியமாகும்.

வாசிப்பின் முக்கியத்துவம், வாசிப்பின் வகைகள், ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களில் வாசிப்புக் கற்பிக்கும் முறைகள் என்பவை பற்றி இம்மொடியூலிலே கற்கவுள்ளீர்கள். அத்துடன் வாசிப்பதில் மாணவர் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளையும், அவ்விடர்ப்பாடுகளை நிவர்த்திப்பதற்கான குறைநீக்கற் கற்பித்தல் அணுகுமுறைகளையும் ஆராயவுள்ளீர்கள்.

பல்வேறு விதமான வாசிப்புச் சாதனங்களை மாணவர்கள் இனங்காணவும் தமக்குத் தேவையானவற்றைத் தெரிவு செய்து வாசிக்கவும், வாசிக்குந் திறனை மேம்படுத்துவதன் மூலம் கற்கும் ஆற்றலை வளர்க்கவும் நீங்களே மாணவர்களை வழிநடத்த வேண்டியவராவீர்கள்.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

* வாசிப்பின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல்.
* பல்வேறு வகை வாசித்தல் முறைகளை இனங்காணல்.
* ஆரம்பவகுப்பு மாணவர்களுக்கான வாசிப்புக் கற்பித்தல், முறைகளை இனங்காணல்.
* இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கான வாசிப்புக் கற்பித்தல் நுணுக்கங்களை அறிதல்.
* வாசித்தலில் மாணவர்கள் பொதுவாக எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை இனங்காணல். நிவர்த்திப்பதற்கான முறைகளை அறிதல்.
* வாசிப்பை மேம்படுத்துவதற்கு வழிவகைகளைக் கண்டறிதல்.
* பல்வேறு வாசிப்புச் சாதனங்களையும் இனங்கண்டு, தேவைக்கேற்றவாறு தெரிவு செய்து வாசிக்குந் திறன் பெறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 முற்சோதனை

பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. பொருள் புலப்படுத்துவதற்கு ஏற்ற வாசிப்பு எது?

2. சுய கிரகித்தலுக்கு ஏற்ற வாசிப்பு வகை யாது?

3. "வாசிப்புப் பொறிமுறை" என்றால் என்ன?

4. வாசிப்புப் பொறிமுறையில் எவ்வாறு கண்களை நகர்த்திச் செல்ல வேண்டும்?

5. வாசித்தலில் "எழுத்தொலி முறை" என்றால் என்ன?

6. பாத்திரமேற்று வாசித்தல் - என்றால் என்ன?

7. சுவைப்பதற்காக வாசிப்பதற்குரிய உரைநடை வடிவங்களில் இரண்டினைக் கூறுக.

8. ஒலி வேறுபாடுகளை அனுசரித்து வாசித்தல் - இதில் ஒலிவேறுபாட்டிற்கு 2 உதாரணங்கள் தருக.

(இவ்வத்தியாயத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள விடைகளை உங்கள் விடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.)

## 4.0 வாசிக்கக் கற்பித்தல்

### 4.1 வாசிப்பும் அதன் முக்கியத்துவமும்

நாம் அன்றாடம் பல்வேறு வாசிப்புச் சாதனங்களை வாசிக்கின்றோம். பல்வேறு தேவைகளுக்காக வாசிக்கின்றோம். கற்றலுக்காக மட்டுமன்றி தகவல் திரட்டல், செய்திகள் அறிதல், தொடர்புகொள்ளல், இரசித்தல், பொழுதுபோக்கு என்பன அத்தேவைகளுட் சில. நூல்கள், சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள், வாராந்த மாதாந்த இதழ்கள், விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், அறிவித்தல்கள் என்றவாறு வாசிப்புச் சாதனங்களும் பலவகையின. ஒவ்வொரு வகை வாசிப்புச் சாதனங்களிலும் எத்தனை வடிவங்கள்? உதாரணமாக நூல்களை எடுத்தால் எத்தனை வகையான நூல்கள்? மொழி, இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, சமயம், தத்துவம் என்றவாறு ஒவ்வொரு துறைக்கும் பலபல நூல்கள் உள்ளன. அத்துடன் சிறுகதை, நாவல், கவிதை, காவியம் என்று எத்தனையோ இலக்கிய வடிவங்களும் உள்ளன. இவற்றைவிட வாசிப்பதற்கு வசதியளிப்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்நிலையங்கள், வாசிகசாலைகள் என்று பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் நிறுவப்பட்டுள்ளதையும் நீங்கள் அறிவீர்கள். பொதுவாக இன்றைய நிலையில் ஒவ்வொருவரது வீடுகளிலும் வாசிப்பதற்கான பல சாதனங்கள் இருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். இவற்றிலிருந்து இன்றைய நிலையில் மனித வாழ்வில் வாசிப்பு கொண்டிருக்கும் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றிருத்தல் போலவே வாசிப்பு பாடசாலைக் கல்வியிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மாணவர்களது கற்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு வாசிப்பு ஓர் இன்றியமையாத செயற்பாடு என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே வாசிக்கும் ஆற்றலை மாணவர்களிடம் விருத்தி செய்து அவர்களைக் கற்றலுக்கு நெறிப்படுத்தும் பாரிய பொறுப்பு மொழியாசிரியராகிய உங்களையே சாரும்.

வாசித்தல், பல நுட்பங்களையும் பொறிமுறையையும் கொண்ட ஒரு செயற்பாடு; பல வகைகளைக் கொண்டது; பல்வேறு தேவைகளுக்கேற்பப் பல்வேறு படிமுறைத் தன்மைகளையும் கொண்டமைந்தது. இவற்றையெல்லாம் ஒவ்வொரு ஆசிரியரும் நன்கு விளங்கிக் கொள்ளுதல் அவசியம்.

## வாசித்தல் பொறிமுறை

வாசித்தல் ஓர் உடல், உள இயக்கப் படிமுறைச் செயற்பாடு ஆகும். வரி வடிவத்திலுள்ள எழுத்துக்களைப் பார்த்தல், அவற்றை இனங்காணல், எழுத்தொலிகளைக் கொண்டு சொற்களை உச்சரித்தல், பொருள்படக்கூறல் என்றவாறு உடலுறுப்புக்களும் உள்ளமும் சேர்ந்து இயங்குவதைக் காணலாம்.

இங்கே கண்களின் தொழிற்பாடு மிக முக்கியமானதாகும். வரிவடிவங்களின் மீது கண்களை இடமிருந்து வலமாக வேகமாக நகர்த்திச் செல்ல வேண்டும். அவ்வாறு நகர்த்திச் செல்லும் போது வரிவடிவங்களை இனங்காண்பதோடு எழுத்தொலிகளைக் கூட்டியும் உச்சரிக்க வேண்டும். இவ்வியக்கங்கள் ஒரே நேரத்தில் நிகழ வேண்டும். எழுத்தொலிகளைக் கூட்டி உச்சரிக்கும்போது, பொருள் புலப்படுவதற்கான சில வரையறைகளையும் அனுட்டிக்க வேண்டும். இதுவே வாசித்தற் பொறிமுறையாகும்.

வாசித்தலில் இருநிலைகள் உண்டு.

1. பிறருக்காக வாசித்தல் - உரத்த வாசிப்பு - வெளியிடல்
2. தனக்காக வாசித்தல் - மௌனவாசிப்பு - கிரகித்தல்

வாசித்தலின் போது சில நுண்முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் பொருளைப் புலப்படுத்தவோ, அல்லது கிரகிக்கவோ முடியும். அவையாவன பின்வருமாறு.

* தெளிவாக உச்சரித்து வாசித்தல் - உரத்த வாசிப்பு.
* பொருள் புலப்பட வாசித்தல் - உரத்த வாசிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குறியீடுகளை அவதானித்து வாசித்தல் - உரத்த வாசிப்பு.
* மெய்ப்பாடுகள், தொனிவேறுபட வாசித்தல் - உரத்த வாசிப்பு.
* பாத்திரமேற்று வாசித்தல் - உரத்த வாசிப்பு
* பொருள் கிரகிக்க வாசித்தல் - மௌனவாசிப்பு.
* தகவல் திரட்ட வாசித்தல் - மௌனவாசிப்பு
* பொழுது போக்கிற்காக வாசித்தல் - மௌனவாசிப்பு
* நுணுக்கங்களை அனுசரித்து வாசித்தல் - மௌனவாசிப்பு.
  - உசாவு திறன்
  - நூலகப்பயன்பாடு
  - அகராதிப் பயன்பாடு
* தெரிவு செய்து வாசித்தல்
* வாசித்தலுக்காக வாசித்தல்.

தெளிவாக உச்சரித்து, விரைவாக வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்துவதற்குகந்த உரத்த வாசிப்பு, பெரும்பாலும் ஆரம்ப மட்டங்களில் மேற்கொள்ளப்படும். இடைநிலை வகுப்புகளிலும் உயர்மட்டக் கல்வி முறையிலும் உசாவுதிறனுடன் கருத்தூன்றி வாசித்தலே எதிர்பார்க்கப்படும். எனினும் விசேட சந்தர்ப்பங்களில், குறிப்பாக, அறிக்கை வாசித்தல், விளம்பரம் வாசித்தல், செய்தி வாசித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் உரத்த வாசிப்பே பயன்படும். கனிட்ட இடைநிலை வகுப்புகளிலே கிரகித்தலுக்கும், தகவல்கள் அறிவதற்கும், இரசித்தல் போன்றவற்றிற்கு மாணவர்களை வாசிக்கப் பழக்குதல் வேண்டும். சிரேட்ட இடைநிலை வகுப்புகளிலும் பயிலும் மாணவர்கள் உயர் உளத் தொழிற்பாடுகளை அனுசரித்து வாசிக்கப் பயிலவேண்டும்.

கற்றற் செயற்பாட்டில் வாசிப்பு பல நிலைகளில் பயன்படவல்லது என்பதை இப்போது நீங்கள் அறிவீர்கள். எனினும் வாசிப்பவர் தேவை நோக்கி, வாசிப்பின் தன்மையை 3 வகைகளாகப் படிமுறைப் படுத்தலாம்.

## 1. மேலோட்டமாக வாசித்தல்

இது பருமட்டாக மேலெழுந்தவாரியாக வாசித்தலைக் கருதும், முன்பு தெரிந்த விடயங்களை உறுதிப்படுத்த, குறித்த சில விடயங்களை ஞாபகப்படுத்த, பருமட்டாக தகவல்களை, அல்லது செய்திகளை விரைவாக அறிதற்கு குறித்ததொரு வாசிப்புச் சாதனத்தை வாசிப்பதற்கு, என்பன போன்ற நிலைகளில் மேலோட்டமான வாசித்தல் பயன்படவல்லது.

## 2. கருத்தூன்றி வாசித்தல்

கிரகித்தலுக்காக வாசித்தலைக் குறிக்கும் விடயங்களை நன்கு விளக்கி, மனதில் நிலை நிறுத்துவதற்காக மேற்கொள்ளும் வாசிப்பு முறையாகும். பெரும்பாலும் இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கும் உயர்கல்வியைப் பயில்வோருக்கும் இவ்வகை வாசிப்பே பயன்படவல்லது. தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரட்டுதல், குறிப்பெடுத்தல், தொடர்புகாணல், ஒத்துப்பார்த்தல் போன்ற கருத்தாழம் மிக்க செயற்பாடுகளையும் இவ்வாசிப்பு உள்ளடக்கவல்லது.

3. **திறனாய்வு நோக்கி வாசித்தல்**

கட்டுரை, சிறுகதை, நாவல் போன்றவற்றை இரசித்தலுக்காக மட்டுமன்றி திறனாய்வு நோக்கியும் வாசிப்பது வழக்கம். இவ்வாறு திறனாய்வு நோக்கிய வாசிப்பில் கருத்தூன்றி வாசிப்பதோடு கருத்துக்களைச் சீர்தூக்கி நோக்கியும் வாசிக்கப்படும். இலக்கிய விமரிசனம், நூல்விமரிசனம் போன்ற விமரிசனங்களில் ஈடுபடும்போது இவ்வகை வாசிப்பு பயன்தரவல்லது. சிரேட்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் விமரிசனம் நோக்கி வாசிப்பதற்கும் பயிற்றப்படல் வேண்டும்.

இதுவரை வாசிப்பு என்றால் என்ன, வாசிப்பின் பொறிமுறை, வாசிப்பு வகைகள், நுணுக்கங்கள், வாசிப்புச் சாதனங்கள், வாசிப்பின் முக்கியத்துவம் என்பன பற்றிக் கற்றீர்கள். தொடர்ந்து வாசிப்பு பயிற்றும் முறைகளை ஆராய்வோம்.

**செயற்பாடு**

1. வாசிப்புக்கான சாதனங்களை நூல்கள், தினசரிகள், சஞ்சிகைகள் என்ற தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தி அட்டவணைப்படுத்துக.

2. எவ்வெவ் தேவைகளை நோக்கி நாம் வாசிக்கின்றோம் என்பதை இனங்கண்டு அட்டவணை தயாரிக்குக.

## 4.2 ஆரம்ப வகுப்புக்களில் வாசிப்புக் கற்பித்தல்

வாசித்தலுக்கான பயிற்சி ஆரம்ப வகுப்புக்களிலிருந்தே படிமுறையில் கட்டி எழுதப்படல் வேண்டும். வாசிப்புக் கற்பித்தலுக்கான செயற்பாடு ஆரம்ப வகுப்புக்களில் இருநிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. வாசிப்பு முன்திறன் செயற்பாடுகள்
2. வாசிப்புச் செயற்பாடுகள்

**வாசிப்பு முன்திறன் செயற்பாடுகள்**

மாணவர்களை ஆண்டு 1 இல் வாசிப்பதற்குத் தயார்ப் படுத்துவதற்காக வழங்கப்படும் செயற்பாடுகள் முன் வாசிப்புச் செயற்பாடுகள் எனப்படும். அவை பலபடிகளில் அமையும்.

* பார்வைப் பிரித்தறிகை(Visual Discrimination)
* படங்களை வாசித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* படங்களைப் பார்த்துக் கதைகூறல்
* படங்களுடன் வாசித்தல்
* படங்களின்றி வாசித்தல்

என்றவாறு பல படிநிலைகளைக் கொண்டது. எழுத்துக்களை இனங்கண்டு அவற்றை ஒலிப்பதன்மூலம் வாசித்தலே பொறிமுறை வாசிப்பு எனப்படும். எனினும் ஆரம்பநிலையில் அது அவ்வாறு நடைபெறுவதில்லை. பொருட்கள், உருவங்களுக்கான சொற்களை வாசிப்பதன்முலம் ஒலிகளையும் எழுத்துக்களையும் இனங்காணும் ஒரு செயல் முறை ஆரம்ப நிலைகளிற் பின்பற்றப்படுகின்றது. வாசித்தற் செயன்முறை இயல்பாகவும் இலகுவான தாகவும் அமைவதற்கே இந்த அணுகுமுறை மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எல்லா எழுத்துக்களையும் ஆரம்பத்தில் மாணவர்கள் வரிக்கிரமமாக மனனம் செய்வதனால் அது அவர்களுக்கு ஒரு சுமையாக அமையலாம். அத்துடன் எல்லா எழுத்துக்களையுமே நாம் பிரயோகிப்பதுமில்லை.

சொற்கள் மூலமாக எழுத்துக்களை இனங்காணும்போது அது மாணவர்களிடம் ஒருவித ஆர்வத்தை ஏற்படுத்தவல்லது. வாசித்தல் முன்திறன் செயற்பாடுகள் பற்றிய பூரணமான விளக்கத்தினை நீங்கள் ஆண்டு 1 பாடத்திட்டத்தை வாசிப்பதன் முலம் அறிந்து கொள்ளலாம். எனினும் மாதிரிக்காகப் பார்வைப் பிரித்தறிகை பற்றி மேலோட்டமான படிமுறை விளக்கத்தினை இங்கே ஆராய்வோம்.

**பார்வைப் பிரித்தறிகை**

பார்வை மூலம் பொருட்கள் உருவங்கள், வடிவங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை இனங்காண்பதற்கு வழிநடத்தும் ஒரு செயற்பாடே பார்வைப் பிரித்தறிகையாகும். இதன்மூலம் எழுத்துக்களின் வடிவமைப்பை நுணுக்கமாக இனங்காண வழிநடத்தலாம்.

* ஒத்த உருவங்களுக்கிடையில் வேறுபாடுகளைக் கண்டறிதல் இந்த வேறுபாடுகள் பல நிலைகளிற் கண்டறியப்படலாம். குறைவு, கூடுதல், பருமன், நிலை, அளவு, திசை என்பவற்றின் அடிப்படையில் இவ்வேறுபாடுகளைக் காணலாம். ஒத்த எழுத்துக்கள் சொற்களிலும் இவ்வேறுபாடுகளைக் காணலாம்.
  (பார்க்க – "வரைவோம் எழுதுவோம் வாசிப்போம்" ஆரம்பக் கல்வி வெளியீடு)

* பொருத்துதல்: ஒத்த உருவங்கள், தொடர்புள்ள உருவங்கள்
  ஒத்த எழுத்துக்கள், தொடர்புள்ள எழுத்துக்கள்
  ஒத்த சொற்கள், தொடர்புள்ள சொற்கள்
  ஒத்த உருவமும் தொடர்புள்ள சொல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவாறு இதனை வளர்த்துச் செல்லலாம். வாசிப்பு முன்திறன் செயற்பாட்டின் இறுதி நோக்கம், சொற்களை இனங்காண்பதன் மூலம் எழுத்துக்களையும் அவற்றின் ஒலிகளையும் அறிதலாகும். (ஏனைய வாசிப்பு முன்திறன் செயற்பாடுகளையும் ஆண்டு 1 பாடத்திட்டத்தில் கண்டறிக.)

வாசிப்பு முன்திறன் செயற்பாடுகளுடன் பிள்ளைகள் வாசிப்பதற்கான திறன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒலிகளைச் சேர்த்து உச்சரித்து வாசிக்க வழிநடத்துவனவாக இவை அமைய வேண்டும்.

ஆரம்ப வகுப்புக்களிலே பெரும்பாலும் உரத்த வாசிப்பே சிறந்தது. எழுத்துக்களைத் தெளிவாக உச்சரித்து வாசிப்பதற்கு உரத்த வாசிப்பே வழிவகுக்கும். பிள்ளை சுயமாக எழுத்துக்களை இனங்கண்டு வாசிக்கத் தொடங்கியதும், வாசிப்பின் நுணுக்கங்களை அனுசரித்து வாசிப்பதற்கு வழிப்படுத்த வேண்டும்.

* எழுத்துக்களை நன்கு உச்சரித்து வாசித்தல்.
* ஒலி வேறுபாடுகளை அனுசரித்து வாசித்தல்
* ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்தல்.
* நிறுத்தற் குறிகளை அனுசரித்தல்.
* மெய்ப்பாடுகள் தோன்ற வாசித்தல்.
* பாத்திரமேற்று வாசித்தல்.

போன்ற நுணுக்கங்களை அனுசரித்து வாசிக்க வ்ழிநடத்த வேண்டும்.

ஆரம்ப வகுப்புகளில் வாசிப்புச் செயன்முறையை வழிநடாத்தும்போது சில படிமுறைகளையும் கவனத்திற் கொள்ளல் நன்று.

* பேசும்போது மாணவர்கள் கையாளுகின்ற சொற்களையே முதலில் வாசிக்க வழிநடத்தல்.

* வாசித்த சொற்கள் மீண்டும் மீண்டும் வரத்தக்கதாக வாசித்தற் பகுதி தெரிவு செய்யப்படுதல்.

* படிப்படியாக புதிய சொற்களை அறிமுகப்படுத்தல்.

* சொற்களஞ்சியத்தைக் கட்டியெழுப்புவதற்கு வழிநடத்தல்.

* பாடநூலை வாசிக்க வழிநடத்துமுன், ஆயத்தச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல்.

* சொற்கள், சிறுவாக்கியங்கள், வாக்கியங்கள், சிறுபந்திகள் என்றவாறு வர்சிக்கும் அலகினைப் படிமுறைப்படுத்தி வளர்த்துச் செல்லல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சொல்லட்டைகள், வாக்கியங்கள், துணைவாசிப்புச் சாதனங்கள் போன்ற வாசிப்புத் துணைக்கருவிகளைத் தாராளமாக மாணவர்கள் கையாளவும் வாசிக்கவும் சந்தர்ப்பம் வழங்கல்.

* வாசித்தல் தொடர்பான, செயற்பாடுகள், போட்டிகள், விளையாட்டுக்கள் போன்றவற்றைத் திட்டமிட்டு நடாத்தல்.

* பெயர்ப்பலகைகள், சுலோகங்கள், விளம்பரங்கள் போன்றவற்றை வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கல்.

* வகுப்புச் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த மாணவர்மன்றம், பாடசாலை விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளின்போதும் வாசித்தலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

ஆரம்ப வகுப்புக்களில் நெகிழ்வான முறையிலே கற்பித்தல் மேற்கொள்ளப்படுவதினால் ஏனைய பாடங்களின்போதும் வாசித்தலுக்கான சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். வாசித்தல் அவர்களுக்கு ஒரு சுவையான செயற்பாடாக அமையத்தக்கதாக ஆசிரியரே வழிப்படுத்த வேண்டும். (பார்க்க ஆசிரிய கைந்நூல் ஆண்டு 1, 2, 3)

ஆரம்ப மேற்பிரிவு வகுப்புக்களைப் பொறுத்தவரை, அதாவது நாலாம் ஐந்தாம் ஆண்டுகளில் கிரகித்தலுக்கு வழிப்படுத்தி வாசிக்குஞ் செயற்பாடுகளை வழங்கவேண்டும். இதற்கு எழுதுதலுடன் கூடிய வாசிப்புப் பயிற்சிகள் வழங்கப்படலாம்.

* வினாக்களுக்கு விடை எழுதுதல்.
* வினாக்களுக்கு விடை தெரிதல்.
* உரைநடைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.
* பாடப்பகுதியை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை காணல். போன்றவை
* இவற்றைவிட கதைகள், உரையாடல்கள், நாடகங்கள் போன்றவற்றையும் வகுப்பிலும், மாணவர்கள் சுயமாகவும் வாசிப்பதற்கு ஏற்ற வசதிகளை ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுத்தல் நன்று.

## செயற்பாடு

ஆண்டு 3, மாணவர்களது பாடப்புத்தகத்திலிருந்து ஒரு பந்தியைத் தெரிவு செய்க. அதை விட இலகுவான பந்தியொன்றையும் தெரிவு செய்க. இரண்டினையும் வெவ்வேறாக கடதாசி அட்டைகளில் தெளிவாக எழுதுக. கிட்டத்தட்ட 30 மாணவர்களிடம் தனித்தனியாக இவற்றை வாசிக்க வழிநடத்துக. மாணவர்கள் பிழைகளின்றியும், ஆர்வத்துடனும் எந்த உரைப்பகுதியை வாசிக்கின்றார்கள் என்பதைக் கண்டறிந்து அவற்றிற்கான காரணங்களை நியாயப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 இடைநிலை வகுப்புகளில் வாசிப்புக் கற்பித்தல்

ஆரம்ப வகுப்புகளிலே கேட்டல், வாசிப்பு, எழுத்து என்ற திறன்கள் அடிப்படையிலேயே மொழி கற்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இடைநிலை வகுப்புக்களில் பாடநூலை அடிப்படையாகக் கொண்டே மொழி கற்பிக்கப்டுகின்றது. அத்துடன் உரைநடை, செய்யுள், இலக்கணம், ஆக்கம் (கட்டுரை, கடிதம்) என்ற பகுப்பில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

வாசிப்பின் நுணுக்கங்களை அனுசரித்து இடைநிலை வகுப்பு மாணவர்களும் வாசித்தலிற் பயிற்சி பெற வேண்டியவராவர். மாணவர்களின் மொழித்தேர்ச்சி பற்றிய அண்மைக்காலத் தகவல்களிலிருந்து, இடைநிலை வகுப்பு மாணவர்களும் வாசித்தலில் இடருறுவதாக அறிய முடிகின்றது. எனவே கனிட்ட இடைநிலை வகுப்புக்களிலாவது திறன் வளர்ச்சி நோக்கிய வாசிப்புக்கு மாணவர் வழிநடத்தப்படவேண்டியது அவசியமாகும்.

### கனிட்ட இடைநிலை (6 – 8)

ஆரம்ப மேற்பிரிவு மட்டத்திலிருந்து ஓரளவு வளர்ச்சியடைந்த வாசிப்புத் தேர்ச்சி இவ்வகுப்புக்களில் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இவர்களுக்கான வாசிப்புக் கற்பித்தலின்போது பின்வரும் அம்சங்களை நோக்க வேண்டும்.

* பொறிமுறை வாசிப்புக்கு வழிநடத்தல்
* கிரகித்தலுக்கு வாசித்தல்.
* நுணுக்கங்களுடனான வாசிப்புக்கு நெறிப்படுத்தல்.

இவை பற்றிச் சுருக்கமாக ஆராய்வோம்.

### பொறிமுறை வாசிப்பு

இது மாணவர்களின் வாசிக்குந் திறனை மேம்பாட்டையச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடாகும். திருத்தமாகவும் தெளிவாகவும் உச்சரித்து பொருள் விளங்கவும் வேகமாகவும் வாசிப்பதனை இது குறிக்கும். பொறிமுறை வாசித்தற் பயிற்சியில் பின்வரும் அம்சங்களிற் கவனம் செலுத்துக.

* எழுத்துக்களை இனங்கண்டு ஒலித்து வாசித்தல்.
* ஒலி வேறுபாடுகளை அனுசரித்தல் (ல,ள,ழ, ற,ர,ட, ண,ந,ன)
* ஒலி வேறுபாடுகளை அனுசரித்தல் (எடுத்தல், படுத்தல், நலித்தல்)
* நிறுத்தற் குறிகளை அனுசரித்தல்.
* மெய்ப்பாடுகள் தோன்ற வாசித்தல்.

இவ்வம்சங்களை அனுசரித்து உரத்து வாசிக்க வழிநடத்துவதன் முலம், மாணவர்களைத் திருத்தமாகவும் தெளிவாகவும் வாசிக்க வழிநடத்த முடியும். இதற்கென முன்கூட்டியே சில வாசிப்புச் சாதனங்களை ஆசிரியர் திட்டமிட்டுத் தயாரித்துக் கொள்ள வேண்டும். தயாரிக்கப்படும் சாதனங்கள் குறித்தவொரு நுணுக்கத்தினை அடிப்படையாக் கொண்டு அமைதல் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ - ம்: . இன்று காலையில் வாழைத் தோட்டத்தில் ஒரு காளை மாட்டைத் துரத்தினேன் (ஒலிவேறுபாடு)
குழந்தை "அம்மா அம்மா" என்று அழுதது.
(மெய்ப்பாடு + நிறுத்தற்குறியீடு)

மாணவர்கள் திருத்தமாக வாசிக்கத் தொடங்கியதும் வேகமாக வாசிப்பதற்கு வழிநடத்த வேண்டும். மீண்டும் மீண்டும் வாசிக்கப் பயிற்றுவதன் மூலமே வாசிப்பின் வேகத்தை அதிகரிக்க முடியும். இதற்கு சிறிய வாக்கியங்களிலிருந்து நீளமான வாக்கியங்களையும், சிறிய சொற்களிலிருந்து பல எழுத்துக்கள் கொண்ட வாக்கியங்களையும், சிறிய சொற்களிலிருந்து, பல எழுத்துக்கள் கொண்ட சொற்களையும், படிப்படியாகக் கையாளலாம். அத்துடன் மாணவர்கள் வாசிப்பதற்கான சாதனங்களையும் சந்தர்ப்பங்களையும் அதிகரிக்க வேண்டும்.

**சாதனங்கள்**

* துணைவாசிப்பு நூல்கள் - கதைகள், கவிதைகள்.
  சிறுவர் சஞ்சிகைகள்
  சுவர்/ கையெழுத்துப் பத்திரிகைகள்
  விளம்பரங்கள்
  சுலோகங்கள்
  அறிவித்தல்கள்
  துண்டுப்பிரசுரங்கள் போன்றவை

**சந்தர்ப்பங்கள்**

* வகுப்பறை
* இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்
  (மன்றம், சமயநிகழ்ச்சி, விசேடவைபவம்)
* வெளிக்களக் கற்றல்
* வீடும்/ வீட்டுச் சூழலும்

இவற்றை விட மாணவர்கள் தமது பெற்றோருடன் செல்லும் இடங்களில் பொதுவாகக் காட்சிப்படுத்தப்படும் பெயர்ப்பலகைகள் அறிவித்தல்கள், விளம்பரங்கள் என்பவற்றையும் வாசிக்கத் தூண்டுதல் வேண்டும்.

இதுவரை திருத்தமாக வாசிப்பதற்கான பொறிமுறை சார்ந்த வாசிப்புப் பயிற்றும் முறைகளை ஆராய்ந்தோம். அடுத்து கனிட்ட இடைநிலை வகுப்புகளில் கிரகித்தலுக்காக வாசிக்கும் செயற்பாட்டினை வழிநடத்தும் வழிவகைகளை ஆராய்வோம்.

சுயமான கற்றலுக்கு மாணவர்களை வழிநடாத்தும் செயல்முறை கனிட்ட இடைநிலை வகுப்புகளிலேயே ஆரம்பிக்க வேண்டும். இதற்கு அடிப்படையாக வாசிப்பவற்றை நன்கு கிரகிப்பதற்கு மாணவர்களை வழிநடாத்த வேண்டும். இதற்கெனக் கிரகித்தலுக்கான பல தரப்பட்ட பயிற்சிகளை வழங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குறித்த ஒரு பாடப்பரப்பை வாசித்து வினாக்களுக்கு விடை கூறல்.

* குறித்த ஒரு உரைப்பகுதியை வாசித்தபின் பாராது வினாக்களுக்கு விடை எழுதல்.

* வினாக்களைக் கொடுத்து விடைகள் கண்டுபிடிப்பதற்காக வாசிக்க வழிநடாத்தல்.

* குறித்த ஒரு பகுதியை வாசித்த பின் அதனைச் சுருக்கி எழுதுதல்.

* பாடற்பகுதிகளைச் சொந்த உரைநடையில் எழுதுதல்.

இவைபோன்ற செயற்பாடுகள் வாசித்துக் கிரகித்தும் செயற்பாடுகளைத் தூண்டுவனவாக அமைதலை நோக்குக.

இவற்றைவிட வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், இரசனைக்காக வாசிக்கவும் பயிற்சியளிக்க வேண்டும். இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட வாசிப்புச் சாதனங்களான கதைகள், கட்டுரைகள், கவிதைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை மாணவர் வாசிக்க வசதியளிக்க வேண்டும். இவற்றோடு அறிக்கை வாசித்தல், செய்திவாசித்தல், விளம்பரம் செய்தல் ஆகியவற்றிலும் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

**சிரேட்ட இடைநிலை வகுப்புக்கள் (9 - 11)**

சிரேட்ட இடைநிலை வகுப்புக்களில், உயர்மட்ட வாசிப்புத் திறன்கள் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. கனிட்ட இடைநிலை வகுப்புகளில் கிரகித்தலுக்குக் கூறப்பட்ட வழிமுறைகளுடன் மேலதிகமான நுண்முறைகள் தழுவிய வாசித்தலுக்கும் நெறிப்படுத்த வேண்டும்.

* கருத்தூன்றி வாசித்தல் - உரைநடை, செய்யுள்.
* வெளிப்படைப் பொருள், குறிப்புப் பொருள் உணர்தல்.
* உசாவு திறன்களுக்காக வாசித்தல்.
* நூலகப் பயன்பாடு - அகராதி கலைக்களஞ்சியங்களைப் பயன்படுத்தல்.
* மேலோட்டமாக வாசித்தல் - தகவலறிதல், மனப்பதிவு பெறல்.
* வாசிப்பதன் மூலம் சொற்களஞ்சியத்தைப் பெருக்கல்.
  புதிய சொற்கள்
  ஒத்த சொற்கள்
  மரபுத் தொடர்கள் போன்றன
* குறிப்புகள் எடுத்து வாசித்தல் - தகவல் திரட்டல்.
* இன்பத்திற்காக வாசித்தல் - சிறுகதை, நாவல், கவிதை போன்றன.
* செய்திகள், தகவல்களுக்காக வாசித்தல் - செய்திப்பத்திரிகைகள் சஞ்சிகைகள்
* தெரிவு செய்து வாசித்தல் - குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்கு நூல்களைத் தெரிந்து வாசித்தல்.
* விமர்சன நோக்குடன் வாசித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைபோன்ற உயர் உளத் தொழிற்பாடுகளை அனுசரித்து வாசிப்புப் பயிற்சி இடம்பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு குறிப்பிட்ட வாசிப்பு முறைகள் எல்லாம் மௌன வாசிப்புச் சார்ந்தவையே. அதாவது தனக்காக வாசித்தலையே குறிப்பனவாகும்.

பிறருக்காக வாசிக்கும் பயிற்சியும் இவர்களுக்கு அவசியம். அறிக்கை, துண்டுப்பிரசுரங்கள், அறிவித்தல், சுற்றுநிருபங்கள் போன்றவற்றையும் தெளிவுற வாசிக்கும் ஆற்றலை இம்மாணவர்கள் பெறவேண்டும். இவற்றிற்கான சந்தர்ப்பங்களையெல்லாம் திட்டமிட்டு வழங்க வேண்டியது ஆசிரியர் கடமையாகும்.

சிரேட்ட இடைநிலை வகுப்பு மாணவருக்கு வாசிப்பதற்கான பல்வேறு சாதனங்களையும், சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு செய்தலே சிறந்த கற்பித்தல் அணுகுமுறையாகும். வாசிப்பில் ஆர்வத்தையேற்படுத்துவதற்குச் சுவையான கதைகள், பாடல்களை மாணவர்களுக்கு வழங்குவதுடன், மாணவர்கள் தாமாகவே வாசிப்பதற்குத் தூண்டத்தக்க செயற்பாடுகளையும் ஒழுங்கு செய்தல் நன்று.

தொலைக்கல்வி முறை முக்கியத்துவம் பெற்றுவரும் இக்கால கட்டத்தில், மாணவர்கள் சுயமாகவே வாசித்துக் கிரகிக்கும் ஆற்றலை இடைநிலை வகுப்புகளிலேயே வளர்க்க வேண்டும். அத்துடன் மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தியும் அவர்களது பண்பாட்டு வளர்ச்சியும், அவர்களின் வாசிப்புத் திறனிலேயே தங்கியுள்ளது எனலாம். எனவே சிறந்த முறையில் வாசிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்த வேண்டியது அவசியம்.

## 4.4 வாசிப்பதில் மாணவர் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளும், அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான போதனை முறைகளும்.

வாசிப்பதில் இடர்ப்பாடுகள் எனக் கூறுமிடத்து, பெரும்பாலும் ஆரம்ப வகுப்புக்களிலேயே இவை எதிர்பார்க்கப்படலாம். எனினும் அண்மைக்கால அவதானிப்புக்களிலிருந்து இடைநிலை வகுப்பு மாணவர்களும் வாசிப்பதில் இடருறுவதாக அறியக்கிடக்கின்றது. வாசிப்பில் இடர்ப்பாடு என்பது வாசிக்கவேண்டியவற்றை வாசிக்க முடியாமல் கஷ்டப்படுவதையே குறிக்கும். எனவே எந்த மட்டத்தில் மாணவர்கள் இருந்தாலும் இடர்ப்பாடுகளும் அவற்றிற்கான நிவர்த்தி முறைகளும் அதிகம் வேறுபட முடியா. பொதுவாக மாணவர்கள் எதிர்நோக்கும் வாசிப்பு இடர்ப்பாடுகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.

* எழுத்துக்களை இனங்காண முடியாமை.
எழுத்துக்களை இனங்காண முடியாவிட்டால், அவற்றை மாணவர்களால் ஒலிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எழுத்துக்களை இனங்கண்டாலும், எழுத்துக்கூட்டி உச்சரிக்க முடியாமை.

உ - ம்: கதிரை - கானா, தீனா, ரையன்னா எனக்கூறினாலும், "கதிரை" என உச்சரித்துக் கூற முடியாமை.

* உயிர்க்குறிகளுடனான எழுத்துக்களில் மயங்குதல்.

உ - ம்: கெ - கொ

கே - கோ

அதாவது மெய்யெழுத்துக்கள் உயிருடன் சேர்ந்து உயிர்மெய்களாகும் போது ஒலிவேறுபாடுகளில் மயக்கங்கொள்ளல்.

* ஒலிவேறுபாடு புரியாமல் எழுத்துக்களில் மயங்கல்.

ல, ள, ழ, ட, ர, ற, ண, ந, ன இவ்வெழுத்துக்களைக் கொண்ட சொற்களை மாறி உச்சரித்தல்.

* நிறுத்தற் குறிகளை அனுசரித்து வாசிக்கமுடியாமை. இது பொருள் வேறுபாட்டிற்கு வழிவகுக்கவல்லது.

* புணர்த்தியெழுதிய சொற்களை வாசிப்பதில் இடர்ப்படுதல்.

உ - ம்: யாதொன்றுமில்லை

* சொற்கள் துண்டாடி பொருள்விளக்கமின்றி வாசித்தல்.

உ - ம்: மரத்தைப்பி

- மரத்தைப் பிடுங்கினானே.

டுங்கினானே

இவைபோன்ற சில இடர்ப்பாடுகளை அடியொற்றி மாணவர்கள் வாசிக்க முடியாமற் திண்டாடுவதை நீங்களும் அவதானித்திருப்பீர்கள்.

இவ்வாறான இடர்ப்பாடுகளை நீக்குவதற்குரிய கற்பித்தல் முறைகள் குறைநீக்கற் போதனைகள் (Remedial Teaching) எனப்படும். எனவே மேலே குறிப்பிட்டவற்றின் குறைநீக்கற் போதனைகளை இனங்காண்போம்.

எழுத்துக்களை இனங்காண முடியாமைக்கு, எழுத்துக்களை இனங்காண்பதற்கான பயிற்சிகளையே வழங்க வேண்டும். எந்த எழுத்தில் மாணவன் இடர்ப்படுகின்றானோ அதே எழுத்தில் பல சொற்கள் வரத்தக்கதாக சொல்லாக்கி வாசிக்க, எழுத நடத்த வேண்டும்.

உ - ம்: "ஞ்" என்னும் எழுத்தை வாசிக்க இடர்ப்பட்டால்,

| | | |
|---|---|---|
| பஞ்சு | கஞ்சி | என்றவாறு சொற்களை ஆக்கி வழி நடாத்தி, வாசிக்கப் பணித்தல் வேண்டும். |
| மஞ்சு | பஞ்சி | |
| அஞ்சு | எஞ்சி | |
| குஞ்சு | விஞ்சி | |
| நஞ்சு | துஞ்சி | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட ஒரு உரைநடைப்பகுதியைக் கொடுத்து, குறித்த ஓர் எழுத்து எத்தனை முறை வந்தது என்பதை எண்ண வழிநடத்தலாம்.

எழுத்துக்கூட்டி உச்சரிக்க முடியாமைக்கு, முதலில் வரிவடிவங்களின் ஒலி வடிவங்களை இனங்காண வழிநடாத்த வேண்டும். பின்பு ஒலிவடிவங்களை சேர்த்து ஒலிக்கப் பயிற்ற வேண்டும். ஆரம்பத்தில் இரு ஒலிகள், பின்பு மூன்று, நான்கு என வளர்த்து பல பயிற்சிகளிலீடுபடுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| உ - ம்: | சனி | கண் |
| | சன்னி | கண்டி |
| | சன்னியாசி | கண்ணாடி |

உயிர் மெய் எழுத்துக்களில் உயிர்க்குறிகளை இனங்காண முடியாது எழுத்துக்களை ஒலித்தலில் மயக்கமுறுதல் சாதாரணமாகக காணக்கூடிய ஓர் இடர்ப்பாடாகும். இதற்கு ஒவ்வொரு குறியுடனும் எழுத்துக்களை ஆக்குவதற்கான செயற்பாடுகளை **(Letter Building)** முன்வைத்தல் வேண்டும்.

உ- ம்: கொ ொ + க + ா

அத்துடன் ஒரு உயிர்மெய் எழுத்தைக் கொண்ட பல சொற்களை வாசிக்க வழிநடத்தல்.

கேணி
கேலி
கேள்.
கேட்டல்
கேள்வி

பின்பு மாறி மாறி சொற்களை ஆக்கவும் வாசிக்கவும் வழிநடத்தல்.

உ - ம்: செட்டி, சேலை ———— சொண்டு, சோலை

ஒலி வேறுபாடுகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல், லளழ, டரற, ணநன போன்ற எழுத்துள்ள சொற்களை உச்சரிப்பதில் அதிகமான மாணவர்கள் இடருறுகின்றனர். சில சமயங்களில் ஆசிரியரும் மயக்கமுற வேண்டிய நிலை உண்டு. இக்குறைபாட்டினைப் போக்குவதற்கு, ஒலிப்பிறப்பியல் அடிப்படையில் அவற்றை உச்சரிப்பதற்குப் பயிற்ற வேண்டும்.

உ - ம்: ண - நாநுனி மேல் அண்ணத்தை வருடி ஒலித்தல்.
ன - நாநுனி பல்லின்கடியை வருடி ஒலித்தல்
ந - நாநுனி பல்லின் கடியை வருடி ஒலித்தல் - மொழிக்கு முதலில் வருவது.

நிறுத்தற் குறிகளை அனுசரித்து வாசிக்க முடியாமை, குறிப்பிடத்தக்க ஒரு குறைபாடன்று. தொடர்ச்சியான பயிற்சி வழங்குதல் மூலம் அவற்றை நிவர்த்திக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தலில் ஏற்படும் பொதுவான இடர்ப்பாடுகளுக்கு, மேலதிக தொடர்ச்சியான பயிற்சியே சிறந்த நிவாரணி எனக் குறிப்பிடலாம். இடர்ப்பாடு எதனை அடியொற்றி ஏற்படுகின்றதோ, அதனை நிவர்த்திப்பதற்கான ஒரு அணுகுமுறையை மேற்குறிப்பிட்டனவற்றிலிருந்து ஆசிரியர் இனங்காணத்தக்கதாக இருத்தல் வேண்டும். இவற்றோடு வாசிப்பதற்கான சில விளையாட்டுக்கள் தழுவிய செயற்பாடுகளையும் முன்வைத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| பொருத்துதல்<br>ஒழுங்குபடுத்தல்<br>இடைவெளி நிரப்புதல்<br>சோடி சேர்த்தல் | சொல்லட்டைகள் தழுவிய செயற்பாடு |

இது எழுத்துக்களை இனங்கண்டு ஒலிக்க முடியுமாயினும் உடற்குறைபாடுகளினால், உச்சரித்து வாசிக்க முடியாமைக்கு வைத்திய சிகிச்சை பெறுதல் வரவேற்கத்தக்கது.

செயற்பாடு

ஆண்டு 4 மாணவர்கள் பொதுவாக வாசிப்பில் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் கண்டறிக. அவ்வாறே ஆண்டு 8 மாணவர்கள் வாசிப்பில் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் கண்டறிக. இருவகை இடர்ப்பாடுகளுக்குமிடையிலான வேறுபாடுகளைக் கண்டறிந்து விளக்குக.

## 5.0 சாராம்சம்

கல்வி சார்ந்த செயற்பாடுகளில் வாசிப்பு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடாகும். மொழித்திறன் விருத்திக்கு மட்டுமல்லாது ஏனைய பாடங்களைச் சுயமாகக் கற்றுக்கொள்வதற்கும் வாசிப்பு சிறந்ததொரு முறையாகும்.

தகவல்கள் தெரிவித்தல், தகவல்கள் திரட்டுதல், மொழிவிருத்தி, பொழுதுபோக்கு, இரசனை, ஆத்மதிருப்தி போன்ற பல்வேறு அம்சங்கள் வாசிப்பதனால் எய்தப்படுகின்றன. எனவே மாணவர்கள் வாசித்தலில் நன்கு பயிற்றப்படல் வேண்டும்.

ஆரம்ப, இடைநிலை மாணவர்களுக்கு வாசித்தலிற் பயிற்சியளிப்பதற்கு வெவ்வேறு அணுகுமுறைகளைக் கையாள்வதோடு, அவர்களுக்கேற்ற வாசிப்புச் சாதனங்களையும், உபகரணங்களையும் அத்துடன் சந்தர்ப்பங்களையும் வழங்குதல் ஆசிரியரின் பணியாகும்.

வாசித்தலின்போது வெவ்வேறு மட்டங்களில் மாணவர்கள் வெவ்வேறு விதமான இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்டு, உரிய குறைநீக்கல் அணுகுமுறைகளையும் கையாண்டு அவர்களின் இடர்ப்பாடுகளைப் போக்குதலும் ஆசிரியரின் பொறுப்பாகும்.

வாசித்தலை விருத்தி செய்தல் மூலம் மாணவரின் கற்றல் திறனை விருத்தி செய்யமுடியும்.

## 6.0 பிற்சோதனை

சுருக்கமான விடைகள் தருக.

01. வாசித்தலின் போது மாணவர்கள் பொதுவாக எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள் இரண்டு கூறுக.

02. உயிர்க்குறிகள் என்றால் என்ன?

03. எழுத்தொலி முறை வாசித்தல் என்பதைச் சுருக்கமாகக் கூறுக.

04. தெரிந்தவிடயங்களை ஞாபகப்படுத்தலுக்காக மேற்கொள்ளப்படும் வாசிப்பு எது?

05. முறைசாரா வாசிப்புச் சாதனங்கள் யாவை?

06. பார்வைப் பிரித்தறிகை என்றால் என்ன?

07. முக்கியமாக வாசிப்பின் மூலமே கற்க வழிநடத்தும் பாடமுறைமை யாது?

08. ஒலி வேறுபாடு - ஒலித்தல் வேறுபாடு இவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் எவை?

09. வாசிப்பின்போது அனுசரிக்க வேண்டிய குறியீடுகளில் 3ஐக் குறிப்பிடுக.

10. முகபாவங்கள் மூலம் சுவையை வெளிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் வாசிப்பு முறை எது?

(உங்கள் விடைகளை அத்தியாயத்தின் இறுதியிலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப்பாருங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7.0 விடைகள்

### முற்சோதனை

01. உரத்த வாசிப்பு
02. மௌனவாசிப்பு
03. எழுத்தொலிகளை இனங்கண்டு, கண்களை நகர்த்தி வாசித்தல்.
04. இடமிருந்து வலமாக நகர்தல்.
05. எழுத்தின் வரிவடிவத்தைக் கூறாது ஒலிவடிவத்தைக் கூட்டி உச்சரித்து வாசித்தல்.
06. உரையாடல்கள், நாடகங்களில் வரும் பாத்திரங்களின் குணாம்சங்கள் புலப்பட வாசித்தல்.
07. சிறுகதை, நாவல், கவிதை போன்றன.
08. ல,ள,ழ ட,ர,ற, ண,ந,ன எழுத்தொலிகளைக் கொண்ட சொற்கள்

### பிற்சோதனை

01. எழுத்தொலிகள், உயிர்மெய்யொலிகள் போன்றவற்றை இனங்காண முடியாமை, நிறுத்தற்குறிகளை அனுசரிக்கலாம்.

02. உயிர்மெய் ஒலிகள் தோன்றுவதற்கான குறியீடுகள்
ா, ி, ீ, ெ, ே போன்றன

03. எழுத்துக்களின் ஒலிகளைக் கூட்டி வாசித்தல்.

04. மேலோட்ட வாசிப்பு.

05. பத்திரிகை, சஞ்சிகைகள், சுவரொட்டிகள் போன்றன.

06. உருவங்கள், வடிவங்கள், எழுத்துக்களின் வேறுபாடுகளை நுணுக்கமாகக் கண்டறிதல்.

07. தொலைக்கல்விப் பாடமுறைமை.

08. ஒலிவேறுபாடு - லளழ, ணநன, ரறட
ஒலித்தல் வேறுபாடு - எடுத்தல், படுத்தல், நலித்தல்.

09. நிறுத்தற்குறி, காற்புள்ளி, அரைப்புள்ளி, வினாவிசைக்குறி, விளிப்பிசைக்குறி போன்றவை.

10. மெய்ப்பாடுகள் தோன்ற வாசித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.0 ஒப்படைகள்

1. வாசிப்பதனால் மாணவர்கள் அடையக்கூடிய பல்வேறு அனுகூலங்களையும் வகைப்படுத்தி அட்டவணையுடன் விளக்குக.

2. வாசிப்பில் மாணவர்கள் எதிர் நோக்கும் இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்திப்பதற்கான வழிவகைகளையும் கூறுக.

3. (அ) பல்வேறு வாசிப்புச் சாதனங்களையும் இனங்கண்டு அவற்றின் வகை தழுவி எடுத்துக்காட்டுக.

   (ஆ) வகுப்பறையில் ஆசிரியர் தயாரித்துக்கொள்ளத்தக்க வாசிப்பு உபகரணங்களை மாதிரிகள் தந்து எடுத்துக்காட்டுக.

## 9.0 கலைச்சொற்கள்

பார்வைப் பிரித்தறிகை
அகராதி
குறைநீக்கப் போதனை
கலைக்களஞ்சியம்

## 10.0 மேலதிக வாசிப்பு நூல்கள்

ஆண்டு - 1 புதிய பாடத்திட்டம் - தே. க. நி. வெளியீடு
வரைவோம், எழுதுவோம், வாசிப்போம் - தே. க. நி. வெளியீடு

| | | |
|---|---|---|
| மொழிப்பாடத்திட்டம் | 1 - 5 | |
| | 6 - 8 | பாடவிதான அபிவிருத்திச் சபை. |
| | 9 - 11 | |

தமிழ் பயிற்றும் முறைகள் - ந. சுப்புரெட்டியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் அத்தியாயம்
# மொழி கற்பித்தற்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மொழி கற்பித்தற்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வளங்கள்**

பொருளடக்கம் பக்கம்


1.0 அறிமுகம் .......... 83

2.0 சிறப்புக் குறிக்கோள்கள் .......... 83

3.0 முற்சோதனை .......... 84

4.0 வகுப்பறைக் கற்பித்தலில் துணைச் சாதனங்கள் .......... 84

4.1 கட்புலச் சாதனங்கள் .......... 85

4.2 செவிப்புலச் சாதனங்கள் .......... 89

4.3 கட்புல-செவிப்புலச் சாதனங்கள் .......... 91

4.4 புறச்சாதனங்கள் .......... 91

5.0 சாராம்சம் .......... 94

6.0 பிற்சோதனை .......... 94

7.0 விடைகள் .......... 95

8.0 ஒப்படைகள் .......... 96

9.0 உசாத்துணை நூல்கள் .......... 96




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.0 அறிமுகம்

மொழியைக் கற்பிப்பதற்கெனப் பாடநூல்கள் ஒவ்வொரு வகுப்பிற்கும் உண்டு என்பது யாவரும் அறிந்தது. இப்பாடநூல்களை மட்டும் கற்பிப்பதால் எதிர்பார்க்கும் அடைவினை மாணவர் அடைந்துவிடுவார்கள் என நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக இந்த நூல்களை மட்டும் கற்பிப்பதால் மாணவர் விரிந்த ஆழமான மொழி அறிவைப் பெறத் தவறி விடுகின்றார்களென்றே கூறுதல் வேண்டும். அப்படியாயின் ஆசிரியர் மாணவரது மொழியறிவை மேலும் அதிகரிக்க யாது செய்ய வேண்டும்? அவர்கள் தமக்குக் கிடைக்கக்கூடிய பல்வேறு வளங்களைப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு பயன்படுத்தக்கூடிய வளங்களை இரண்டாக வகுத்து இவ்வதிகாரத்தில் ஆராய்கின்றோம்.

1. வகுப்பறைக் கற்பித்தற் துணைச் சாதனங்கள்.
2. புறச்சாதனங்கள்.

செவிப்புலச் சாதனங்கள், கட்புலச் சாதனங்கள், செவிப்புல - கட்புலச் சாதனங்கள் என்பன கற்பித்தற் துணைச்சாதனங்களுள் அடங்கும். நூல்நிலையம், மொழி ஆய்வுகூடம், சுவர்ப்பத்திரிகை, கையெழுத்துப் பத்திரிகை, சஞ்சிகைகள், சுற்றுலாக்கள், வெளிக்கள ஆய்வுகள், மன்றங்கள், போட்டிகள் நாடகங்கள் போன்ற இன்னோரன்னவும் புறச் சாதனங்களாகக் கருதப்படும். இவ்விரண்டு வகைச் சாதனங்களையும் தமிழ்மொழி கற்றல்-கற்பித்தலில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் விரிவாக நோக்குவோம்.

## 2.0 சிறப்பு நோக்கங்கள்

1. தமிழ் மொழிப்பாடத்தினைக் கற்பிப்பதற்கு உதவும் துணைச் சாதனங்களை இனம் காணுதல்.

2. அத்துணைச் சாதனங்களை எவ்வெச் சந்தர்ப்பங்களிற் பொருத்தமாகப் பயன்படுத்தலாம் என்பதனை அறிதல்.

3. அவற்றைப் பயன்படுத்தும் போது கவனத்திற் கொள்ளவேண்டிய பிரதான அம்சங்களை அறிந்துகொள்ளல்.

4. பாடசாலை வளம், சூழல் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு பயன்படுத்தக்கூடிய புறச்சாதனங்களை இனம் காணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அப் புறச்சாதனங்களைத் திட்டமிட்டு, நெறிப்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.

6. இச்சாதனங்களைப் பயன்படுத்துவதால் மாணவரிடம் தோற்றும் நடத்தை மாற்றங்களை அறியுந் திறனையும் மதிப்பீடு செய்யும் ஆற்றலையும் பெறுதல்.

## 3.0 முற்சோதனை

இவ்வதிகாரத்தை நீங்கள் மேற்கொண்டு கற்பதற்கு முன்னர் பின்வரும் முற்சோதனை வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள்.

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ' √ ' என்றும் பிழையாயின் ' x ' எனவும் அடையாளமிடுக.

1. கற்பித்தலுக்கு ஒரு படம் அல்லது ஓர் உபகரணம் பல நூறு சொற்களை விடச் சிறந்தது. ( )

2. ஒரு கதையை விட ஓர் அவுன்ஸ் வேலை அதிகமாகும் என்பது செயன்முறைக் கற்பித்தலை வலியுறுத்துகின்றது. ( )

3. மாணவரிடையே அவதானிக்கும் சக்தியை வளர்க்க பரிசோதனைகள் செய்துகாட்டல் பொருத்தமற்றதாகும். ( )

4. கரும்பலகை,வெண்கட்டி, பாடநூல்கள் என்பன பாரம்பரியமான உபகரணங்களாகும். ( )

5. ஆசிரியர் ஒருவரின் சிறந்த கற்பித்தலுக்கு அவர் தாம் கற்பிக்கும் பாடம் பற்றிய முழுமையான அறிவு இருந்தால் போதும்; பாட விதானம் பற்றிய அறிவு தேவையில்லை. ( )

## 4.0 வகுப்பறைக் கற்பித்தற் துணைச் சாதனங்கள்

வகுப்பறைக் கற்பித்தற் துணைச்சாதனங்களை செவிப்புல சாதனங்கள், கட்புலச்சாதனங்கள், செவிப்புலகட்புல சாதனங்கள், பல்லுணர்வுச் சாதனங்கள் என வகைப்படுத்தலாம். வகுப்பறையில் எப்பாடத்தினைக் கற்பிக்கும் போதும் இச் சாதனங்களைப் பயன்படுத்த முடியும். ஆனால் இவ்வதிகாரத்தில் தமிழ் மொழிப் பாடத்தினைக் கற்பிக்கும்போது இச்சாதனங்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதனையே நாம் நோக்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிலே கற்பித்தற் துணைச் சாதனங்களை ஆசிரியர் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியம் என்ன என்பதனைச் சுருக்கமாக நோக்குதல் வேண்டும். ஓர் ஆசிரியன் பாடநூல்கள், கரும்பலகை, வெண்கட்டி முதலியவற்றை மட்டும் வைத்துக்கொண்டு திறம்படக் கற்பித்துவிடக் கூடும். ஆனால் மாணவருக்குக் கற்பிக்கும் விடயம் தொடர்பாக் நேரடி அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை ஓரளவாவது இத்துணைச்சாதனங்கள் வழங்குகின்றன. அனுபவ வாயிலாகக் கற்கும் மாணவன் நல்ல புலக்காட்சி பெறுவதால் விடயம் தொடர்பான சிறந்த விளக்கத்தினைப் பெறுகிறான். துணைச் சாதனங்களாகப் பயன்படுத்துபவை உண்மைப் பொருள்களாக இருப்பதே நல்லது. அவ்வாறு உண்மைப் பொருள்கள் இல்லாவிடின் மாதிரிப் பொருள்களைப் ( Models) பயன்படுத்தலாம். பல சொற்களால் உணர்த்தப்படவேண்டிய ஒரு விடயத்தை ஒரு படத்தின் மூலமோ அட்டவணை மூலமோ வரைபட மூலமோ இலகுவாகவும், தெளிவாகவும் விளக்கிவிட முடியும். மாணவர் கண்டு, கேட்டு உணர்ந்து, சுவைத்துக் கற்றல் முதன்மையான அனுபவத்தைக் கொடுக்கின்றது. இதனாலேயே கற்பித்தல் துணைக் கருவி வகுப்பறைக் கற்பித்தலின்போது சிறந்த பயனைத் தரும் எனக் கூறப்படுகின்றது.

## 4.1 கட்புலச் சாதனங்கள்

கண்ணாற் பார்த்து அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை அளிக்கும் கருவிகளைக் கட்புலச் சாதனங்கள் எனலாம். வர்ணம் தீட்டிய படங்கள், வரைபுகள், கரும்பலகை, வழுக்கிகள் (Slides), அச்சுப் படங்கள், புத்தகங்கள், அட்டவணைகள், கோட்டுப் படங்கள் கேலிச்சித்திரங்கள் போன்றவற்றைக் கட்புலச் சாதனங்கள் எனலாம்.

இவற்றை நாம் கற்பிக்கும் வகுப்புகளைப் பொறுத்துப் பயன்தரக்கூடிய முறையில் பயன்படுத்துதல் வேண்டும். சாதனங்களைப் பயன் படுத்தித்தான் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பொருத்தமற்ற முறையில் அவற்றைக் கையாளக்கூடாது. நாம் ஆரம்பநிலை வகுப்புகளில் மொழி கற்பிக்கும்போது அதிக கட்புல சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாணவரின் பேச்சுத்திறனை விருத்திசெய்யும் நோக்குடன் படங்களைப் பயன்படுத்தி அப்படங்களில் உள்ளவற்றை விளக்கும்படி கேட்கலாம். ஒரு கதையைச் சித்தரிக்கும் படங்களாக இருப்பின் அவற்றைக் காட்டி கதையைக் கூறும்படி கேட்கலாம். உயர் வகுப்புகளில் இத்தகைய படங்களைத் துணைச் சாதனமாக கொண்டு கற்பிக்கவேண்டிய அவசியமில்லை. எழுத்துக்களைத் எழுதப் பழக்கும்போது எழுத்து அட்டைகளைப் பயன்படுத்தி அவற்றைப் பார்த்து எழுதும்படி கூறலாம். எழுத்து அட்டைகளைப் பயன்படுத்தி வாசிப்புத்திறனை வளர்க்கலாம். கரும்பலகையை ஆசிரியர் தமது கற்பித்தலுக்குப் பயன்படுத்துவதோடு ஆரம்பநிலை மாணவர் தாம் விரும்பியவாறு கீறியும் எழுதியும் விளையாடுவதற்கான பதிவான சுவர்க் கரும்பலகைகள் அல்லது பச்சை நிறப் பலகைகள் இருப்பது நல்லது. வெண்கட்டி மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் தம் விருப்பத்துக்கேற்றவாறு நிறக்கட்டிகளையும் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு செய்வதால, சிறிய மாணவர் வகுப்பறையிலே சுறுசுறுப்பாக இயங்குவர். அவர்களது எழுத்துக்கள் உறுப்பாக அமையும் . ஆக்கத்திறனும் விருத்தி அடையும்.

உயர்வகுப்புகளில் மொழி கற்பிக்கும்போது அட்டவணைகள், வழுக்கிப் படங்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், உசாத்துணை நூல்கள் போன்றவற்றையும் துணைச் சாதனங்களாகப் பயன்படுத்தலாம். உதாரணமாக ஆண்டு 7 இற்கு வேற்றுமை பற்றிக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் ஓர் அட்டவணை மூலம் மாணவருக்கு விளக்கம் அளிக்கலாம்.

அட்டவணை

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் | உ-ம் |
|---|---|---|---|---|
| முதலாம் | | என்பவன்<br>ஆனவன்<br>என்பவள் | எழுவாய் | கந்தன் வந்தான். |
| இரண்டாம் | ஐ | | செயப்படு பொருள் | அவன் வீட்டைக் கட்டினான். |
| மூன்றாம் | ஆல்,ஆன்,<br>ஒடு,ஓடு | கொண்டு<br>உடன் | கருவி,கருத்தா<br>உடனிகழ்ச்சி | கயிற்றால் கட்டினான்.<br>ஆசிரியரோடு தம்பி வந்தான். |
| நான்காம் | கு | ஆக,பொருட்டு<br>நிமித்தம் | கோடல்,பகை,<br>நட்புமுறை<br>முதலியன | அருச்சுனனுக்கு நண்பன் கண்ணன். |
| ஐந்தாம் | இல்,இன் | இருந்து,நின்று | நீக்கல்,ஒப்பு<br>எல்லை,ஏது. | மலையின்கீழ் அருவி |
| ஆறாம் | அது,ஆது | உடைய | உடைமை | எனது புத்தகம் |
| ஏழாம் | கண் | | இடம் | வீட்டின் கண் உள்ளது அறை |
| எட்டாம் | - | - | விளா | கண்ணா வா. |

இதேபோன்று ஏனைய இலக்கணப் பகுதிகளுக்கும் இத்தகைய அட்டவணைகளைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல் பாய்ச்சல் வரைபுகளை (Flow Chart) கையாண்டும் கற்பிக்கலாம். உதாரணமாக,
பக்கம்- 79 (ஆண்டு-9)

வகுப்பறையிலே செய்யுள் பகுதிகளையோ உரைநடைப் பகுதிகளையோ கற்பிக்கும்போது முடியுமானவரை உயர் வகுப்புகளில் அகராதிகளைப் பயன்படுத்தும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். அதனைக் கற்றல்-கற்பித்தலுக்கு ஒரு துணைச்சாதனமாகப் பயன்படுத்துதல் அத்தியாவசியமானதாகும். மாணவர் பலர் உயர் வகுப்புகளுக்கு வந்தும் தமிழ் அகராதிகளைப் பயன்படுத்தத் தெரியாது சங்கடப்படுவதை நாம் காண்கிறோம். இந்நிலை மாறவேண்டும். மாணவரது சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கு அகராதிகளைப் பயன்படுத்துதல் துணைபுரியும்.

கலைக்களஞ்சியங்கள் மனிதன் இதுவரை ஈட்டியுள்ள அறிவுச் செல்வத்தின் சாரத்தினை அகரவரிசையிற் சுருக்கமாகக் கூறுவனவாகும். சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள கலைக்களஞ்சியங்கள் உண்டு. இவை பத்துத் தொகுதிகளாக உண்டு. இவற்றைவிட குழந்தைகள் கலைக்களஞ்சியமும் பத்துத்தொகுதிகளாக இருக்கின்றன. பழைய இலக்கியங்கள், இலக்கிய கர்த்தாக்கள், இலக்கிய வடிவங்கள் மொழி .தொடர்பான பல்வேறு விடயங்கள் ப்ற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்வதற்கு இக்கலைக்களஞ்சியங்கள் பெரிதும் உதவும். ஆய்வு நோக்கில் கட்டுரைகள் எழுத முற்படுவோருக்கும் இக்கலைக்களஞ்சியங்கள் பெரிதும் உதவும். பாடசாலை நூலகங்களில் இக்கலைக்களஞ்சியங்கள் ஒரு சிலவாவது இருப்பதால், வகுப்பறைக் கற்பித்தலில் அவற்றையும் துணைச் சாதனங்களாகப் பயன்படுத்துவது சிறந்த பயனைத் தரும்.

மொழியாசிரியர் தாம் கற்பிக்கும் விடயம் தொடர்பாக வெளிவந்துள்ள பத்திரிகைச் செய்திகள், சஞ்சிகைகள், நூல்கள், உருவப் படங்கள் முதலியவற்றைத் துணைச்சாதனங்களாகப் பயன்படுத்துதல் முடியும். உதாரரணமாக, திருக்குறளின் அன்புடைமை, புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரங்களை ஆசிரியர் கற்பிப்பதாக எடுத்துக்கொண்டால் அவர் திருக்குறள் நூல் ஒன்றினை மாணவருக்கு வகுப்பறையிலே காட்டலாம். திருவள்ளுவரின் உருவப்படத்தைக் காட்டலாம். திருவள்ளுவர் பற்றி எழுதப்பட்டட ஒரு சில நூல்களைக் காட்டலாம். இதனால் மாணவர் ஆசிரியர் கற்பிக்கப் போகும் விடயம் தொடர்பாகத் தெளிவான விளக்கத்தைப் பெற வாய்ப்பேற்படுகின்றது. மொழிகற்பிக்கும் ஆசிரியரது பிரதான கடமை தாம் கற்பிக்கும் விடியம் தொடர்பான பிற உசாத்துணைகளைத் தாம் தேடி மாணவருக்குக் கூடியவரை வழங்குதல் ஆகும். அது முடியாத பட்சத்தில் அவை எங்கு உண்டு என்றாவது ஆற்றுப்படுத்தும் அளவிற்கு அவருக்கு விரிந்த பரந்த அறிவு இருத்தல் அவசியமாகும். கட்டுரை, கடிதம், அறிக்கை, விளம்பரம், சிறுகதை எழுதக் கற்பிக்கும்போது மாதிரிகளைத் தாமே தேடி அவற்றைத் துணைச்சாதனங்களாகக் கொண்டு வகுப்பறையில் வாசித்துக் காட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனுடையதாகும். உதாரணமாக வருணனைக் கட்டுரை எவ்வாறு எழுத வேண்டுமென்பதை விளக்கும் ஆசிரியர் பாரதியார் 'மாலைக்காட்சி' பற்றி எழுதிய வருணனைக் கட்டுரையை வகுப்பறையில் வாசித்துக்காட்டி வழிகாட்டலாம். சிறுகதையின் ஆரம்பம் விறுவிறுப்பாகவும் சுவையாகவும் இருக்கவேண்டுமென்று ஆசிரியர் கூறிவிட்டால் மட்டும் போதாது. மாதிரிக்கு அவ்வாறு விறுவிறுப்பாகத் தொடங்கும் ஒரு சிறுகதையின் ஆரம்பப் பகுதியை வாசித்துக்காட்டும்போது மாணவர் கூடிய விளக்கத்தினைப் பெறுவர். அவ்வாறான சிறுகதைகள் மாணவரைக் கொண்டு வாசிக்கச் செய்வதால் அவர்கள் சிறுகதை எழுதும் ஆற்றலைப் பெற்றுவிடுவர் எனலாம். மாணவர் நேரடி அனுபவத்தைப் பெறவேண்டுமாயின் அவர்களது கற்றலுக்குத் தேவையான சகல உபகரணங்களையும் ஆசிரியர் தேடிக் கொடுக்க முயற்சித்தல் நல்லது. சிலவற்றை மாணவரைக் கொண்டே திரட்டிக் கொள்ளலாம்.

அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் மட்டுமன்றி கலைச்சொற்றொகுதிகளைக் கூடச் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு மொழி கற்பிக்கும் ஆசிரியர் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும். மாணவரையும் அவற்றைப் பயன்படுத்த வழிப்படுத்தல் அவசியம். கலைச்சொற்றொகுதிகள் பல கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீடுகளாகவும், பிற வெளியீடுகளாகவும் வெளிவந்துள்ளன. மொழி ஆசிரியர் மட்டுமன்றி ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கூட இவற்றைப் பயன்படுத்தலின் அவசியத்தினை வலியுறுத்த வேண்டியது மொழி ஆசிரியர் ஒருவரின் கடமையாகும்.

மொழி கற்பிக்கும் ஆசிரியர் விளம்பரப் பலகையை ஒரு கற்பித்தல் துணைச் சாதனமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அறிவுரைகள், நற்சிந்தனைகள், செய்திகள், சிறு கதைகள், கட்டுரைகள் முதலானவற்றை விளம்பரப் பலகையில் பொருத்தி வைத்துக் காட்டுவதன் மூலம் மாணவரது மொழியறிவை மேலும் விருத்தியடையச் செய்யலாம். ஆனால் இவ்வாறு விளம்பரப் பலகையில் பொருத்தி வைக்கப்படும் விடயங்கள் காலத்திற்குக் காலம் மாற்றப்படுதல் அவசியம். இவ்வாறு செய்வதால் மாணவர் புதுப்புது விடயங்களை மாணவர் ஆர்வத்துடன் வாசிக்கத் தூண்டலாம்.

இத்தகைய விளம்பரப் பலகையில் கம்பளித் துணியைப் பொருத்திப் பயன்படுத்தலாம். இதனைக் கம்பளிப் பலகை என அழைப்பர். மாணவருக்குக் காட்சிக்கு வைக்கவேண்டிய விடயங்களை இக்கம்பளிப் பலகையில் ஊசிகளைப் பயன்படுத்தப் பொருத்தி வைக்கலாம். ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளுக்குப் பேச்சு, வாசிப்பு எழுத்து போன்ற மொழித்திறன்களைக் கற்பிக்கும்போது இத்தகைய கம்பளிப் பலகையிலே சொல்லட்டைகள், படங்கள், சித்திரங்கள் முதலியவற்றைப் பொருத்தி இலகுவில் கவர்ச்சிகரமாகக் கற்பிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறநாடுகளில் சொல்வளப் பயிற்சிக்கு காந்தப்பலகை, மின்னட்டைகள் போன்றவற்றை அதிகம் பயன்படுத்துகின்றனர். மிருகங்கள், பறவைகள், வாகனங்கள், தொடர்பான தட்டை உருவகங்களைக் காந்த சக்தியினால் பலகைகளில் ஒட்டச்செய்து பேச்சு, வாசிப்பு, எழுத்து போன்ற பயிற்சியை குறிப்பாக ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை கற்கும் மாணவருக்குக் கற்பிக்கலாம். அதேபோன்றே பயிற்சி, வசனப் பயிற்சி முதலியன அளிப்பதற்கு மின்னட்டைகளை மொழியாசிரியர் பயன்படுத்தலாம் இத்தகைய மின்னட்டையின் இரு பக்கங்களிலும் சொற்கள் எழுதப்பட்டிருக்கும். ஆனால் எமது பாடசாலைகளிற் காணப்படும் குறைவான வளங்கள் காரணமாக இவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையுண்டு.

இதேபோன்றே புறத்தெறி கருவிகள் (Projectors) படச்சுருள்கள், வழுக்கிகள் முதலியனகூட ஒரு சில வசதிபடைத்த பாடசாலைகளிலேயே காணப்படுகின்றன. இவை மொழியாசிரியருக்கும் பயன்படக்கூடியனவே. பிறநாடுகளில் வில்லியம் ஷேக்ஸ்பியர், இயற்றிய நாடகங்கள் மற்றும் பிரபல்யமான கதைகள் படச் சுருள்களாக இருப்பதால் அவற்றைப் பார்க்கக்கூடிய வாய்ப்பும் வசதிகளும் பிறநாட்டுப் பிள்ளைகட்கு உண்டு. இதேபோன்று தமிழில் உள்ள காவியங்களும் கதைகளும் படச் சுருள்களாக்கப்பட்டுக் காண்பிக்கப்படின் நல்ல பயனைத் தருமல்லவா?

## 4.2 செவிப்புல சாதனங்கள்

வானொலி, ஒலிப்பதிவுக் கருவிகள், ஒலிப்பதிவு நாடாக்கள், ஒலித்தட்டுக்கள் போன்றன செவிப்புல சாதனங்களாகும். இவற்றை எல்லாப் பாடங்களையும் கற்பிக்கத் துணைச்சாதனங்களாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனினும் இங்கு மொழி ஆசிரியருக்கு இவற்றின் பயன்பாடு பற்றி ஆராயவேண்டியுள்ளது.

முதலில் வானொலியை மொழி விருத்திக்காக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனை நோக்குதல் வேண்டும். வானொலியில் ஒலிபரப்பப்படும் 'கல்வி ஒலிபரப்பு' 'சிறுவர் மலர்' போன்ற நிகழ்ச்சிகள் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவன. வானொலியில் இடம்பெறும் மாணவருக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளை அவர்கள் கேட்டுத் தூண்டவேண்டும். நாடகங்கள்,உரையாடல்கள்,சிறுகதை கூறல், கவிதை அரங்குகள், நாட்டார் பாடல்கள், விமர்சனங்கள், செய்திகள் முதலானவற்றை அவர்கள் கேட்டுத் தூண்டுதல் அளித்தல் வேண்டும் மாணவர் விரும்பிக் கேட்கும் நிகழ்ச்சிகள் பற்றி அவர்களுடன் கலந்துரையாடி அவர்களை வழிப்படுத்துவதன் மூலம் நல்ல பல நிகழ்ச்சிகளைக் கேட்கத் தூண்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி ஒலிபரப்பின்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அனுப்பப்படும் நேரசூசி, கையேடு முதலியவற்றிற்கமைய நிகழ்ச்சிகள் வகுப்பறையில் கேட்டதன் பின்னரும் அதுபற்றி ஆசிரியர் மாணவருடன் கலந்துரையாடல் வேண்டும்.

அத்துடன் வானொலி நிகழ்ச்சிகளிற் பங்குபற்றுவதற்குக் களம் அமைத்துக் கொடுப்பதும் மொழியாசியர் ஒருவரின் கடனாகும். கதை கூறல், பாடுதல், நாடகம் நடித்தல்,கட்டுரைகள் எழுதுதல் முதலான பல்வேறு துறைகளிலும் வானொலியில் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மூலம் மாணவருடைய ஆக்கத்திறனை விருத்திசெய்வதற்கு உதவலாம்.

சுருங்கக்கூறின், வானொலி நிகழ்ச்சிகளை மொழியாசிரியர் தமது கற்பித்தல் பணிக்குத் துணையாகக் பயன்படுத்துவதன் மூலம் பின்வரும் குறிக்கோள்களை அடைய முடியும்.

1. மாணவரது பொது அறிவினை விருத்தி செய்துகொள்ளல்.

2. மொழித்திறன்களையும் ஆக்கத்திறன்களையும் விருத்திசெய்து கொள்ளல்

3. வீட்டிலும் வானொலியைப் பயன்தருவகையில் பயன்படுத்தக் கொள்ள ஊக்குவித்தல்.

வகுப்பறைக் கற்பித்தலைப் பொறுத்தவரையில் ஒலிப்பதிவுகளும் ஒலித்தட்டுக்களும் மிகுந்த பயனைத் தரவல்லன. வானொலி நிகழ்ச்சிகள் சில சந்தர்ப்பங்களில் பாடசாலை நேரசூசியோடு முரண்படும் வேளைகளில் ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவுசெய்து வைத்து வானொலி நிகழ்ச்சிகளை விரும்பிய நேரத்தில் இடத்தில் மீண்டும் மீண்டும் கேட்டுப் பயன்பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. தமிழ் மொழிப் பாடத்தோடு தொடர்பான பாடல்கள், கதைகள், பேச்சுக்கள், நாடகங்கள் முதலியவற்றை ஒலிபரப்பு செய்து வகுப்பறையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

அப்படிச் செய்வதால் மாணவர் சலிப்பின்றிப் பாடங்களில் முழுமையாக விருப்பத்தோடு ஈடுபடுவர்., மொழியாசிரியருக்குப் பாடல்களைப் பாடக்கூடிய் குரல் வளம் இல்லாத சநதர்ப்பங்களில் குரல்வளம் மிக்க ஆசிரியரின் உதவியைப் பெற்றுப் பாடல்களை ஒலிப்பதிவு செய்து வகுப்பறைகளிற் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆரம்ப வகுப்பு மாணவருக்குச் சரியான உச்சரிப்புக்களைப் பயிற்றுவதற்கும் ஒலிப்பதிவு நாடாக்களைப் பயன்படுத்தலாம். இதேபோன்ற ஆசிரியரின் தேவைகளுக்கேற்ப இச்சாதனங்களை மொழியாசிரியர் உபயோகிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 கட்புல- செவிப்புல சாதனங்கள்

கட்புலன் செவிப்புலன் இரண்டினையும் பயன்படுத்திக் கற்க உதவும் சாதனங்களைக் கட்புல - செவிப்புல சாதனங்களாகக் கொள்ளலாம். திரைப்படங்கள், தொலைக்காட்சி முதலியன கட்புல - செவிப்புல சாதனங்களாகும். வானொலியைப் போன்று தொலைக்காட்சியையும் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம். கல்வி நிகழ்ச்சிகள் சில தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படுவதை நீங்கள் அறிவீர்கள். தொலைக்காட்சியிலும் திரைப்படங்களிலும் மாணவர் தாம் இயல்பாக எளிதிலே காணமுடியாத பலவற்றைக் காணக்கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. ஓரளவு நேரடியான அனுபவத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் தொலைக்காட்சி, திரைப்படங்கள் வாயிலாகக் கிடைக்கின்றது. ஆங்கில மொழி விருத்திக்காகப் பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்புவதை நீங்கள் அறிவீர்கள். இதேபோன்று தொலைக்காட்சியிலும் மொழி சார்பான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்புவது மிகப் பயனுள்ளதாகும். மகாபாரதம், இராமாயணம்,மற்றும் புராணக்கதைகள் முதலியவற்றைப் பாடமாக்கி ஒலிபரப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படின் சிறந்த பலனைத் தரும். மொழி விருத்திக்கு உதவக்கூடிய வகையில் நாடகங்கள், உரையாடல்கள், கவிதை அரங்குகள் முதலியவை தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்படுவது சிறந்த பயனைத் தரும். தொலைக்காட்சியைப் பயன்படுத்தி மொழியாசிரியருக்கு மொழியைக் கற்பிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய நல்ல கற்பித்தல் முறைகள் பற்றி விளக்கம் அளிக்கலாம். இளஞ்சிறார்கள் தொலைக்காட்சி கல்விசார் நிகழ்ச்சிகளிற் பங்குபற்றுவதற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் எமது கடமையாகும்.

இதுவரை குறிப்பிட்ட துணைச்சாதனங்களை மிகவும் அவதானத்துடன் வகுப்பறையிற் பயன்படுத்த வேண்டியது மொழி கற்பிக்கும் ஆசிரியர் மட்டுமன்றி ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களது கடமையுமாகும். வலிந்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் தவறானதாகும். குறித்த பாடத்தை மேலும் தெளிவாக விளக்க ஓர் உபகரணம் பயன்படுமாயின் அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு ஆசிரியர் முற்கூட்டியே திட்டமிடுதல் இன்றியமையாததாகும்.

## 4.4 புறச்சாதனங்கள்

தமிழ்மொழி கற்பித்தலில் இதுவரை குறிப்பிடப்பட்ட துணைச்சாதனங்கள் மட்டுமன்றி வேறு பிற சாதனங்களும் பயன்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளல் அவசியம்- நூலகங்கள், தமிழ்மொழி ஆய்வுகூடம், நேரடித் தரிசனம், கல்விச் சுற்றுலாக்கள், வெளிக்கள ஆய்வுகள், மன்றங்கள், விவாத அரங்குகள், கவியரங்குகள், நாடகங்கள்,போட்டிகள், விளையாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதானம் சகலதும் புறச்சாதனங்களுள் அடங்குவனவாகும்.
இனி, இவை ஒவ்வொன்றையும் தனித்தனி நோக்குவோம். மாணவர்கள் தமது மொழி அறிவை விருத்திசெய்துகொள்வதற்கும் பொது அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கும் பொருத்தமான இடம் நூலகமாகும். அவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்துவதற்கு மொழி ஆசிரியர்களுக்கும் பிற ஆசிரியர்களுக்கும் வேண்டிய வழிகாட்டலைச் செய்தல் வேண்டும். இலங்கையில் பெரும்பாலான பாடசாலைகளில் சிறிய அளவிலான நூலகங்கள் உண்டு. வகுப்பறை நூலகங்கள் உள்ள பாடசாலைகளும் உள. நகரப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் உள்ளூராட்சி மன்றங்களினாலும் சமூக நிலையங்களினாலும் நடாத்தப்படும் பொது நூலங்களும் உள. நல்ல முறையில் அமைந்த நூலகத்திற் பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல்கள் பாடநூல்கள், பருவ வெளியீடுகள், அறிக்கைகள்,கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், ஒலிப்பதிவுத் தட்டுக்கள் முதலியன உண்டு. பெரும்பாலான நூலகங்களில் நூல்கள் யாவும் "தூய தசம முறை" என்று அழைக்கப்படுகின்ற முறைப்படி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. தத்துவம், சமயம், சமூகவியல், மொழியியல், விஞ்ஞானம், கலைகள், இலக்கியம், வரலாறு என்று நூல்கள் பகுக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

நூலகத்தில் நூல்கள் பற்றிய தகவல்களை அறிவதற்கு மிக முக்கியமாக உதவுவது விவரணப் பட்டியலாகும். நூலகத்தில் உள்ள நூல்களைப் பயன்படுத்தும் முறை பற்றி ஆசிரியர் மாணவருக்கு விளக்குவதோடு நூலகத்திற்கு அழைத்துச் சென்று நூல்களைத் தெரிவுசெய்யும் முறை பற்றி எடுத்துக் கூறுதல் வேண்டும்.

தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தாம் கற்பிக்கும் வெவ்வேறு பாடப்பகுதிகள் தொடர்பாக வாசிக்கக்கூடிய எத்தகைய நூல்கள் நூலகத்தில் இருக்கின்றன என்பதைத் தெரிந்திருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் மாணவருக்கு அவற்றை எடுத்துக்கூற முடியும். மொழியாசிரியர் வகுப்பறை நூலகத்தை நடத்துவதற்கு ஒழுங்குசெய்யலாம். மாணவருடைய வகுப்பு, வயது முதிர்ச்சிக்குப் பொருத்தமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கொண்ட நூல்களை வாங்கிக் கொடுக்கலாம்.

சிறு வயதிலிருந்தே மாணவரிடையே வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதற்கு வகுப்பறை நூலகங்கள் பெரிதும் துணைசெய்யும்.

வசதிபடைத்த சில நாடுகளில் 'மொழி ஆய்வு கூடங்கள்' **(Language Laboratories)** உண்டு. இவ்வாய்வு கூடங்களில் மாணவர் [illegible]மாக மொழியைக் கற்றுக்கொள்ளக்கூடிய சகல வசதிகளும் இருக்கும். நூல்கள், ஒலிபரப்புக் கருவிகள், ஒலிப்பதிவு நாடாக்கள், படதெறிகருவிகள், ஒலித்தட்டுகள், வானொலி,தொலைக்காட்சி, வீடியோ நாடாக்கள், புகைப்படங்கள் முதலியன இருக்கும். இவற்றைப் பயன்படுத்தி மொழியறிவை விருத்திசெய்துகொள்ள முடியும். பிற நாடுகளில் ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கு இத்தகைய ஆய்வுகூடங்கள் காணப்படுகின்றன. இலங்கையிலும் இவ்வாய்வு கூடங்கள் அமைக்கப்படின் பயனுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி ஆசிரியர் வகுப்பில் கையெழுத்துப் பத்திரிகைகளை/ சுவர்ப் பத்திரிகைகளை மாணவரைக் கொண்டு ஆரம்பிக்கலாம். மாணவரைக் குழுக்களாகப் பிரித்து கையெழுத்துப் பத்திரிகையை அல்லது சுவர்ப் பத்திரிகைகளை நடத்துவதற்குரிய வெவ்வேறு பணிகளைப் பகிர்ந்து கொடுக்கலாம். இப்பத்திரிகைகள் மாதத்திற்கு ஒரு முறையோ தவணைக்கொரு முறையோ வெளியிடப்படலாம். மாணவரது ஆக்கங்கள் இப்பத்திரிகைகளில் இடம்பெறும். இவ்வாறு அவர்கள் தம் ஆக்கங்களை மற்றவரும் வாசிப்பதற்கு இத்தகைய பத்திரிகைகள் களம் அமைத்துக்கொடுக்கின்றன. மாணவரது எழுத்தாக்கத்திறன் இதனால் விருத்தியடைவதோடு ஒரு செயற்றிட்டத்தைக் கூட்டாகச் சேர்ந்து நிறைவுசெய்யும் அனுபவத்தையும் தலைமைப் பண்பையும் பெற்றுக் கொள்கின்றனர்.

பாடசாலைகளில் இயங்கிவரும் வெவ்வேறு மாணவர் மன்றங்கள் மாணவர் அனைவரும் வேறுபாடின்றிப் பங்குபெற வாய்ப்பளிக்கும் சங்கங்களாக விளங்குகின்றன. இச்சங்கங்களை வழிநடத்துவது ஆசிரியரது கடமை எனினும் பெரும் பொறுப்பை மாணவரே கொண்டுள்ளனர். பாடசாலைகளில் விஞ்ஞானம், சமூகவியல், இலக்கியம், சமயம் போன்ற தனித்தனிப் பாடல்களுக்குக் கழகங்கள் உண்டு. மாணவரது மொழி அறிவையும் ஆக்கத்திறனையும் விருத்திசெய்வதற்கு இலக்கிய மன்றங்கள் பெரிதும் உதவுகின்றன. அதாவது தகுந்த வாய்ப்புக்களைப் பெறாது மாணவருள் உறங்கியிருக்கும் ஆக்கத் திறன்களின் வெளிப்பாடு இவ்விலக்கிய மன்றத்தின் மூலம் சாத்தியமாகும். இம்மன்றங்களிலே பேச்சு, கவியரங்கு, நாடகம், சிறுகதை கூறுதல், உரையாடல், விவாத அரங்கு முதலிய பல்வேறு அம்சங்களும் இடம்பெறலாம். பாடசாலை மட்டத்திலே தமிழ்மொழித் தினப் போட்டிகள், நாடகப் போட்டிகள், பேச்சுப்போட்டிகள், குறுக்கெழுத்துப் போட்டிகள், இசைப் போட்டிகள் முதலியவற்றை நடத்தலாம். சுற்றுலாக்கள், வெளிக்கள ஆய்வுகள், செய்யப்படலாம். இத்தகைய மன்றங்கள் சரிவர இயங்குவதற்கு மொழியாசிரியரின் வழிகாட்டல் அவசியம். மாணவரை ஊக்குவித்தல், பெற்றோரின் உதவியைப் பெறுதல், மாணவரை ஒன்றிணைத்துச் செயற்படுதல் ஆசிரியரின் கடமையாகும்.

**செயற்பாடு:**

நீர் மொழி கற்பிக்கும் வகுப்புக்குப் பொருத்தமான 5 உபகரணங்களைத் தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 சாராம்சம்

மொழி கற்பிப்பதற்குரிய வளங்களை இரண்டாக வகுக்கலாம். வகுப்பறைக் கற்பித்தற் சாதனங்கள், புறச்சாதனங்கள்.

வகுப்பறைக் கற்பித்தற் சாதனங்கள் கட்புலச் சாதனங்கள், செவிப்புலச் சாதனங்கள், கட்புலசெவிப்புலச் சாதனங்கள்.

இச் சாதனங்கள் யாவும் வகுப்பறைக் கற்பித்தலின்போது எந்தவொரு பாடத்திற்கும் பயன்படுத்தக்கூடிய போதிலும் மொழிகற்பிப்தற்கு அவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றி மொழியாசிரியர் அறிந்திருத்தல் வேண்டும்.

மொழியறிவை மாணவரிடையே புகுத்த, தமிழ்மொழி ஆய்வுகூடம், கல்விச் சுற்றுலாக்கள், நேரடித்ததரிசனம், வெளிக்கள ஆய்வுகள் மாணவர் மன்றங்கள், விவாத அரங்குகள், நாடகங்கள் போன்றன பெரிதும் உதவும்.

இத்தகைய வளங்களை மாணவருடைய முதிர்ச்சி, அறிவுமட்டம், தேவை என்பனவற்றை உணர்ந்து பயன்படுத்திக் கொள்ளல் பயன்தரும்.

குறிப்பிட்ட உபகரணங்கள் சிலவற்றை ஆசிரியர் தாமே தயாரித்துக் கொள்ளும் ஆற்றல் வேண்டும்.

அவற்றைச் செய்யும்போது மாணவரும் ஈடுபடுதல் இன்றியமை யாததாகும்.

## 6.0 பிற்சேதனை

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. வகுப்பறைக் கற்பித்தலின்போது துணைச் சாதனங்களைப் பயன்படுத் துவதால்,
   - (1) மாணவர் கற்றலில் அக்கறை செலுத்துவர்.
   - (2) மாணவர் தாம் கற்கும் விடயம் பற்றிய தெளிவான அறிவைப் பெறுவர்.
   - (3) துணைச்சாதனங்களைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவர்.
   - (4) மாணவர் மொழித்திறன்கள் அதிகரிக்கப் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மொழிகற்பித்தலில் கற்பித்தற் சாதனங்கள் அதிகம் பயன்படுத்த வேண்டியது.

(1) ஆரம்பநிலை வகுப்புகளிலாகும்.
(2) இடைநிலை வகுப்புகளிலாகும்.
(3) சிரேட்ட இடைநிலை வகுப்புகளிலாகும்.
(4) உயர்நிலை வகுப்புகளிலாகும்.

3. கற்பித்தற் துணைச்சாதனங்களில் மிகவும் பயன்தரக்கூடியன.

(1) மாதிரி உருக்கள்.
(2) வழுக்கிகள்
(3) உண்மைப் பொருள்கள்
(4) கரும்பலகை

4. மாணவரது சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்குப் பாடநூல்களோடு பயன்படுத்தக் கூடியது.

(1) கலைக்களஞ்சியம்
(2) உசாத்துணை நூல்
(3) இலக்கிய நூல்
(4) அகராதி

5. நூலகங்களில் நூல்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் முறை.

(1) தூய தசம முறையாகும்.
(2) விவரணப்பட்டியல் முறையாகும்.
(3) நூற்றொகுப்பு முறையாகும்.
(4) பகுப்பு முறையாகும்.

## 7.0 விடைகள்

**முற்சோதனை**

(1) √
(2) √
(3) x
(4) √
(5) x

**பிற்சோதனை**

1. (2)
2. (1)
3. (3)
4. (4)
5. (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8.0 ஒப்படைகள்

(1) நீர் கற்பிக்கும் பாடத்துடன் தொடர்பான வானொலியில் ஒலிபரப்பப்படும் கல்வி நிகழ்ச்சியை மாணவரின் கற்றலுக்கு எவ்வாறு பயன்படுத்துவீர் என விளக்குக.

(2) தமிழ்மொழிப் பாடத்தின் எவையேனும் மூன்று அலகுகளைத் தெரிவுசெய்து அவற்றைக் கற்பிக்க எத்தகைய உபகரணங்களைக் கையாளுவீர் என விபரிக்குக.

(3) மாணவரிடையே மொழிவளத்தினையும் மொழி ஆர்வத்தையும் வளர்க்க நூலகத்தினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை ஆராய்க.

(4) பின்வருவனவற்றை மாணவரின் மொழி விருத்திக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றி விளக்குக.

(அ) கல்விச் சுற்றுலாக்கள்

(ஆ) மாணவர் இலக்கிய மன்றங்கள்

(இ) வகுப்பு சுவர்ப்பத்திரிகைகள்.

(5) ஆரம்பநிலை வகுப்புகளில் மொழி கற்பிக்கும்போது எத்தகைய உபகரணங்களை எந்நோக்கங்களுக்காகக் கையாளலாம் என்பது பற்றி விளக்குக.

## 9.0 உசாத்துணை நூல்கள்


(1) வகுப்பறைக் கற்பித்தல் - வ. அறுமுகம்.
செட்டியார் அச்சகம்,
யாழ்ப்பாணம். 1989

(2) இரண்டாம் மூன்றாம் தரப் பாடசாலைகளுக்கான அதிபர் கைந்நூல்.
திட்டமிடல் முகாமைத்துவ அபிவிருத்திப் பிரிவு,
கல்வி அமைச்சு, பத்தரமுல்லை. 19896.

(3) தமிழ் பயிற்றும் முறைகள்- சுப்புரெட்டியார்., ந
சென்னை, 1963.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by

AJ PRINTS

No. 1B, P.T. De SilvaMawatha, Dehiwala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org